# TAMIL PULAVAR ARUVAR

BY

Vidwan Palur Kannappa Mudaliar,

Publishers:

VENKATRAMA & CO

ESPLANADE MADRAS-1

Price Re. 1—0—0.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.


தமிழ்ப் புலவர்
அறுவர்
வேங்கடராமா அண்டு கோ
மதராஸ்

# தமிழ்ப் புலவர் அறுவர்

எழுதியவர்:

**வித்துவான் பாலூர், கண்ணப்ப முதலியார்**

துணைத் தமிழ் விரிவுரையாளர்

புதுக் கல்லூரி

இராயப்பேட்டை, சென்னை.

வெளியிடுபவர்:

**வேங்கடராமா அண்டு கம்பெனி,**

ஆண்டர்சன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

உரிமை பதிவு செய்யப்பட்டது

1953

விலை ஒரு ரூபாய்

First Edition 1953

Printed at the Rajan Electric Press, Madras—1.

# முன்னுரை

இங்குக் கூறப்பட்ட புலவர்கள் கதைகள் யாவும் ஒரு கோவையாக எழுதப் பட்டவையல்ல. அப் புலவர்களைப் பற்றித் தமிழ் நாட்டில் கூறப்பட்டுவரும் கர்ணபரம்பரைச் செய்திகளைக் கொண்டும், தனிப்பாடல் திரட்டு, தமிழ் நாவலர் சரிதை, முதலிய நூற்களில் காணப்படும் பாடல் களின் குறிப்புக்களைக் கொண்டும் எழுதப்பட்டவை. ஆனால், சேக்கிழார் வரலாறு மட்டும் சேக்கிழார் புராணம் என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது.

உயர் நிலைப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர் கட்கு அமையும் செய்யுட் பகுதிகளில் பெரும்பாலும் இங்கு எடுத்து எழுதப்பட்ட புலவர்களின் பாடல்கள் பாடமாக வருவதனால், அப் பாடல்களைப் பாடிய புலவர் பெருமக்களின் வரலாறுகளை விரிந்த அளவில் மாணவர் கள் உணர்தல் நன்மை பயக்கும் என்ற குறிக்கோளுடன் இந்நூல் எழுதப்பட்டது.

ஔவையார் தமிழ் நாட்டில் எவராலும் போற்றப் பட்ட பெருமை யுடையவர். ஆதலின், அவர் வரலாறு முன்பும், ஒட்டக் கூத்தர் விக்கிரம சோழன் காலத்தவர் ஆதலின், ஔவையாருக்குப் பின்னும், சேக்கிழார், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் ஆதலின், ஒட்டக் கூத்தருக்குப் பிறகும், கச்சியப்பர் கம்பருக்கு முன் இருந்தவர் என்று சிலரால் கருதப்படுதலால், சேக்கிழார் பெருமானுக்குப்பின்பும், கம்பர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர் என்று கருதப்படுதலின், கச்சியப்பருக்குப் பின்பும், புகழேந்தியார், கம்பர் காலத்தவராகச் சிலர் கருதுதலின், கம்பருக்குப் பின்பும் அமைய, இங்கு எழுதப் பட்ட புலவர்கள் வரலாறுகள் எழுதப்பட்டன.

| | |
|---|---|
| "அம்மை அப்பர் அகம்"<br>77. அவதானம் பாப்பையர்வீதி<br>சூளை, சென்னை. | இங்ஙனம்<br>**பா. து. க.** |

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஔவையார் ... ... | 1 |
| 2. | ஒட்டக் கூத்தர் ... ... | 28 |
| 3. | சேக்கிழார் ... ... | 42 |
| 4. | கச்சியப்பர் ... ... | 57 |
| 5. | கம்பர் ... ... | 69 |
| 6. | புகழேந்திப் புலவர் ... ... | 88 |

# தமிழ்ப் புலவர் அறுவர்

---

## 1. ஔவையார்

### தோற்றுவாய்

ஔவையாரைப்பற்றித் தமிழ் நாட்டில் அறியாதவர்கள் எவரும் இலர். இளையர் முதல் முதியர் வரையிலும், ஔவையாரை அறிவர். ஆனால், அவ்வம்மையாருடைய வரலாறு—ஏன் தமிழ் நாட்டில் வாழ்ந்த சிறந்த புலவர்களின் வரலாறுகள்-முறையாக, ஒழுங்காக அறிவதற்கு இல்லை.

ஔவையார் கலைமகள் அவதாரமே என்பர். ஔவையார் அவதரித்த வரலாற்றைச் சிவபெருமான், பார்வதிக்குச் சொல்லினர் என்பர். பாண்டிய நாட்டில் மதுரைமாநகரிலிருந்த புலவர்கள் செருக்குற்றிருந்தனர். ஆகையால், அவர்களை அடக்க எண்ணிய சிவபெருமான் பிரமனைத் திருவள்ளுவராகவும், விஷ்ணுவை இடைக்காடராகவும், கலைமகளை ஔவையாராகவும் பூவுலகில் பிறக்கும்படி கட்டளையிட்டனர் என்ப.

புலவர்களைப்பற்றிய வரலாறுகளை அவர்களைக் குறித்துக் கூறப்பட்டுவரும் கர்ணபரம்பரைச் செய்திகளாலும், அவர்கள் அவ்வப்பொழுது பாடிய பாடல்களின் குறிப்புக்களினாலும் ஒருவாறு அறிகிறோம். அந்த முறையிலே இங்கு ஔவையார் வரலாறு கூறப்படுகிறது.

## பிறப்பும் வளர்ப்பும்

பிரமா ஒருகால் யாகஞ் செய்யும்போது கும்பத்தினின்றும் கலைமகள் அவதரித்தாள். அவளைப் பிரமாவே மணந்து கொண்டார். பிறகு அகத்தியர் அக்கும்பத்திலிருந்து தோன்றினர். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ்சாகரரைப் பெற்றார். பெருஞ்சாகரர் திருவாரூர்ப் புலைச்சி ஒருத்தியை மணந்து **பகவன்** என்பவனைப்பெற்று அவனுக்குச் சகல சாத்திரங்களும் பயில்வித்தார்.

அந்நாளில் தவமுனி என்பாரும் அருண்மங்கை என்பாளும் தாங்கள் பெற்ற பெண் குழந்தையை விட்டு விட்டு விராலி மலைக்குச் சென்றுவிட்டனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் எடுத்து வளர்த்து வந்தான். அப்போது அச்சேரியில் மண்மாரி பெய்ய, அப்பெண் குழவியைத் தவிர எல்லோரும் மாண்டனர். [illegible] அகரத்திலிருந்த **நீதியையன்** [illegible] வளர்த்து வந்தான்.

[illegible] யாத்திரை செய்யப் புறப்பட்[illegible] உறையூர் அகரத்திலிருந்த [illegible] வந்து தங்கினான். அங்கு நீதி[illegible] வளர்த்து [illegible], அவளைப் புலைச்சி என்[illegible] [illegible] அவள் தலையில் [illegible]

[illegible] என்று திரும்பி அச்சத்திரத்தி[illegible] வந்து தங்கினான். அப்போது அப்பெண் மங்கைப் பருவ[illegible] அழகுடன் விளங்கினாள். பகவன் அவளை மணக்க விரும்பி, நீதியையன் சம்மதம் பெற்று மணந்துகொண்டான். மணம் முடிந்த ஐந்தாம் நாள் [illegible] தன் மனைவி தலையில் எண்ணெய் பெய்து

தலையை வகிரும் சடங்கினைச் செய்யும்போது தலையி லிருந்த வடுவைக் கண்டு காரணம் கேட்டான். அவளும் தான் காயம்பட்ட வரலாற்றைக் கூறினாள். அதைக் கேட்ட பகவன், "நீ ஆதியளா?" என்று கூறி அவள் (இதனால்தான் அவளுக்கு **ஆதி** யென்னும் பெயர் வந்தது.) புலைச்சி என்றறிந்த காரணத்தால் பகவன் அவளுடன் வாழ விரும்பாமல், அவளை விட்டுவிட்டு ஓடினான். ஆதியும் அவனைத் தொடர்ந்தாள். பின்பு இருவரும் ஓரிடத்திலும் நிலைக்காமல் தேச சஞ்சாரம் செய்யத் தீர்மானித்தனர். பகவன் ஆதியை நோக்கி, "நமக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த இடத்தி லேயே விட்டுவிட வேண்டும். இதற்குச் சம்மதமானால் என்னைத் தொடரலாம்" என்று அறிவிக்க, ஆதியும் அதற்கிசைந்தனள். அங்ஙனமே தங்களுக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் பிறந்த இடத்திலேயே விடுத்துச் சென்று கொண்டிருந்தனர். அப்படிப் பிறந்தவர்களே **ஔவை,** உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, திருவள்ளுவர் என்ற எழுவர் ஆவர். ஔவையே முதல் குழந்தை. ஒவ்வொரு குழந்தையும் தன்னைப் பெற்றபோது பிரிய மனமின்றி நின்ற தாயை நோக்கி, ஒவ்வொரு பாடலைப் பாடியது. ஔவை பிறந்த போது, "அம்மா, என்னை விட்டு நீங்குவது குறித்து வருந்த வேண்டா. என் வாழ்வு இந்த விதமாகத்தான் அமையும் என்று என் தலையில் எழுதிப் பிறக்கவைத்த சிவபெருமான் சாகாமல் இருக்கின்றான். எவ்வளவு பஞ்சம் வந்தாலும் படைத்தவனுக்கே, காக்கவேண்டிய கவலையும் பொறுப்பும் ஆகும்" என்ற பொருளில் ஒரு பாடலைப் பாடப் பெற்ற இடத்திலேயே ஆதி மனம் தளராது, அக்குழந்தையை விட்டு மேலே சென்றாள்.

இங்ஙனம் பெற்றோரால் விட்டுச் செல்லப்பட்ட முதல் குழந்தையான ஒளவையைப் பாணனொருவன் கண்டெடுத்து வளர்த்து வந்தான். இந்நிலையில் ஒளவை மங்கைப் பருவமடைந்தும், மணவாழ்க்கையை விரும்பாமல் சிவபக்தி மிக்கவராய் யோகி போல் வாழ்ந்து வந்தார். காரைக்கால் அம்மையார் எப்படிச் சிவபெருமானை வேண்டிப் பேய் வடிவைப் பெற்றாரோ, அது போலவே இந்த அம்மையாரும் பிறர் தம்மை மணக்காமல் இருக்கக் கிழவடிவை விநாயகப் பெருமானை வேண்டிப் பெற்றார். இவர் சிறுவயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிக் கவிபாடும் ஆற்றல் மிக்கவரானார். அவ்வடிவோடு தமிழ் நாடெங்கும் சென்று, தம் கல்விப் பெருமையால் யாவரையும் மனமகிழச் செய்து, அவ்வப்போது தம்மை உபசரித்தவர்களைப் பாராட்டிப் பாடல்களைப் பாடி வாழ்ந்து வரலானார்.

## சிற்றூடையைச் சிறப்பித்துப் பாடியது

முற்காலத்தில் பறம்பு நாட்டில் **பாரி**யென்ற ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் ஒளவையாரிடம் மிக்க அன்பு கொண்டவன். அவன் எப்பொழுதும் ஒளவையாரைத் தன்னுடன் இருக்க விரும்புபவன். ஒளவையார் அவனிடம் வந்து பரிசு பெற்றுத் தனது ஊரின் எல்லையைக் கடந்தால், தனது ஏவலாளர்களைத் திருடர்களைப் போல் வழிமறித்துத் தான் கொடுத்த பரிசுகளைப் பறித்துக்கொள்வான். ஒளவையார் திரும்பப் பாரியிடம் குறை கூற வருங்கால், சில நாள் அம்மையாரைத் தங்கவைத்துப் பின்பு முன்னிலும் அதிகமான பரிசுகள் கொடுத்து மகிழ்ந்து வழிப்படுத்துவான்.

அக்காலத்தில் **பழையனூர்** என்னும் ஊரில் **காரி** யென்னும் குடியானவனொருவன் இருந்தான். ஒரு நாள் அவன் தன் வயலில் களையெடுத்துக் கொண்டிருந்த போது, அவ்வழியாக வந்த ஔவையார் மிகவும் பசியுடன் வந்துகொண்டிருந்தார். அவனிடம் சென்று, அவன் வைத்திருந்த கூழில் கொஞ்சம் வார்க்கும்படி கேட்டுக்கொண்டார். கூழைக் கொடுத்ததும் ஔவையார் போய்விடுவார் என்று கருதி, அவரைத் தன்னிடம் சிறிது நேரமாகிலும் இருக்கச் செய்து மகிழவேண்டும் என்பதற்காக அவனும் ஔவையார் கையில் களைக் கொட்டைத் தந்து கொஞ்ச நேரம் களையெடுக்கச் செய்த பின்னர் அவர்க்குக் கூழைவார்த்தான். ஔவையாரும் கூழைக் குடித்துக் களைப்பு நீங்கி மேலே நடக்கலுற்றார்.

**அதிகமான்** என்னும் சேர அரசன் ஔவையாரிடத்தில் அளவற்ற அன்புடையவன். அச்சேர மன்னன் விருந்து ஒன்றைத் தன் அரண்மனையில் நடத்தினான். அவ்விருந்தில் ஔவையாரும் கலந்துகொண்டனர். எல்லோரும் பந்தியில் அமர்ந்து விருந்துண்ணும் சமயம், திடுமென ஒருவர் அங்குவந்து சேர்ந்தார். அப்போது யாரை எழுப்பி அந்த இடத்தில் வந்தவரை அமரச் செய்து உபசரிப்பது என்று சேரன் திகைத்துப் பின்; யாரை எழுப்பினால் தவறாக எண்ணார் என்பதை யூகித்துத் தனக்கும் ஔவையாருக்கும் இருக்கின்ற நட்பின் காரணமாக ஒவையாரை நோக்கி, "அம்மையே, இங்கே வாராய்" என்று அழைத்துப் பந்தியில் இருந்து அவரை எழுப்பி வந்தவரை உபசரித்தான். ஔவையாரும் அதுபற்றிச் சிறிதும் மனம் கோணாமல் எழுந்து, பின் அதிகமானுடன் இருந்து உண்டு களித்தார்.

ஔவையார் ஒரு நாள் வீதிவழியே நடந்து கொண்டு போகையில் பெருமழை பொழிந்தது. மழையால் நனைந்துபோயினர். ஔவைப் பாட்டியார் வயது முதிர்ந்தவர் ஆதலின், குளிரால் மிகவும் வருந்தினர். உடல் நடுக்கத்துடனும் ஆடைகள் நனைந்த நிலையுடனும் ஓர் இல்லத்தின் திண்ணையை அடைந்தார். அப்போது அவ்வீட்டிலிருந்து ஓர் இடைப் பெண் பாட்டியின் இரக்கமான நிலையைக் கண்டு, உள்ளே அழைத்துச் சென்று நனைந்த ஆடையை நீக்கி, ஒரு **நீலச் சிற்றுடை**யைக் கொடுத்தாள். அவரது உடலை வேறு துணியால் ஈரம் போகத் துடைத்தாள். இப்படித் தனக்கு உபகாரம் செய்த இடைச்சியைப் புகழ்ந்து, "பாரி எனக்கு அன்பினால் அளித்த பரிசை மீண்டும் அபகரித்துக் கொண்ட செயலும், மழையனூர்க் காரி என்பவன் களைகளை எடுக்கச் செய்த செயலும், சேரமான் விருந்தில் 'வாராய்' என்று அழைத்த செயலும், இந்த இடைக்குலமாது ஈந்த நீலச் சிற்றுடைக்குச் சமமாகும்" என்ற கருத்தில் ஒரு செய்யுளைப் பாடினார். இதன் உட்பொருள் மேலே குறிப்பிட்ட . . அன்பினால் செய்யப்பட்ட மூன்று செயல்களும் இடைப் பெண் செய்த இவ்வன்புடைய ஒரு செயலுக்கு நிகராகும் என்பதாம்.

## அங்கவை சங்கவையின் திருமணம்

பாரி ஒரு சிறந்த வள்ளல். அவன் ஔவையாரிடத்தில் வைத்த அன்பு, ஔவையார் பரிசில் பெற்றுச் சென்றாலும், பின்னரே ஆட்களை அனுப்பி அவற்றைப் பறிக்கச் செய்து, ஔவையார் மீண்டும் தன் அவையில் பல நாள் தங்க வைத்து மீண்டும் பரிசில் ஈந்து அனுப்பியதால் நன்கு அறியப்படுகிறது. அத்தகைய அன்பன் இறந்தான். அவனது மக்களாகிய



ஔவையார் நீலச் சிற்றுடை பெறுதல்

**அங்கவை சங்கவை** என்பவர்களின் திருமணத்தை ஔவையார் வெகு சிறப்புடன் முடித்து வைக்கலானார்.

அதன் பொருட்டு ஔவையார் அக்கன்னிகைகளைத் திருக்கோவலூர் அரசனான **தெய்வீகனுக்கு** மணம் முடிக்க ஏற்பாடு செய்தனர். ஒரு வெண்பா பாடி விநாயகரை வரவழைத்து, அவர் கையினாலேயே தமிழ் நாட்டின் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கு ஓலை எழுதுவித்து அக் காட்டிலுள்ள தேவதை மூலம் அனுப்பினர். அவ் வோலைகளைக் கண்ட மூவேந்தரும் உடனே திருக் கோவலூர் வந்து சேர்ந்தனர். திருமணமும் இனிது நடந்தேறியது. முடிவில் ஔவையார் மூவேந்தர்களையும் உண்டு செல்லுமாறு கூறினர். அவர்கள் ஔவையாரைச் சோதிக்க எண்ணி, பனம்பழம் கிடைக் காத காலத்தில் பனம்பழம் தந்தால், மண விருந்து உண்பதாகக் கூறினர். உடனே ஔவையாரும் அவர் கள் உள்ளக்கிடக்கையை அறிந்து கொண்டு, அருகில் கிடந்த பனந்துண்டை நோக்கி, "பனந்துண்டமே, மூவேந்தர்கள் பாரிமகளிர் திருமணத்தின் பொருட்டு வந்துள்ளனர். அவர்கள் களிக்கும் வண்ணம் நன்கு வளர்ந்து, நுங்கு காய்த்துப் பழமும் பழுத்து விளங் குக" என்ற கருத்தமைந்த ஒரு பாட்டுப் பாடினர். உடனே அப்பனந்துண்டம் குருத்து விட்டு வளர்ந்து பெரிய மரமாகி நுங்குக் குலைகளை விட்டுப் பழுத்துப் பனம் பழத்தைத் தந்தது. அது கண்ட மூவேந்தரும் ஔவையாரின் வல்லமையைப் போற்றி மகிழ்ந்தனர்; உணவு உண்டு களித்தனர்.

பின்னர் ஔவையார் சேரனை நோக்கி, ஸ்ரீதன மாக ஆடு ஒன்று தருமாறு கூற, அவன் பொன்னால்,

செய்த ஆடு என்று கொடுத்தான். அப்பொழுது ஒளவையார், 'மன்னா உன்னாடு பொன்னாடு' என்று சிலேடையில் மொழிந்து அவனைப் போற்றினர். அதாவது உன் ஆடு பொன் ஆடு என்றும், உன் நாடு பொன் நாடு என்றும் பொருள்படும் நிலையில், மேலே குறிப்பிட்ட தொடரைக் கூறினர்.

இவ்வாறு அங்கவை சங்கவைகளின் திருமணத்தைச் சிறப்புற நடத்தி, மணமக்களை வாழ்த்தி மேலே செல்லலுற்றார்.

## பட்டபலா தழைக்கப் பாடியது

இப்படி வழி நடந்து ஒரு மலைச்சாரல் வழியே போய்க்கொண்டிருந்தார். அப்போது வருந்திய முகத்துடன் ஒரு குறத்தி எதிர்ப்பட்டாள். ஒளவையார் அவளுடைய வருத்தத்திற்குக் காரணம் கேட்டார். அதற்கு அக்குறத்தி, "பாட்டி, அம்மலைச் சாரலை அடுத்த குடிசை எங்கள் வாழ் இடம். என் கணவருக்கு இரண்டு மனைவியர். நாங்கள் மூவரும் இன்பமாக வாழ்ந்து வந்தோம். அவர் தம் வீட்டு முற்றத்தில் அன்பாக ஒரு பலா மரத்தை வளர்த்து வந்தார். என் கணவர் வெளியூர் செல்ல நேர்ந்த போது, எங்கள் இருவரையும் அழைத்து, அப்பலா மரத்தை நன்கு பாதுகாக்கும்படி கண்டிப்புச் செய்துவிட்டுப் போயினர். அவர் வெளியூர்ச் சென்றதும், இளையாள் அம்மரத்தை வெட்டி விட்டு என்மீது பழி சுமத்தினாள். என் கணவர் வந்ததும் என்ன செய்வாரோ என்று நினைத்து அஞ்சிக் கொண்டிருக்கிறேன். இதுவே என் துன்பத்திற்குக் காரணம்" என்றனள். இதைக் கேட்ட ஒளவையார் மனமிரங்கி, அக்குறத்தி

யின் வருத்தத்தைப் போக்க எண்ணி வெட்டப்பட்ட பலாமரம் மீண்டும் தழைக்குமாறு, "கூரிய வாளால் வெட்டப்பட்ட பலாமரமே, கப்பும் கிளையுமாய் வளர்ந்து காயும் பழமாகக் காய்த்துப் பழுத்து முன் போலச் செழிப்புடன் விளங்குக" என்ற பொருளில் ஒரு பாட்டைப் பாடினர். உடனே வெட்டப்பட்ட அப்பலாமரம் மீண்டும் தழைத்து வளர்ந்தது. அது கண்ட மூத்தாள் பெரிதும் மகிழ்ந்து ஔவையாருக்குத் தான் சமைக்க வைத்திருந்த தினையரிசியை ஒரு துணியில் முடிந்து கொடுத்து அனுப்பினுள். ஔவை யாரும் அதைப் பெற்று மேலே நடந்து சென்றுர்.

## பேய்கள் சாபம் நீங்கினமை

ஒரு கால் ஔவையார் வெகு தூரம் நடந்து களைப்பு மேலிட்டு இருட்டும் வேளையில் ஓர் ஊருக் கருகிலிருந்த சாவடியை அடைந்தார். அன்றிரவை அங்கேயே கழிக்க எண்ணிப் படுத்துக் கொண்டார். இரவு முதற்சாமம் ஆனதும் பெண் ஆவேசம் ஒன்று ஔவையாரை நோக்கி 'எற் றெற் றெற' என்று பயங்கரமாகச் சப்தமிட்டுக் கொண்டு வந்தது.

ஔவையார் உறக்கம் நீங்கி அப் பெண் பேயைப் பார்த்து,

"வெண்பா இருகாலில் கல்லானை வெள்ஓலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றுளே பெற்றுள் பிறர்நகைக்கப் பெற்றுளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று"

என்று ஒரு வெண்பா பாடினர். ஔவையாரு டைய பாட்டைக் கேட்டுத் தன் பேய் வடிவம் நீங்கிப் பெண்ணுருவுடன் ஔவையாரை வந்து பணிந்தது.

ஔவையார் அப்பேயின் வரலாறு தனக்குத் தெரிந்திருந்தும், அதனையே அதனுடைய வரலாற்றைக் கூறும்படி கேட்டுவிட்டார். அப்போது அப்பேய், "அம்மா, நான் பேய் வடிவு கொண்ட காரணத்தைக் கூறுகின்றேன்; கேட்பீராக:

"நான் ஓர் அரசன் மகள்; அரண்மனை உப்பரிகை மேல்மாடத்தில் பந்தாடிக் கொண்டிருந்தேன். அப்போது அவ்வழியாக வந்த அரசகுமாரனைக் கண்டு அவன் மீது ஆசை கொண்டு, அன்று இரவு அவ்வூர்ச் சாவடியில் சந்திக்குமாறு ஓர் ஓலையில் எழுதி அவன் முன் போட்டேன். அவன் கல்வியறிவற்றவனாதலால், அவ்வோலையை ஒரு பெருநோய் கொண்டவனிடம் காட்டினன். அதைப் படித்த அக்குஷ்டரோகி என்னை மணக்க எண்ணி, அவனை வஞ்சிக்க, அரசகுமாரனைத் தண்டிக்கப் போவதாக அதில் எழுதப்பட்டிருக்கிறது என்று கூறி, அவனை ஊரை விட்டு விரட்டி விட்டான். அவ்வோலையில் கண்டபடி குஷ்டரோகி அச்சாவடியில் வந்து காத்திருந்தான். அரசகுமாரன் நாம் எழுதிய படி சாவடியில் வந்திருப்பான் என்ற எண்ணத்துடன் நான் சாவடிக்கு வந்து அவனை நெருங்கினேன். அவன் உடலிலிருந்து வீசிய துர்நாற்றத்தால் அவனை விட்டு விலகி நான் விரும்பிய அழகன் இல்லை யென்றறிந்து, அங்கேயே தற்கொலை புரிந்து கொண்டேன். அத்தற்கொலை காரணமாக நான் பேய் வடிவு கொண்டேன்" என்றது. இதைக்கேட்ட ஔவையார் மனமுருகி, அப்பெண் பேயை உறையூர் அரசன் மகளாகப் பிறந்து, அவள் காதலித்த அரசகுமாரனையே மணந்து வாழுமாறு அருள் புரிந்தார்.

தன்னை விரும்பி ஓலை எழுதிப்போட்ட அரச குமாரி அநியாயமாய் இறந்ததை அறிந்த, அரச குமாரன் பிறகு திரும்பி வந்து அதே சத்திரத்தில் தானும் தற்கொலை செய்துகொண்டு பேயாய்த் திரிந்து வந்தான். பெண் பேயின் சாபத்தை நீக்கிய ஔவை யாரை அவ் ஆணுவேசமும் வந்து வணங்கிற்று. ஔவையார் அவ் ஆண் பேயை நோக்கி, "நீயும் அவ் உறை யூரிலேயே பிறந்து நீ விரும்பிய அரசகுமாரியை மணந்து கொள்வாய்" என்று அருளினுர்.

## ஔவையாரும் சங்கப் புலவர்களும்

மதுரையில் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் அரசாண்டபோது திருவள்ளுவர் தாம் முப்பாலின் மேல் பாடிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களைக் கொண்ட பெரிய ஏட்டுச் சுவடிகளைத் தூக்கிக்கொண்டு மதுரைச் சங்கப் புலவர்முன் அரங்கேற்றஞ் செய்யச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஔவையாரும் சங்கத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். இடையில் தமது தம்பியாராகிய திருவள்ளுவரைக் கண்டதும், அவ்வையார் நின்று, நலம் விசாரிக்க ஆரம்பித்தபோது மழை பெய்யத் தொடங்கியது. உடனே திருவள்ளுவர் ஓர் ஆலமரத்தின் கீழ் போய் நிற்க, ஔவையார் அருகில் இருந்த ஒரு புளியமரத்தின் கீழ் நின்று கொண்டு, தம் தம்பியை நோக்கி, அன்புமொழியில் "ஏடா, இச் சிற்றிலைக்கீழ் வா" என்று கூறினுர். அவரும் அவ்வாறே சென்றனர். பின்னர் ஔவையார், அருகில் வந்த தம் தம்பியார் கையில் வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளைப் பார்த்து, "இது என்ன?" என்றுர். அதற்குத் திருவள்ளுவர், "அதுதன் அறம், பொருள், இன்பம் என்

னும் முப்பாலின்மேல் பாடிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் அடங்கிய நூல்" என்றனர். "இதற்கு இவ்வளவு பாடல்கள் தேவையில்லையே! இதோ நான் நான்கே வரிகளில் அம் மூன்று பொருள்களையும் பற்றிக் கூறுகிறேன்" என்று "ஏழைகளுக்கு ஈவது அறம். நல்வழியில் சம்பாதிப்பது பொருள். கணவனும் மனைவியும் ஒரு மனப்பட்டுக் காதல்கொண்டு வாழ்வது இன்பம். இந்த அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் விடுத்து இறைவனைப் போற்றி வாழ்தலே பேர் இன்பமாகிய வீட்டு நிலையாகும்" என்று திருவள்ளுவர் பாடிய முப்பாலையே யன்றி நான்காவது நிலையாகிய, மோட்சத்தைப்பற்றியும் அமைத்து ஒரு வெண்பா பாடினர். திருவள்ளுவர், "அம்மையே, நீர் பாடிய பாட்டுத் திரண்ட பொருளைப் பெற்றது. யான் பாடிய பாடல்கள் உம் பாட்டுக்கு விளக்கம் போல் அமைந்தவை" என்று நயமாக விடை கூறினர்.

இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது இடைக்காடரும் அங்கு வந்து சேர்ந்தார். பின்னர் மூவரும் சேர்ந்து மதுரை நோக்கிப் புறப்பட்டனர். சங்கத்தை அடைந்த ஔவையார் சங்கப் புலவர்களிடம் சிறிது வேடிக்கைசெய்ய எண்ணிப் புலவர்களை நோக்கித் தமது ஐந்து விரல்களைக் குவித்தும், மூடியும், கொஞ்சம் திறந்தும், சுட்டு விரலொன்றை மாத்திரம் நீட்டியும், ஐந்து விரல்களையும் அகலத்திறந்தும் சில குறிகளைக் காட்டி, அக்குறிக்குப் பொருள் கேட்டனர். புலவர்கள் அதன் உண்மைப் பொருளை அறியாது திகைத்தனர். உடனே ஔவையார் அப்புலவர்களனைவரும் வெட்கமடையும்படி,

"ஐயம் இடுமின்; அறநெறியைக் கைப்பிடிமின் ;
இவ்வள வேனும்அன்னம் இட்டுண்மின்;
—தெய்வம்
ஒருவனே என்றும் உணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்"

என்று பாடித் தமது குறிப்புக்குப் பொருள் கூறினர். பின்னர் அரசன் முன்னிலையிலும் சங்கப் புலவர்கள் முன்னிலையிலும் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. நூலின் பொருளைக் கேட்ட புலவர்கள் வியந்து தனித் தனிப் பாடல்களைப் பாடினர். அப்பாடல்களின் தொகுப்பே **திருவள்ளுவர் மாலை** எனப்படும்.

## சுட்ட பழமும் சுடாத பழமும்

ஒருகால் ஔவையார் ஒரு காட்டு வழியில் நடந்த போது களைத்து ஒரு நாவல் மரத்தடியில் வந்துநின்றார். சுப்பிரமணியக் கடவுள் ஔவையாருடன் விளையாட வும் சில அரிய கருத்துக்களை வெளிப்படுத்தவும் எண்ணி, ஒரு மாட்டுக்காரப் பையன் போல் அந் நாவல் மரத்தின்மேல் அமர்ந்து பழம் பறித்துத் தின்றுகொண் டிருந்தார். ஔவையார் அம்மாட்டுக்காரப் பையனை நோக்கித் தமக்கும் கொஞ்சம் நாவற்பழங்கள் போடு மாறு கேட்டுக் கொண்டார். அப்போது அவன் ஔவையாரை நோக்கிச் "சுடுகிற பழம் வேண்டுமா? அல்லது சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையார் சிறிது நேரம் யோசித்தும் ஒன்றும் விளங் காமல், "சுடாத பழமே போடு தம்பி" என்றார். மாட் டுக்காரப் பையன் ஒரு கிளையைப் பிடித்து உலுக்கக் காய்களும் பழங்களுமாகக் கீழே உதிர்ந்தன. ஔவை யார் பழத்தைப் பொறுக்கி அதில் ஒட்டிக்கொண்

ஒட்டிய மணலை வாயால் ஊதினார். உடனே சிறுவன் ஒளவையாரை நோக்கி, “பாட்டி, சுடாதபழம் கேட்ட நீ, சுடுகிற பழத்தை எடுத்து உண்ணப் போகிறாயே! நன்றாக ஊதி ஆறிய பின் புசி” என்றான். அதைக் கேட்ட ஒளவையார் திடுக்கிட்டுச் சுடாத பழம் யாதென்று முன்னரே தெரியாமற் போனோமே. நாம் இன்று ஒரு மாட்டுக்காரப் பையனுக்குத் தோற்றுப் போனோமே! என்று வருந்தினார்.

அப்பொழுதுதான் ஒளவையார் கல்விச் செருக்கு கூடாது என்னும் கருத்தில், “நாம் கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகு அளவு என்று கலைமகளே கூறுகின்றாள். ஆகவே, புலவர்களே, வெறும் பந்தயம் போடவேண்டா” என்ற கருத்தில் ஒரு பாடலையும் இசைத்தார். உடனே முருகக் கடவுள் தம் மெய்யுரு எய்தி ஒளவையாரின் அருகில் வந்து, அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, “அம்மையே, நீர் சிறிதும் கவலைப்படவேண்டா. நான் உம்மோடு விளையாட வேண்டுமென்ற விருப்போடு வந்தேனேயன்றி, உம்மை இகழ வேண்டுமென்பதில்லை. மேலும், உம்மால் சில அரிய கருத்துக்கள் வெளிவரவேண்டும்” என்று கூறித் தேற்றினார்.

பிறகு ஒளவையாரை நோக்கி, “உலகில் கொடியது யாது?” என்றார். அதற்கு ஒளவையார், “வறுமையே கொடியது. அவ்வறுமை இளமையில் வந்து விட்டால் மிகவும் கொடுமையேயாகும். இதைவிட நோய்வாய்ப் பட்டு வருந்துதல் கொடுமையாகும். இதைவிடக் கொடியது, அன்பில்லாத மனைவியோடு வாழ்வது. இதை விடக் கொடியது அன்பில்லாதவன் கையினின்று உணவைப் பெற்று உண்பது” என்று விடையிறுத்தார். பிறகு

முருகன், "இனியது யாது?" என்று கேட்க ஔவையார், "தனித்து இருப்பது இனிமையானது' இவ்வாறு தனித்து இருப்பதைவிட, இறைவனைத் துதித்துக் கொண்டிருப்பது இனிமையானது. ஆண்டவனைத் துதிப்பதைவிட, இனிமையானது, அறிஞர்களோடு சேர்ந்து வாழ்வது. இதனைவிட, இனிமையானது அவ்வறிஞர்களைக் கனவிலும் நனவிலும் கண்டு களிப்பது" என்று கூறினர்.

பின்பு முருகப்பெருமான், "பெரியது எது?" என்று கேட்க, ஔவையார், "உலகம் பெரியது. அவ்வுலகம் பிரமனுல் படைக்கப்பட்டது. அப்பிரமன் திருமாலின் உந்தியிலிருந்து வந்தவன். அத்திருமால் திருப்பாற்கடலில் உறங்குபவன். அக்கடல் அகஸ்தியரால் குடிக்கப்பட்டது. அவ்வகத்தியர் குடத்தில் இருந்து தோன்றியவர். அக்குடம் பூமி மண்ணுல் ஆனது. அப்பூமி ஆதிசேடனுல் சுமக்கப்படுவது. அவ்வாதிசேடன் பார்வதி தேவியின் கை விரல் மோதிரமாக இருப்பவன். அப்பார்வதி பரமசிவனுர் உடலில் பாதிவடிவாய் இருப்பவள். அப்பரமசிவம் பக்தர்களின் மனத்தில் ஒடுங்குபவர். ஆதலின், பக்தர்களுடைய பெருமை எல்லாவற்றையும் விடப் பெரியது" என்று கூறினர். இதன்பின் குமரக் கடவுள் "அருமையானது எது?" என்று கேட்க, "மானிடராகப் பிறப்பதே அருமை. அப்படிப் பிறந்தாலும் கூன் குருடு, செவிடு, பேடு, இல்லாமல் பிறப்பது அருமையானது. இவ்வாறு அங்கப் பழுது இல்லாமல் பிறந்தாலும், ஞானம் கல்வி இவற்றை விரும்பிப் பெறுதல் அருமை. அப்படி அவ்விரண்டையும் பெற்றாலும், தானம் தவம் செய்வது அருமை. அப்படிச் செய்பவர்க்கு வானவர் நாடு வழி திறந்து வரவேற்கும். இந்த அருமைப்பாடு அரிதினும் அரிது" என்றும் விடை

பார்த்தனர். முருகக்கடவுளும் மகிழ்வெய்தி ஔவையாரிடம் விடைபெற்றுக் கொண்டு மறைந்தார். ஔவையாரும் முருகனைப் போற்றித் தாமும் மேலே செல்லலுற்றார்.

## தகாதவரைப் பாடாமை

பின்பு ஒருகால் வீரம், வண்மை முதலியவை இல்லாச் சிலர் தம்மைப் பற்றிப் பாடுமாறு ஔவையாரைக் கேட்டனர். அப்போது "நான் மூவேந்தர்களைப் பாடுபவள். அப்படிப்பட்ட என்னை உம் மீது பாடல் பாடும்படி கேட்கின்றீர்களே. நீங்கள் போர்க்களத்தைக் கண்ணாலும் பார்த்து அறியீர். இசையினைச் செவியாலும் கேட்டும் அறியீர். புலவர் வறுமையைப் போக்கியறியீர். உணவுச் சுவையை மட்டும் அறிவீர். தமிழ்ச் சுவையை அறிய மாட்டீர். செல்வத்தைச் சேர்த்து வைக்கக் கற்றீர். நல்ல உடையை உடுத்தீர். நல்ல உணவை உட்கொள்வீர். பிறர்க்குக் கொடுக்கவும் மாட்டீர். பயனிலாக் கனியைப் பெற்ற மரம் போலச் செல்வம் பெற்ற உம்மை எப்படிப் பாடுவேன்?" என்ற கருத்தை ஓரகவலாகப் பாடினர். இதனைக் கேட்ட அவர்கள் தம் குணத்தை நன்கு படம் பிடித்துக் காட்டினாற்போல் ஔவையார் பாடிவிட்டனர். இனி அவரைப் பாடுமாறு கேட்டல் கூடாது என்று வெட்கிப் போயினர்.

## நான்கு கோடிப் பாடல்கள்

ஒரு நாள் சோழன் தன் சபையிலுள்ள புலவர்களை நோக்கி, மறுநாள் காலையில் சபைக்கு வரும்போது நாலு கோடிப் பாடல்களைப் பாடிக் கொணருமாறு கட்டளையிட்டான். அதனைக் கேட்ட புலவர்கள் திடுக்கிட்டு, "நாலுகோடிப் பாடல்களை நாளை காலைக்குள் எங்ஙனம்

பாடப் போகிறோம்?" என்று திகைத்து முகம் வாடித் தத்தம் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கையில், ஔவையாரைக் கண்டனர். ஔவையார் புலவருடைய வருத்தத்திற்குக் காரணம் கேட்டு அறிந்து கொண்டார். உடனே ஔவையார் புலவர்களைச் சிறிதும் அஞ்சவேண்டா என்று கூறித் தாமே நாலுகோடிப் பாடல்களையும் பாடித் தருவதாகக் கூறி.

"மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை **கோடி** யுறும்
உண்ணீர் உண்ணீர்என்றே ஊட்டாதார் தம் [மனையில்
உண்ணுமை **கோடி** யுறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார். தம்மோடு
கூடுவதே **கோடி** யுறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை **கோடி** யுறும்" என்று

இந்நான்கு பாடல்களைப் பாடித்தரப் புலவர்களும் தங்கள் கவலை நீங்கப் பெற்றவராய் மறு நாள் காலை அரசன் முன் அப்பாடல்களைக் கொண்டுபோய்ச் சமர்ப்பித்தனர். அரசனும் பாடலைக் கண்டு மகிழ்ந்தான்.

## ஏழைச் சிறுவன் பீதாம்பரம் பெற்றது

ஒரு நாள் சோழ மன்னன் யானை மீதூர்ந்து நகர வீதிகளில் பவனி வந்து கொண்டிருந்தான். அரசனைப் பார்க்க ஏராளமான மக்கள் தெருக்களில் கூடியிருந்தனர். எல்லோரும் குதூகலத்தில் ஆழ்ந்திருந்த அந்தச் சமயத்தில் ஓர் ஏழைத் தாயின் குழந்தை மட்டும் அழுதுகொண்டிருந்தது. அச் சிறுவன் தனக்கு அரசன் போர்த்தியிருக்கும் பீதாம்பரம் வேண்டுமென்று

அழுது அடம் பிடித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியாக வந்த ஔவையார், அச்சிறுவனின் அழுகையின் காரணத்தைக் கேட்டறிந்தார். உடனே ஔவையார் ஊர்வலம் வந்து கொண்டிருந்த அரசன் முன் சென்று நின்று கைதூக்கி அவனை நிறுத்தி, "மன்னா, அன்பு அளிப்பாக ஆடையை ஈந்தால், அது கிழிந்துபோகும். ஆனால், என் பாடல் என்றும் அழியாது" என்னும் கருத்தமைத்துப் பாட, அரசனும் குறிப்பறிந்து தனது விலையுயர்ந்த பீதாம்பரத்தை மகிழ்ச்சியுடன் ஔவையார் கையில் தந்தனன். அதனை வாங்கிய ஔவையார் அழுதுகொண்டிருந்த அச்சிறுவனுக்கு அணிவித்து அனைவரையும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்வித்தார்.

## பொன் ஊஞ்சல் அற்று வீழ்தல்

ஒருகால் பாண்டியன் சங்கப் புலவர்களின் கல்வித் திறனைச் சோதிக்க எண்ணி, நான்கு பருத்த சங்கிலிகளில் தொங்கும் ஓர் ஊஞ்சல் அமைத்து அதில் பொன்னைக் குவித்து, "சங்கிலிகள் அற்றுவிழுமாறு பாடுபவர்களுக்கு அப்பொன் பரிசளிக்கப்படும்" என்று பறையறைவித்தான். இதையறிந்த புலவர்கள் யாரும் முன்வர அஞ்சி வாளாவிருந்தனர். அப்போது அங்கு வந்த ஔவையார் சங்கதி தெரிந்து அரசசபையில் நுழைந்து, "அரசசபையில் வீற்றிருக்கும் பெருமை பெற்றவர் நூற்றுவரில் ஒருவர். புலவராக அமையப் பெறுபவர் ஆயிரத்தில் ஒருவர். சபையில் அஞ்சாது பேசும் ஆற்றல் பெற்றவர் பதினாயிரத்தில் ஒருவர். வள்ளல் எனப்பேர் பெறுபவர் கோடியில் ஒருவர். இந்தக்கருத்து உண்மையாயின் சங்கிலியே, அறுந்து வீழ்வாயாக" என்ற கருத்தில் ஒரு பாட்டைப் பாடியதும்

ஒரு சங்கிலி அறுந்தது. "தடையின்றிக் கொடுத்தல் தாளாண்மை. நெருங்கிக் கேட்டபோது கொடுப்பது வண்மை. அடுத்தடுத்துச் சென்றபின் கொடுப்பது கால் கூலி. பின்சென்றும் கொடாதவனுக்குப் பிள்ளைப்பேறு இல்லை. என்பன உண்மையாயின் சங்கிலி அறக்கடவது" என்ற பொருளில் பாடியதும் மற்றொரு சங்கிலி அற்று வீழ்ந்தது. "யார் உண்மையான வழக்கைத் தள்ளி, ஊரார் கூறும் உண்மையையும் உதறி, லஞ்சம் வாங்கித் தீர்ப்புச் செய்கிறாரோ, அவன் சந்ததி அற்றுப்போகும். அவன் சுற்றமும் சந்ததியின்றிக் கெடும் என்பது உண்மையாயின், சங்கிலி அறுவதாக" என்ற பொருளில் செய்யுளைக் கூறியதும் மூன்றாவது சங்கிலி அறுந்தது. "உண்மை வழக்குத் தோல்வியுறச் செய்த காரணத்தால், தோற்றவன் அழுதபோது சிந்திய கண்ணீர், பாரபட்சமாக வழக்குக் கூறியவன் சந்ததியை அழிக்கும் என்பது உண்மையாயின், சங்கிலி அறக்கடவது" என்ற அர்த்தத்தில் பாட நான்காவது சங்கிலியும் அற்று வீழ்ந்தது. இதனைக் கண்டு புலவர்களும் புரவலனும் ஔவையாரைப் புகழ்ந்தனர்.

## அசதிக்கோவை பாடிய காரணம்

ஒரு நாள் ஔவையார் பாண்டி நாட்டில் ஒரு காட்டு வழியாகச் சென்றபோது, பசி மிக்கவராய் வழியில் கண்ட ஓர் ஆட்டிடையனைக் கண்டு கொஞ்சம் கூழ் கேட்டார். அவனும் மகிழ்ச்சியுடன் தன் உணவில் ஔவையார்க்கும் கொஞ்சம் கொடுத்தான். தமது பசித்துன்பம் நீக்கிய அவனை, என்றும் உலகோர் புகழும் வண்ணம் செய்விக்க ஔவையார் அவன் பெயரைக் கேட்டார். தன் பெயரைக்கூட அறியாத

அப்பெயரைத் தான் சோர்ந்திருப்பதைக் குறிக்க 'அசதி' என்றான். ஔவையார் மேலும் அவனுடைய ஊர்ப் பெயரைக் கேட்க, அதையும் மறந்த அவன், தான் பிறந்த ஊரில் ஐந்து வேல்கள் உண்டு என்று கூறினான். ஔவையார் அவ்விரண்டையும் சேர்த்து, **ஐவேல் அசதி** என ஊர்ப்பெயரைப் பொருத்தி **அசதிக் கோவை** என்றோர் அழகிய நூலைப் பாடி அதனைத் தில்லையில் அரங்கேற்றித் தமிழகம் எங்கணும் பரவச் செய்தார்.

## நெல்லிக்கனி பெற்று நெடுங்காலம் இருந்தது

சோழ நாட்டைச் சேர்ந்த காவிரிப் பூம்பட்டினத்தில் **பந்தனெ**னும் பெருஞ் செல்வந்தனான வாணிகன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் வாணிகத்தின் பொருட்டுக் கடல் கடந்து செல்கையில், இடையில் ஆதிசேஷன் அவனை எதிர்கொண்டு தனது உலகுக்கு அழைத்துச் சென்று, அவனுக்குத் தன் மகளை மணம் புரிவித்துச் சில நாள் தங்கச் செய்திருந்த பின், அளவற்ற ரத்தினங்களையும் மற்றும் மேலே போர்த்திக் கொண்டார்க்கு இளமை மாறாதிருக்கச் செய்யும் பொற்படாத்தையும், உண்டவரை நீண்டகாலம் வாழச் செய்யும் நெல்லிக்கனியையும் கொடுத்துக் காவிரிப்பூம் பட்டினத்திற்கு அனுப்பி வைத்தான். பந்தன் தான் அருமையாகப் பெற்ற பொற்படாத்தையும், நெல்லிக் கனியில் பாதியையும் அவன் காலத்து இருந்த அரசனுக்குத் தந்து மகிழ்வித்தான். அதனை அவ்வரசன் ஔவையார்க்குக் கொடுத்து இன்புற்றான். ஔவையார் நெல்லிக்கனியைப் பெற்று நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்.

## சிலம்பி பெற்ற செல்வம்

ஒருகால் சோழ நாட்டில் அம்பர் என்னும் ஊரில் சிலம்பி என்னும் தாசி ஒருத்தி வசித்து வந்தாள். அவள் கம்பர் வாக்கினால் பாடல் பெற்றவர்கள் பெருஞ் செல்வந்தராவர் எனக் கேள்வியுற்றுத் தன்னிடமிருந்த எல்லாப் பொருள்களையும் ஐந்நூறாகக் கொண்டு போய்க் கம்பரிடம் தந்து தன்மீது ஒரு பாட்டுப் பாடித் தருமாறு வேண்டிக் கொண்டாள். கம்பர் ஆயிரம் பொன்னுக்கே ஒரு பாட்டுப் பாடுபவர். ஆதலின், அவர் சிலம்பி தந்த ஐந்நூறு பொன்னுக்குப் பாதிப் பாட்டுப் பாடி அதனைச் சிலம்பி வீட்டின் தெருவாயிற் சுவரில்,

> "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவதும் சோழ மண்டலமே"—

என்று இரண்டடிகளை மட்டும் எழுதிவிட்டுச் சென்றார். பெருஞ் செல்வம் பெறலாம் என்ற ஆசையில் சிலம்பி தன் கையிலுள்ள பொருள்களையும் இழந்து வறுமையில் உழன்று கொண்டிருந்தாள். ஒரு நாள் ஔவையார் சிலம்பியின் வீட்டுத் தெருத் திண்ணையில் பசியுடன்வந்து களைத்து உட்கார்ந்தவர், சுவரில் எழுதப்பட்டிருந்த பாட்டின் இரண்டு வரிகளையும் படித்துப் பார்த்துச் சிலம்பியைக் காரணம் கேட்டார். சிலம்பி நடந்ததைக் கூறினாள். ஔவையார் பாதிப் பாட்டையும் தாம் பாடிப் பூர்த்தி செய்வதாகவும் முதலில் களைப்பு நீங்கக் கொஞ்சம் கூழ் ஊற்றுமாறும் கேட்டார். அவ்வாறே சிலம்பி தனக்கு வைத்திருந்த கூழை ஔவையார்க்கு இட்டாள். ஔவையாரும் தம்முடைய பசி நீங்கி

—"பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாள்அணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு."

என்று சுவரில் கம்பர் எழுதிய பாட்டைத் தொடர்ந்தே எழுதி அவ்வெண்பாவைப் பூர்த்தி செய்தார். நாளுக்கு நாள் சிலம்பியும் காலில் செம்பொற் சிலம்பு அணியும் படியான செல்வத்தைப் பெற்றாள். இதைக் கேள்வியுற்ற கம்பர் ஔவையார் மேல் வெறுப்பும் பொறாமையும் கொண்டு சமயம் நேர்ந்தபோதெல்லாம் ஔவையாரிடம் வழக்காடி வந்தார்.

## ஔவையாரும் கம்பரும்

ஒருகால் கம்பர் ஔவையாரை 'அடி' என்று சொல்ல விரும்பி, ஆரைக் கீரையைக் குறிப்பிட்டு, "ஒரு காலடி நாலிலைப் பந்தலடி" என்று கூறிப் பொருள் கேட்டார். அதற்கு ஔவையார், "கம்பா நீ ஆரைக்கீரைப் பாத்தியைப் பற்றிக் கூறினாய் என்பதை அறிவிப்பதோடு, என்னை அடி என்ற சொல்லால் சுட்ட வேண்டுமென்று இவ்வாறு கூறினாய் போலும்!" என்று கூறி, கம்பரை அடக்க வேண்டுமென்று புகழ்வது போல இகழ்பவளாய்,

"எட்டேகால் லட்சணமே, எமனேறும்பரியே,
மட்டில் பெரியம்மை வாகனமே,—முட்டமேல்
கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே.
ஆரையடா சொன்னாய் அது"

என்று பாடி, கம்பரை அவலட்சணமே, எருமைக் கடாவே, கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே, ஆரையடா அடி என்று சொன்னாய் என்று இழித்துரைத்தார்.

ஒருகால் சோழன் தன் சபையில் கம்பர் சில பாடல்களைப் பாடக் கேட்டுப் பாரகாவியம் பாடுவதில் நிகரானவர் யாரும் இல்லை என்று புகழ்ந்து பேசினன். அதுகேட்ட ஔவையார், "அவ்வாறு யாரும் செருக்கை மேற்கொள்ளலாகாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் திறமை இருப்பது இயல்பு. தூக்கணங்குருவியின் கூட்டை எவரும் கட்ட இயலாது. கறையான் புற்றையும் எவராலும் செய்தமைக்க இயலாது. ஆகவே, ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு செயல் எளிதாகும். அதனால் பிறர் பயன் அற்றவர் என்று கூறிவிடலாமோ?"

"சித்திரம் எழுதுவது கைப் பழக்கததால் அமையும். செந்தமிழ்ப் பயிற்சி நாப் பழக்கத்தால் ஏற்படும். கல்வி மனப் பழக்கத்தால் உண்டாகும். நட்பு நடைப் பழக்கத்தால், தயவும் கொடையும் பிறவிக் குணத்தால் அமைவன" என்ற கருத்துக்களில் செய்யுளில் விடையிறுத்தார். பின்னர்க் கம்பருடைய பாட்டைச் சபையோர் புகழ்ந்தமைக்கு விடையாக, "கை நிறைய மோதிரம் இருக்கவேண்டும். தம்மை இருவர் புகழ்பவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர் பாடல் நஞ்சு போன்றும் வேம்பு போன்றும் இருந்தாலும், அதை யாவரும் புகழ்ந்தே பேசுவர். இது உலக இயற்கை" என்ற பொருளில் செய்யுளில் பதில் அளித்தனர். இவ்வுரைகளைக் கேட்டுச் சோழன் மகிழ்ந்தான்.

இவ்வாறு ஔவையார் பல்வாறான கருத்துக்கள் அடங்கிய பாடல்களின் மூலம் பல அறவுரைகளை வெளியிட்டதைக் கம்பர் அறிந்து அதன்பின் ஔவை

பாரிடம் பெருமதிப்புக் கொண்டு மரியாதையுடன் நடந்து வந்தனர்.

## ஔவையாரும் ஒட்டக் கூத்தரும்

ஒருகால் குலோத்துங்க சோழன் ஒட்டக் கூத்தரும் புகழேந்திப் புலவரும் பின்தொடர உறையூர் வீதி யொன்றில் நகர் வளப்பங்காணக் கால் நடையாக நடந்து வந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஔவையார் ஒரு வீட்டுத் தெருத் திண்ணையில் கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தார். அவர் சோழனைக் கண்டதும், ஒரு காலை மடக்கி, புகழேந்தியாரைக் கண்டதும் அடுத்த காலையும் மடக்கிக் கொண்டார். பின்னால் வந்த ஒட்டக் கூத்தரைப் பார்த்ததும் இரண்டு கால்களையும் நீட்டினார். இதைக் கண்ட ஒட்டக் கூத்தர் ஔவையாரை நோக்கி, "இங்ஙனம் என்னை அவமதித்த காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு ஔவையார், "அரசனாதலால் சோழனுக்கு ஒரு காலையும், சிறந்த புலவராதலால் புகழேந்தியார்க்கு இரண்டு கால்களையும் மடக்கினேன்." "நீ உண்மையில் சிறந்தபுலவனெனில், சோழனையும் அவன் நாட்டையும் புகழ்ந்து கடைசியடியில் மூன்று முறை சந்திரன் பெயரை அமைத்துப் பாடு பார்ப்போம்" என்றனர். அவ்வாறே ஒட்டக் கூத்தரும் ஒரு பாட்டுப் பாடினார்; ஒட்டக் கூத்தர் அப் பாட்டில் ஒரு மதி குறையப்பாடவே, ஔவையார், "ஒட்டா ஒரு மதிகெட்டாய்" என்று சிலேடையாகக் கூறினார். ஒட்டக் கூத்தர் தம் குற்றத்தை அறிந்து ஔவையாரைப் போற்றிப் போயினர்.

## 'வரப்புயர' என வாழ்த்தியது.

குமார குலோத்துங்கனுக்குத் திருமணம் நடந்தது. அம்மணத்தில், புலவர்கள் பல பாடல்களைப் பாடி

வாழ்த்தினர். ஔவையார் மட்டும் பாடலால், வாழ்த்தாமல், “**வரப்புயர**” என்று மட்டும் கூறி அமர்ந்தனர். அவ்வாறு கூறியதைக் கண்ட புலவர்கள், “அரசனை வாழ்த்துவது விட்டு ஔவையார் வரப்பினை வாழ்த்தினரே, இது இங்குப் பொருத்தமில்லையே” என்று இழித்துரையாடினர். அப்போது ஔவையார் புலவர்கட்கு அறிவு கொளுத்த எண்ணிப் “புலவர்களே, நான் வரப்பை வாழ்த்திய வாழ்த்தில் மன்னனையும் உங்கள் வாழ்த்துக்களைவிடச் சிறந்த முறையில் வாழ்த்தி இருக்கின்றேன். வரப்பு உயர்ந்தால் நீர் உயரும்; நீர் உயர்ந்தால் நெல் உயரும்; நெல் உயர்ந்தால் குடி உயரும்; குடியுயர்ந்தால் கோன் உயர்வான் அல்லவா? இது அரசனை வாழ்த்திய வாழ்த்து ஆகாதோ?” என்று கூறிப் புலவர் வாயை அடக்கினர். புலவர்கள் தம் அறியாமையை எண்ணி வருந்தி, இப்படித்தான் நுணலும் தன் வாயால் கெடுகிறது என்பதை உணர்ந்து ஔவையாரிடம் தம்மை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டனர். ஔவையாரும் அங்கு இருந்து புறப்பட்டனர்.

## ஔவையார் கைலாயஞ் சேர்ந்தது

ஒரு நாள் ஔவையார் விநாயகக் கடவுளின் பூசையை அவசரமாகச் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது விநாயகக்கடவுள் “ஏன் இந்த அவசரம்?” என்று கேட்டனர். ஔவையார், “சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தியுடன் திருக்கைலாயம் செல்கிறார். அவர் என்னையும் உடன் அழைத்தார். அதனால் பூசையை விரைவாகச் செய்கிறேன்” என்று கூறினார். விநாயகக் கடவுள், ஔவையாரிடம் அவர்களுக்குமுன் திருக்கைலாயத்தில் தாம் கொண்டு சேர்ப்பதாகக் கூறிப் பூசையை முறைப்படி செய்யக்கூறினார்.

ஔவையாரும் அங்ஙனமே முறைப்படி அவசரம் இல்லாமல் பூசை செய்ய, விநாயகர் தம் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கிக் கைலாயத்தில் விட்டு விட்டார். பின்னால் வந்து சேர்ந்த நாயன்மார்களிருவரும் ஔவையார் தங்களுக்கு முன் வந்ததைக் கண்டு காரணம் கேட்க, அவரும் "பார்வதி தேவியின் மூத்தபிள்ளையாகிய விநாயகப் பெருமானை அன்புடன் நினைப்பவர்கட்குச் செய்ய முடியாத செயல்களும் உண்டோ? நான் விநாயகரைப் பூசித்த பலத்தினால் உம் குதிரைவேகத்தையும் யானையின் வேகத்தையும் கடந்து உமக்கு முன்பே இங்குவந்து சேர்ந்தனன்" என்ற பொருளில் செய்யுளில் விடையளித்தனர். இருவரும் இந்தப் பதிலைக் கேட்டு வெட்கித் தலை குனிந்து ஔவையைப் போற்றினர்.

கைலாயத்தில் சிவ பார்வதி சன்னிதியில் அவர்களுக்கு நேராகத் தம் கால்களை நீட்டி ஔவையார் உட்கார்ந்தார். அது கண்ட பார்வதி தேவியார் மனம் பொறாமல், அவ்வையாரை நோக்கி, "நீ இவ்வாறு உட்கார்ந்திருத்தல் சரியோ?" என்றார். உடனே ஔவையார் எழுந்து பலமுறை பணிந்து, "தாயே, தங்களை என்றும் என் நெஞ்சத்தில் வைத்துப் போற்றுகிறேன். உலகில் தாங்கள் இல்லாத இடம் எது? எத்திசையில் என் கால்களை நீட்டினும் அத்திசையில் தாங்கள் இருக்கின்றீர். மேலும் நான் கிழவியானதலால் எங்குச் செல்லினும் கால் நீட்டியே உட்காரும் வழக்கமுடையேன். அன்றெல்லாம் குற்றமாகக் கொள்ளாமல் இன்று மட்டும் அங்ஙனம் கொள்ளலாமோ?" என்றார்.

அவ்விடையைக் கேட்ட உமாதேவியாரும் அங்கிருந்த அன்பர்களும் மகிழ்ந்து "ஔவையார் நெடு நாட்

பழக்கத்தால் செய்தாரேயன்றிச் செருக்காற் செய்தாரில்லை. மேலும் கடவுள் எங்கும் இருக்கின்றார் என்பதையும் இதன் மூலம் அறிவித்தனர்'' என்று கூறி ஔவையாரைப் போற்றி வியந்தனர்.

## ஔவையார் காலம்

இங்கு எழுதப்பட்ட ஔவையார் காலத்தை நாம் திட்டமாகக் கூற இயலாது. இங்குக் கூறப்பட்ட கதைத் துணுக்குகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஔவையாரும், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த (அதாவது சுந்தரமூர்த்திகள் காலம்) ஔவையாரும், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த ஔவையாரும் காட்சியளிப்பதாக மட்டும் நாம் நம் கருத்தில் கொள்ளவேண்டும்.

# 2 ஒட்டக் கூத்தர்

## பிறப்பும் கல்வியும்

சோழ நாடு பல சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. அச்சிற்றூர்களில் **மலரி** என்னும் ஊரும் ஒன்றாகும். அவ்வூரில் பல குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். அம்மக்களுள் செங்குந்தர் மரபினரும் ஒரு வகுப்பினர் ஆவர். அச்செங்குந்த மரபினுக்கு ஒரு தனிப்பெருஞ் சிறப்புத் தர ஒரு பெரியார் பிறந்தருளினார். அவரே கூத்தர் எனப்படுவார். கூத்தர் என்னும் பெயர் நடராசப் பெருமானது திருப்பெயராகும். கூத்தரது பெற்றோர் சிவபெருமான் திருவடிகளில் சிறந்த அன்புடையார். ஆதலின், தமக்கு அரும் பெறல் மகனாகப் பிறந்த குழந்தைக்குக் கூத்தர் என்னும் பெயரைச் சூட்டி அருமையாக அழைத்து வந்தனர்.

கூத்தரது பெற்றோர் முக்கண் மூர்த்தியினிடத்து முதிர்ந்த அன்புடையவர்கள் ஆதலால், அக்கண்ணுதல் பெருமான் மீது மூவர் முதலிகளாகிய ஆளுடைய அரசும், ஆளுடைய பிள்ளையும், ஆளுடைய நம்பியும் பாடியருளிய தேவாரங்களையும், ஆளுடைய அடிகள் திருவாய் மலர்ந்த திருவாசகத்தேனையும் இளமை முதற் கொண்டே கற்பித்து வந்தனர். சமய நூல்களைப் பயிற்று வித்ததோடு இன்றி, இலக்கண இலக்கியங்களையும் கற்பித்து வைத்தனர். கல்வித் துறையில் கரைகண்டு புலமை மிகுந்த தந்தையார் கூத்தருக்குத் தொல்காப்பியம் அகத்தியம் முதலிய இலக்கண நூற்களையும், பத்துப் பாட்டு எட்டுத்தொகை முதலான சங்க நூற்களையும்

கற்பித்துவந்தனர். ஆகவே, கூத்தர் நல்ல தமிழ்ப்புலமை பெற்றுச் சிறந்துவிளங்கினர். வடநூற் பயிற்சியும் இவருக்கு இருந்தது என்பது இவர் பாடியுள்ள நூற்களில் அவ்வட சொற்களையும் தொடர்களையும் தகுந்த இடங்களில் ஆண்டு இருப்பதில் இருந்து தெரியவருகிறது.

## பெயரும் பெயர்க் காரணங்களும்

நடராசப் பெருமானிடத்து ஒட்டக் கூத்தரின் அருமைத் தந்தையாரும் தாயாரும் வைத்த அன்பின் பெருக்கினால் கூத்தர் என்ற பெயரிட்டு அழைத்ததை முன்பு கண்டோம். கூத்தர் நன்கு வளர்ந்து கல்வி கேள்விகளில் தலை சிறந்து விளங்க விளங்கக் **கூத்த முதலியார்** என்றும் கூறப்பட்டு வந்தார். இவர் பல கவிகளைப் புனையத் தொடங்கினர். அக்கவிகள் வருணனைகள் மிகுந்து காணப்பட்டன. அவ்வருணனைகளும் உலக நடை கடந்து விளங்கின. இவ்விரு காரணங்களால் இவரைக் **கௌடப் புலவர்** என்று அழைக்கவும் தொடங்கினர். வருணனைக் கவிகளையும், உலக நடைக்கும் அப்பாற்பட்ட கற்பனைகள் அடங்கிய கவிகளையும் இவர் பாடிய தட்சயாக பரணி என்னும் நூலில் காணலாம். அக்கவிகளையும் அனுயாசம் இன்றி விரைவுடன் பாடவும் தொடங்கினார். விரைவுடன் பாடும் இவரது திறத்தை மெச்சிய புலவர்கள் இவருக்குக் **கவிராட்சதன்** என்னும் பட்டம் ஈந்து பாராட்டினர். இவர் தம்மை ஆதரித்த அரசனால் காளமாகிய விருதினைப் பெற்றமையால் **காளக்கவி,** என்றும் கூறப்பட்டனர். இருமொழி நூல்களின் கருத்தைத் தக்க இடங்களில் பாடிவந்ததால் இவரை யாவரும் மெச்சினர். கூத்தர் கலைமகள் அருளை நிரம்பப்

பெற்றவர். ஒரு நாள் இவர் உறங்கிக்கொண்டிருக்கையில், நாமகள் இவர் கனவில் தோன்றித் தான் மென்று உண்டுகொண்டிருந்த தம்பலத்தினை இவர் வாயில் உமிழ்ந்து மறைந்ததாகக் கனவு கண்டனர். கனவு கண்டவுடன் விழித்தெழுந்த புலவர் சிகாமணியார் தம் வாயில் உண்மையாகவே தம்பலம் இருக்கக் கண்டார். தம் கனவு நினைவாகவே இருந்தமைக்குப் பெரிதும் உள்ளம் மகிழ்ந்து நாமகளைத் தம் உள்ளமாரத் துதிப்பாராயினர். அப்போதுதான் **அரும்பைத் தொள்ளாயிரம்** என்னும் அரிய நூலையும் பாடியருளினர். அதில் தமக்கு அம்மை அருள் செய்ததைப் பாராட்டிப் பாடிய பாடல்களே நிறைந்திருந்தன. இங்ஙனம் கலைமகளாகிய வாணியின் திருவருளைப் பெற்று அவ்வாணிக்கு உகந்த அடியவராக இருந்த காரணத்தால் **வாணிதாதன்** என்னும் பெயரையும் பெற்றனர்.

அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூலின் பாடல்களைச் சுவைத்தான் இவர் காலத்து மன்னனாகிய விக்ரம சோழன். அவன் "இப்பாடல்களில் ஒன்றை ஓட்டப் பாடுவீர்" என்று வேண்ட அவ்வாறே ஓட்டப் பாடியும் காட்டினர். அதனைக் கண்டு வியந்த விக்ரமன் "இவருக்கு இன்றுமுதல் **ஒட்டக் கூத்தர்** என்னும் பெயர் விளங்குவதாக" என்று குதூகலத்துடன் மொழிந்தனன். தாம் பாடிய உலாவில் இரண்டு கண்ணிகளையும் ஓட்டப் பாடினமையால் ஒட்டக் கூத்தர் என்ற பெயரைப் பெற்றதாகவும், பந்தயம் போட்டுப் பாடவல்லவர் ஆதலின் ஒட்டக் கூத்தர் எனப் பெயர் பெற்றார் எனவும் இவர் ஒட்டக் கூத்தர் என்று அழைக்கப் பட்டமைக்குக் காரணம் கூறுவர். (ஒட்டம் = பந்தயம்)

## சீரும் சிறப்பும் பேரும் புகழும்

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த வேளாளர்கள் புலவர்களை ஆதரிப்பதில் முன்னணியில் நிற்பவர்கள். அவர்களிலும் சடையப்ப வள்ளலாருடைய முன்னோரும் பின்னோரும் இந்தத் தொண்டில் மிகுதியும் ஈடுபட்டவர்கள். சடையப்ப வள்ளலாரின் திருத்தாதையார் சங்கர முதலியார் என்பவருக்கு உதவியாக ஒட்டக் கூத்தர் சிலகாலம் இருந்து வந்தனர். இவரது உதவி பெற்ற முதலியார் புலவர்க்கு உண்டி, உறையுள், முதலான மற்றும் பலவாகிய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவிவந்தார். இதனால், ஒட்டக் கூத்தர் வறுமையால் வாடாது நலனுறத் தம் வாழ்க்கையினை நடத்திவந்தார். தமக்கு ஆதரவு நல்கிய முதலியாருக்குத் தம் நன்றியினைக் காட்டும் பொருட்டு அவர் மீது **நாலாயிரக் கோவை** என்னும் நூலைப் பாடியருளினார். சிலகாலம் முதலியாருடன் இருந்து வாழ்ந்த பின்பு, அரசரை நாடி அவர்களின் ஆதரவையும் பெற்றுத் தம் தமிழ் அறிவினை அவர்கட்கும் காட்டப் புலவர் விரும்பினார். இவ்விருப்பம் மேற்கொண்ட புலவர் நேரே சோழ நாட்டு மன்னனை விக்ரமனை அடைந்தார். இவர் காலத்தில் சோழ நாட்டைக் காத்து வந்த மன்னன் அவனேயாவன். அவன் இவரது தமிழ் அறிவின் திறத்தை நன்கு அறிந்து கொண்டனன். இவரைத் தனது அரசவைப் புலவராக ஏற்பாடு செய்து கொண்டான். புலவர் இல்லாத அவை பொலிவுறுதல்லவா? இவரைத் தன் ஆத்தானக் கவியாக ஏற்றுக் கொண்டதும், இவருக்குக் கம்பளம், கங்கணம், யானை, சுண்டலம், விருதுச் சின்னங்கள், பொன்னரி மாலை முதலான பொருள்களை ஈந்து சிறப்புச் செய்தனன்.

தம்மை ஆதரித்த வள்ளலாகிய திருவெண்ணெய் நல்லூர் சங்கர முதலியார் மீது நாலாயிரக் கோவை பாடிய புலவர் சிகாமணியார் தம்மை ஆத்தானக் கவியாக அமைத்துக்கொண்ட அரசர் பெருமான் மீது ஒரு தனி நூலைப் பாடாது ஒழிவரோ? ஒருக்காலும் ஒழியார். ஆகவே, விக்கிரம சோழன் மீது ஓர் உலாப் பிரபந்தம் பாடியருளினார். அதுவே **விக்ரம சோழன் உலா** என்று பெயர் பெறும். இவ்வுலாவில் பல கண்ணி கள் காணப்படும். அக்கண்ணிகளுள் இரண்டு கண்ணி களை ஒன்றாக இணைத்துப் பொருள் கெடாத நிலையில் பாடி முடிக்க என்று விக்ரம சோழன் வேண்ட, உடனே அவ்வாறே இரண்டு கண்ணிகளையும் இணைத் துப் பொருள் மாறாத நிலையினும் பாட்டுக்குரிய இலக் கணம் வழுவாத முறையிலும் பாடிக்காட்டினர். இங்ங னம் ஆயாசம் இன்றி விரும்புவார் விரும்பும் வண்ணம் கவிபுனையும் ஆற்றலைக் கண்ட காவிரி நாடன் புலவர் சிங்கத்திற்கு மேலும் பல வரிசைகள் ஈந்து மகிழ்ந்தான்.

பொன்னி நாடனும் சோழ வேந்தனால் பல சிறப்புக் கள் நாளும் நாளும் சிறக்கப் பெற்றாலும், தாம் செருக் குறாது, "அகத்தியனார், திருஞானசம்பந்தர், முருகப் பெருமானார் போன்றவர்கள் முன்னிலையில் என் அறிவு சிற்றறிவன்றோ? எனக்குச் செய்யும் சிறப்புக்களைப் பெறத் தக்கவர்கள் இவர்களேயாவர். ஆகவே, எனக்கு இவ்விருதுகளும் சிறப்புக்களும் பொருந்தா" என்று கூறியுள்ளார். இவ்வாறு புலவர் அவ்வப்பொழுது தம்மை ஆதரித்தவர்கள் மீது கோவை, உலா, அந் தாதி முதலியபிரபந்தங்களைப் பாடிச் சிறப்புற்றதனால், இவரைக் கோவை உலா அந்தாதி பாடும் புலவர்களில் தலைசிறந்தவர் என்னும் கருத்தில், "கோவையுலா

அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன் " என்று புகழ்ந்து கூறத் தலைப்பட்டனர்.

## கூத்தரும் குலோத்துங்கனும்

விக்ரம சோழன் ஒட்டக் கூத்தரோடு பல்லாண்டு இருந்து தமிழ்ச் சுவையினைச் சுவைக்கும் பேற்றினைப் பெற்றிலன். மண்ணுடு விடுத்து விண்ணுடு புகும் காலம் நெருங்கவே, நிலவுலகைப் பிரிந்து சென்றான். இவனுக்குப் பிறகு குலோத்துங்கன் அரசுக் கட்டில் ஏறினன். தனயனும் தந்தையாரைப் போலவே புலவர் பெருமானிடத்துப் பேர் அன்பு கொண்டிருந்தான். அன்பு கொண்டதோடு இன்றிப் புலவர் பெருமானைத் தன் ஆசிரியனுகவும் கொண்டான். இவர்பால் பல தமிழ் நூல்களைப் பயின்று வந்தனன். ஐந்திலக்கணங்களையும் ஓதி உணர்ந்தனன். இவன் மீதும் ஓர் உலா பாடினுர். குலோத்துங்கனுக்குப் பிறகு குமார குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்தான். அவனும் தன் தந்தையாரைப் போலவே ஒட்டக் கூத்தரிடத்தில் பேர் அன்பு பூண்டு, ஆசிரியராகக் கொண்டு அருந்தமிழ் நூல்களைப் பயின்று வந்தான். தானுகக் கவி புனையும் ஆற்றலையும் பெற்றனன். ஒட்டக் கூத்தரையே தனக்குரிய தந்தையாகவும் தாயாகவும் ஞான குருவாகவும் கருதி வழிபட்டு வந்தான்.

இங்ஙனம் மூவரையும் அவர்கள் இருந்த காலத்தில் பாடிய சிறப்பினுல் அவர்களுள் ஒருவன், (இன்னுன் என்று அறிதற்கு இல்லை) ஓர் ஊரை மான்யமாக அளித்தனன். அதுவே **கூத்தனூர்** என்பது.

குமார குலோத்துங்கன் அரசிருக்கையைத் தான் ஏற்றபோது பலரும் பலவாறு வாழ்த்தினர். அப் பலருள் ஒட்டக் கூத்தரும் ஒருவர். இப்புலவர் பெருமான் இதுதான் தம் அருமை மாணவனைச் சிறப் பித்தற்குரிய ஏற்ற தருணம் என்று அவனது செங் கோற் சிறப்பை மிக மிக உயர்த்த வேண்டி,

"ஆடும் கடைமணி நா அசை யாமல் அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்த பிரானென்பர்"

என்று பாடிக்கொண்டே வருகையில், இந்தப் புகழ்ச்சி தனக்கு உரியதே என்றாலும், ஆசிரியர் தன்னை அளவு கடந்து புகழ்ந்துவிட்டதாகக் கருதி, உடனே புலவர் அதற்கு மேல் சீரினை எடுப்பதற்கு முன்,

—நித்தம்நவம்
பாடும் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தர் பதாம் புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன்என் றேஎன்னைச் சொல்லுவரே"

என்று பாடி முடித்தான் என்றால், குமார குலோத்துங் கன் தன் ஆசிரியப் பெருந்தகையாரிடத்து எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதை நன்கு அறியலாம் அன்றோ! இதனைக் கேட்டார் அனை வரும் அரசர் கோமானைப் புகழ்ந்து பேசினர். ஒட்டக் கூத்தரது பெருமை மேலும் விளக்கமுற்றது. இவருக் குச் சீரும் சிறப்பும் பேறும் புகழும் உயரலாயின. இவன் மீதும் ஓர் உலா பாடினார். இவன்மீது உலா பாடியதோடு நில்லாமல், ஒரு பிள்ளைத் தமிழ் நூலையும் பாடினதாகத் தெரிகிறது. மேலே குறிப்பிடப்பட்ட மூவர்மீது பாடிய மூன்று உலாக்கள் அடங்கிய நூலே இப்பொழுது மூவருலா என்று நிலவி வருகிறது.

புலவர் ஏறு மன்னனது அவையினை அலங்கரித்தா ரேனும் அவ்வப்பொழுது வெளியிடங்களுக்கும் சென்று வருவது வழக்கம். அங்ஙனம் சென்று வருங் கால் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திரிபுவனம் என் னும் ஊருக்குச் சென்றிருந்தார். அங்குச் **சோமன்** என்னும் பெயரிய செல்வர் இல்லத்தில் நல்விருந்தின ராய்ச் சில நாள் தங்கி இருந்தார். புலவர் சிகாமணியார், வருகை உணர்ந்த செங்குந்த மரபினர் இவரைக்கண்டு வணங்கச் சென்றனர். புலவரும் செங்குந்த இனத்தவர் ஆதலின், இவரைக் கொண்டு தம் குலப்பெருமை உணர்த்தும் நூல் ஒன்றைப் பெறவிரும்பினர். அவ்வள வுக்கு இனப்பற்று அச் செங்குந்த மரபினர்க்கு இருந்தது. ஆகவே, அவர்கள் தமிழ்ச்சுவை நன்கு பொருந்திய நூல் ஒன்றைத் தம் குலப்பெருமை விளங் கப் பாடுமாறு வேண்டினர். ஆனல், இனத்தவர்கட்கு இருந்த அந்த இனப்பற்று, ஒட்டக் கூத்தருக்கு இல்லை. ஆகவே, அவர் அத்தகைய நூலைப் பாடிக் கொடுக்க மறுத்துவிட்டார். மேலும், அவர்களை நோக்கி, “நம் குலப் பெருமையினை நாமே பாடிச் சிறப்பித்துக் கொள்ளுதல் பெருமை தராது. நம்மைப்பற்றிப் பிறர் புகழவேண்டும்; பாடவேண்டும். நம்மை நாமே புகழ்ந்து கொள்ளுதல், நீரை வார்த்து விளக்கை எரி விப்பது போன்றது” என்று கூறினர். ஆனல், செங்குந்த மரபினர் கூத்தரது வார்த்தைகளைக் கேட்டி லர். ‘மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா’ அன்றோ! ஆகவே, அவரை மேலும் மேலும் தொந்தரவு செய்தனர். இந்தத் தொந்தரவைப் பொறுக்க முடியா மல் **சோமன்** என்பானிடம் விடைபெற்றுக் கொண்டு திருவிடை மருதூரை யடைந்தனர். அங்கேயும் இந்த மரபினர் இவரை விட்டபாடு இல்லை. இவர் திருக்

கோயில்புகுந்து இறைவனை வணங்கித் திரும்பும்போது, இவரை மீண்டும் தொந்தரவு கொடுத்தனர். எப்படியோ தப்பி மீண்டும் திரிபுவனம் வந்து சோமன் இல்லம் புகுந்து "என் மரபினரான செங்குந்தர் என்னை, நெருங்கி அடிக்கவும் தள்ளவும், ஓர் இடத்தில் சேர்த்து அடைக்கவும் முயல்கின்றனர். ஆக நான் இனி வெளியேறேன்" என்ற பொருள் அடக்கி ஒரு பாடல் பாடி உள்ளேயே இருந்தனர். வெளியே இருந்த செங்குந்த மரபினர், புலவர்க்கு உண்டியும் உறையுளும் ஈந்து உதவும் வள்ளலிடம் தம் கருத்தைக் கூறினால், ஒருவேளை நிறைவேறும் என்று கருதி, சோமன் என்னும் வள்ளலிடம், தம் மரபாகிய செங்குந்த மரபின் சீரும் பேரும், சிறக்க ஒரு நூலைத் தமிழ்ப் பாவால் புலவர் பெருமானைப் பாடிக் கொடுக்கச் செய்யுமாறு வேண்டி நின்றனர். சோமன் என்னும் வள்ளலும் கூத்தர் குதூகலமாக இருக்கும் சமயம் பார்த்து, செங்குந்தரது குலாபிமானத்தை எடுத்துக் கூறி ஒரு நூல் பாடியருளுமாறு வேண்டினர். ஒட்டக் கூத்தர் அப்பொழுது யாதும் கூறிலர். தம்மை ஆதரிக்கும் வள்ளலே கூறும்போது, தாம் பாடாதிருத்தல் முறையன்று என்று கருதினர். 'இயல்வது கரவேல்' என்பதுதான் நம் மூதாட்டியார் அருமை மொழியாயிற்றே. ஆகவே, புலவர் சிகாமணியார் செங்குந்த மரபினரின் பெயர்க்கே காரணமான ஈட்டியினைப்பற்றி எழுபது பாடல்களைப் பாடினர். அப்பாடல்கள் அடங்கிய நூலே **ஈட்டி எழுபது** என்பது. இந்நூலில் செங்குந்த மரபின் தோற்றம், வளர்ச்சி, அருமை, பெருமை, வீரம் முதலியன நன்கு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இந் நூல் ஒட்டக் கூத்தருடைய திருவாயால் பாடப்பட்டதனால் இதன் தமிழ்ச் சுவையின்

மேன்மையினைக் கூறவும் வேண்டுமோ? வேண்டா அன்றோ! இந்நூலைப் பெற்ற செங்குந்தர்கட்குச் சொல்ல ஒண்ணு ஆனந்தம் பொங்கி எழுந்தது. கரை காணு இன்பக் கடலில் மூழ்கினர். கூத்தரைப் புகழ்ந்து கொண்டாடினர். பாராட்டுப் பல செய்தனர். அதன் பின் கூத்தர் மீண்டும் சோழன் சபையினை அணுகினர்.

## குலோத்துங்கன் திருமணம்

குமார குலோத்துங்கன் தனது செங்கோல் முறைமையினைச் சிறப்புற நடத்தி வந்தான். அவனுக்கு மணம் புரியும் பருவமும் வந்துறவே, அவன் குணத்திற்கும் நலத்திற்கும் ஏற்ப மணமகளைத் தேடி மணமுடிக்கும் பொறுப்பு ஒட்டக் கூத்தரையே சேர்ந்தது. ஆகவே, புலவர் மணமகளைத் தேடலுற்றார். குமார குலோத்துங்கன் தந்தை தான் உயிர் விடும் தருவாயில் தன் குலமும் பாண்டிய குலமும் பகையின்றி நட்புடன் விளங்கப் பாண்டியன் திருமகளையே தன் மகன் குமார குலோத்துங்கனுக்கு மணமுடிக்குமாறு புலவரிடம் கூறியிருந்தான். அது தம் நினைவிற்கு வரவே, புலவரும் மணமகளின் பொருட்டுப் பாண்டிய நாடு செல்லப் புறப்பட்டார்.

புலவர் நல்ல நாளில் புறப்படலானார். தம் வருகையினை முன்கூட்டி, செழியர்பிரானுக்கு அறிவித்திருந்தார். தென் பாண்டி நாட்டானும் புலவர் வருகையினை ஆவலோடு எதிர்நோக்கி இருந்தான். புலவர் சென்றதும் இன்முகம் காட்டி, நல்லுரை கூறி நன்முறையில் வரவேற்றான். முதலில், சில மணி நேரம் வேறு பல விடயங்களைக்குறித்து அளவளாவிப் பேசிய பிறகு, ஒட்டக் கூத்தர் தாம் வந்த காரியத்தைக் கூறி

ஞர். பாண்டியன் விளையாட்டாகப் புன்னகைபூத்துப் "புலவர் ஏறே, எம் குலத்து மகளை மணந்து கொள்ளச் சோழ மன்னர்க்கு என்ன தகுதியுள்ளது?" என்று வின விஞன். ஒட்டக்கூத்தர் பஞ்சவன் கேட்ட விஞ, வேடிக் கைவிஞ என்று அறியாதவராய்ச் சோழர் குடியினைப் பாண்டியர் குடியை நோக்கத் தாழ்வுடையது என்னும் கருத்தில் பாண்டியன் கூறிஞன் என்று கருதி, உடனே வீறு கொண்டு, "அரசர் ஏறே, சோழரது பட்டத்துக் குதிரையாகிய கோரத்துக்குச் சமமாக உமது பட்டத்துப் பரியாகிய கனவட்டம் நிகராகுமா? கங்கையில் புனிதமாகிய காவிரியாற்றிற்கு ஒப்பாக உமது நாட்டு வைகையாற்றினை நிகராக்க ஒண்ணுமா? சிவனர் விரும்பும் எம் குல மாலையாகிய ஆத்தி மாலைக்கு ஒப்பாக உமது கைப்புக் குணம் மாருத வேப்பமாலை நிகர் எனக் கூற முடியுமோ? எம் குல மூல காரணஞன சூரியனுக்கு நேராக உம் குல மூல காரணஞன சந்திரன் எதிர் நிற்க இயலுமோ? எங்கள் புலிக்கொடிக்கு நிகராக உங்கள் மீன் கொடி நிகர் எனக் கூறுவீரோ? 'ஊரெனப்படுவது உறையூர்' என்று எம் போன்ற புலவர்கள் சிறப்பிக்கும் உறையூருக்கு நிகர், உமது கொற்கையம் பதியோ? இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து சோழர் குடி உயர்ந்ததா? அன்றிப் பாண்டியர் குடி உயர்ந்ததா? என்பதை நீரே தெளிமின்" என்று எடுத்துக் காட்டினர்.

பாண்டியனது அவைக் களத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த புகழேந்தியார் ஒட்டக் கூத்தர் கூறிய கூற்றுக்களுக்கு எதிர்மாற்றம் கூறலுற்ருர். "புலவீர், நீர் கூறுவனவும் உண்மையே. ஆஞல், யான் இதுபோது கூறுவனவற்றையும் சிறிது செவி சாய்த்துக்கேண்மின்:



பாண்டியன் அரச சபை

அகத்தியனுர் தமிழ் அறிந்தது நும் நாட்டகத்துள்ள நேரிமலையிலா? அன்றி எம் பாண்டி நாட்டகத்துள்ள பொதிகை மலையினிலா? சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் உறந்தையில் நடந்தனவா? அன்றி மதுரையிலே நடந்தனவா? திருமால் எடுத்த பத்துப் பிறப்புக்களில் புலிப் பிறப்பு உண்டா? அன்றி மீன் பிறப்புண்டா? திருஞான சம்பந்தர் எழுதி விட்ட ஏடு எதிர்த்து வந்தது வைகையாற்றிலா? அன்றிக்காவிரி நதியிலா? பேயை ஓட்டப் பயன் தருவது வேம்பா? அன்றி ஆத்தியா? கடல் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன் என்னும் பெயர் பெறுமாறு கடல் பணிந்தது, எம் பாண்டிய குலத்தவனையா? அன்றி உம் சோழ மரபினரில் எவரையேனும் ஒருவரையா? இந்தக் குறிப்புக்களை அறிவீராயின் பாண்டியர் குலமும் பாண்டிய நாடும் சோழர் குலத்தினும் சோழ நாட்டினும் சிறந்தவை என்பன தெரியவில்லையா?'' என்று உடனே பதிலுரை பகர்ந்தார். பாண்டியன் இவ்விரு புலவர்களும் இங்ஙனம் தம்தம் கல்வியறிவு தோன்ற உரையாடியதைக் கேட்டு மகிழ்ந்து, இவ்வாய்ச் சண்டை முற்றுதிருக்கத் தடுத்துத் தன் மகளைக் குமார குலோத்துங்கனுக்கு மண முடிக்க இசைந்தான். பாண்டியன் எண்ணத்தின்படியே அவனது சுற்றத்தாரும் வாழ்க்கைத் துணைவியாரும் இசைவு தந்தனர். பாண்டியன் கணியரை அழைத்து நன்னாள் ஒன்றைக் குறிப்பிடுமாறு பணிக்க, அவர்களும் திருமண நாளைக் கணித்துக் கொடுத்தனர். அத்திருமண நன்னாள் குறிக்கப்பட்ட ஓலையினைப் பெற்று ஒட்டக் கூத்தர் சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டார். குலோத்துங்கனைக் கண்டு மதுரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை முதலில் இருந்து

இறுதிவரை எடுத்து மொழிந்தார். மன்னன் அவற்றைக் கேட்டுத் தம் ஆசிரியப் பெருந்தகையாரது ஆற்றலைப் புகழ்ந்து கொண்டாடினான்.

குலோத்துங்கனுக்கும் பாண்டியன் திருமகளுக்கும் குறித்த நாளில் திருமணம் நடந்தேறியது. திருமணம் மணமகள் இல்லத்திலேயே நடந்தது. குமார குலோத்துங்கனும் பன்னாள் தன் மாமனார் அரண்மனையில் தங்கிப் பெருவிருந்து அயின்று வந்தான். பின்பு பாண்டியர் பெருமானிடம் விடை பெற்றுத் தன் நாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானான். பாண்டிய மன்னன் தன் தகுதிக் கேற்பத் தன் மருகனான குமார குலோத்துங்கனுக்கு வேண்டிய அளவுக்கு ஸ்ரீதனமாகப் பல பொருள் ஈந்தான். தான் அருமையாக வளர்த்த திருமகளுக்குத் தன்னைப் போல இருந்து அன்புரை கூறும் பொருட்டுத் தன் அவைக்களப் புலவராகிய புகழேந்தியாரையும் உடன் அனுப்பினான். அவர் மேலும் அரசனது திருமகளுக்கு அருந்தமிழை அறிவுறுத்திய ஆசிரியர் ஆதலால், உடன் போதலும் முறையே ஆயிற்று. மணமகனும் மணமகளும் மற்றும் உள்ளாரும் சோழ நாடு புக்கனர். மன்னனும் தேவியும் அன்புற்று இன்புற்று வாழலானார்.

ஒட்டக் கூத்தர், புகழேந்திப் புலவர் தம்மை ஒரு பெரிய சபையில் எதிர்த்துப் பேசியதால், அவர் சோழ நாடு புகுந்ததும் அரசனிடம் கூறி அவரைச் சிறையில் அடைத்தனர். புகழேந்தியார் தாம் சிறையில் இருந்த போது அங்கு அடைப்பட்டிருந்தவர்கட்குத் தமிழ் கற்பித்து ஒட்டக் கூத்தரது கல்விச் செருக்கை அடக்கினர். இந்தப் பகை நீடியாதிருக்கச் சோழமா தேவியார்

தமது யுக்தியினால் புகழேந்தியாரை விடுதலை செய்தனர். அதன் பின் இருவரும் தம்முள் பகை ஒழிந்து இன்புற்று அன்புற்று வாழலாயினர்.

## கூத்தர் காலம்

கூத்தரது காலத்தையும் அறிவோமாக. கூத்தர் வயதால் மிக மிக முதியவர். ஆண்டு பல உயிரோடு வாழ்ந்தவர், இல்லையானால் விக்கிரம சோழன் காலத்திலும், அவன் மகன் குலோத்துங்கன் காலத்திலும், அவனுடைய மகன் குமார குலோத்துங்கன் காலத்திலும் அவர் இருந்ததாக நிலவும் கதை பொய்யாகிவிடும். ஒட்டக் கூத்தர் காலத்தில் கம்பர் இருந்ததாகக் கூறப்படுகிறது. கம்பரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறப்பட்டிருப்பதால் ஒட்டக் கூத்தர் கம்பர் காலமாகிய கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் அவருக்கு முன்பும் விக்கிரம சோழன் காலத்தவராகச் சொல்லப்படுவதால் கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலும் இருந்தவர் என்று கொள்வோமாக.

# 3. சேக்கிழார்

## சேக்கிழார் தோற்றம்

தமிழ் நாட்டில் மிகச் சிறந்து விளங்கிய நாடுகள் மூன்று. அவை சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனப்படும். அந்நாடுகட்கு ஈடாகத் **தொண்டைநாடும்** பெருமைபெற்று இருந்தது. **பாலா**று என்னும் ஆற்று வளத்தால் அந்த நாடு பலவிதத்திலும் உயர்ந்து விளங்கியது.

இத்தகைய நீர்வளம் நிலவளம் மிகுந்த தொண்டை நாட்டில் இருபத்து ' நான்கு கோட்டங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று **புலியூர்க் கோட்டம்** என்பது. கோட்டங்களினுள்ளே பல ஊர்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று **குன்றத்தூர்** என்பது. அதனை இப்போது குண்ணத்தூர் என்று கூறி வருகிறார்கள். இது சென்னையிலிருந்து பதினைன்கு கல் தூரத்தில் உள்ள ஒரு கிராமம். இந்தக் கிராமத்தில் பல குடிகள் வாழ்ந்து வந்தனர். அவற்றுள் **சேக்கிழார்** குடியும் ஒன்று. சைவ உலகமும் தமிழ்நாட்டுமக்களும் செய்த புண்ணியத்தின் பயனாகச் **சேக்கிழார்** என்னும் திருத்தொண்டர் பிறந்தார். அவருக்கு இளைய சகோதரர் ஒருவருண்டு. அவர் பெயர் **பாலறாவாயர்** என்பது. சேக்கிழாருக்கு **அருண் மொழித்தேவர்** என்று மற்றொரு பெயர் இருப்பினும், அவர் எல்லோராலும் சேக்கிழார் என்ற குடிப் பெயராலேயே கூறப்பட்டுவந்தார்.

## வேளாண் குடிச் சிறப்பு

சேக்கிழார் குடி உழுதுண்டு வாழும் ஒப்பிலாத வேளாளர் குடியாகும். வேளாளர் சொல் தவருதவர்கள்; நீதி வழுவாதவர்கள்; நல்ல குடியினர் என்று எல்லோராலும் போற்றப்பட்டவர்கள். சொல் உறுதி உள்ளவர்கள். இதற்குப் பழயனூர் நீலியின் சதியால் வணிகன் இறக்க, அதன் நிமித்தம் எழுபது வேளாண்குடி மக்களும் தமது உயிரைக் கொடுத்தார்கள் என்பதே போதிய சாட்சியாகும். ஏர் பிடிக்கும் கைதான் செங்கோல் பிடிக்கும் என்ற எண்ணத்தால் எங்கும் ஏர் வளம் திகழச் செய்தவர்கள். சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் வாயிலார், சத்தியார், விறல் மிண்டர், திருநாவுக்கரசர், சாக்கியர், கோட்புலியார், மன்னக் கஞ்சாறர், ஏயர்கோன் கலிக்காமர், இளையான் குடி மாறர், மூர்க்கர், அரிவாள் தாயனூர், செருத்துணையார், முனையடுவார், ஆகிய பதின்மூன்று பேர்களும் வேளாண் குடி மக்கள். இக்குடி மக்கள் வரும் விருந்தினரை உபசரிப்பதில்பேர் போனவர்கள். வேளாண்மை என்னும் சொல்லுக்குப் பொருளாகப்பிறர்க்குஉபகாரம் செய்வது என்னும் குணத்தை, இவர்கள் தம் குல ஒழுக்கமாகக் கொண்டதனால் வேளாளர் என்று அமைக்கப் பெற்ற பெருமை நிறைந்தவர் என்றாலும் பொருந்தும்.

## திருநாகேஸ்வரம் எடுப்பித்தல்

இந்த வேளாண் குடியில் தோன்றிய சேக்கிழார் பெருமான் கல்வி கேள்விகளில் நிகரற்றவராய் அகத்தியம், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சைவத் திருமுறைகள் முதலிய இலக்கிய நூல்களைச் சந்தேக

மறக் கற்று உணர்ந்திருந்தார். அருண்மொழித் தேவரான சேக்கிழார் பெருமான் சைவவேளாளர் குலத்தினர் ஆனதால், இறைவனாகிய சிவபெருமானிடத்தில் மாறாத அன்பு கொண்டிருந்தார். சிவபெருமானிடம் அன்புகொண்டது போல் அவருள்ளம் சிவனடியார்களிடமும் அளவில்லா அன்பு கொண்டிருந்தது. முன்னோர்கள் தமது உள்ளத்தை ஒரு மனப்படுத்துவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தமது ஆத்மார்த்த திருக்கோவிலாகக் கொள்ளுதல் வழக்கம். அது போலவே சேக்கிழாரும் சோழநாட்டுத் திருப்பதிகளிலொன்றான **திருநாகேஸ்வரம்** என்ற கோவிலின்பால் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டிருந்தார். ஆகவே, தமது ஊருக்கு அருகில் வடமேற்கில் ஒரு திருத்தலத்தை அமைத்து, அதற்குத் திருநாகேச்சரம் என்று திரு நாமம் சூட்டி அங்கு ஆண்டவனைப் பூசித்துவந்தார். இன்றும் குன்றத்தூரில் இத்தலத்தை அனைவரும் கண்டு வணங்கலாம். சேக்கிழார் பெருமான் இகத்திற்குரிய தம் குலத்தொழிலை நல்ல முறையில் நடத்தியும் பரத்திற்குரிய பரமன் பாத பூசையையும் பண்புடன் இயற்றியும் வரலாயினர்.

## சோழன் ஆராய்ச்சி

சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் தம் இகபரத்திற்குரிய கடன்களைச் செய்து கொண்டு வருகையில், சோழ நாட்டை அரசாண்டு வந்தவன் இரண்டாம் குலோத்துங்கன். இவன் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் அரசு புரிந்த மன்னனாவான். இவனுக்கு அனபாயன் என்ற பெயரும் உண்டு. கல்வி கேள்விகளில் இவன் மிகவும் வல்லவன். தனக்கு முன்னிருந்த புலவர்

களின் பொன் மொழிகளை ஆராயும் ஆவலுடையவன்; கலாரசிகன். அந்த அரசன் ஒரு நாள் ஔவைப்பாட்டியார் பாடிய,

"வேழம் உடைத்து மலைநாடு; மேதக்கச்
சோழ வளநாடு சோறுடைத்து — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்
[றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

என்னும் பாடலைக் குறித்துச் சிந்திக்கலானான். 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்னும் அப்பாட்டில் உள்ள தொடர் அவனது சிந்தனையைப் பெரிதும் குழப்பியது. ஆகவே, அதன் உண்மையை அறிய வேண்டி, மூன்று கேள்விகளை ஓலைச் சுவடியில் எழுதினான். அவை எவராலும் எளிதில் பதில் கூறமுடியாத கேள்விகள்; கேட்போர் திடுக்கிடும் வினாக்கள். அவையே,

உலகைவிடப் பெரியது எது ?

மலையைவிடப் பெரியது எது ?

கடலைவிடப் பெரியது எது ?

என்பன. இவ்வினாக்களுக்குச் சாதாரணமாகப் பதில் சொல்லிவிட முடியாது. அறிவுமிக்க பெரியோர்களால் ஆராய்ந்து பார்த்து விடை கூறப்படவேண்டிய வினாக்கள். சான்றோரைப் பெற்றது தொண்டை நாடு என்று ஔவைப் பாட்டி கூறிய உண்மையை உணர, அந்த ஓலை நறுக்கினைத் தன் ஆட்களிடம் கொடுத்துத் தொண்டை நாடு சென்று இவற்றிற்குரிய விடைகளைத் தெரிந்து வருமாறு அனுப்பினான்.

## சேக்கிழார் மந்திரியாதல்

அந்தக் காலத்தில் தொண்டை நாட்டுத் தலைவன் சோழ மன்னனால் அனுப்பப்பட்ட ஓலையைப் பார்த்து, இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற வல்லவர் சேக்கிழார் பெருமான் அன்றி, மற்ற எவராலும் இயலாது என்றுணர்ந்து, அன்னவரை வரவழைத்து அந்த ஓலையைக் காண்பித்தனன். அருண்மொழித் தேவராம் சேக்கிழார் அதை அன்புடன் வாங்கிப் படித்து அக மகிழ்ந்து அவ்வோலையிலேயே மூன்று திருக்குறள் பாக்களைப் பதிலாக எழுதி உடனே கொடுத்துவிட்டார். கேள்விகள் மிகவும் கடினமானவை. இவற்றிற்கு எப்படிப் பதில் கூறுவது? என்ன பதில் பொருந்தும்? என்று யோசித்துக் கொண்டிருந்த தொண்டை நாட்டுத் தலைவன், சேக்கிழார் அளித்த ஓலையை வாங்கி ஊன்றிப் படிக்கலுற்றான். அதில்,

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது"

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்பவைகள் விடையாக எழுதப்பட்டிருந்ததைக் கண்டு, அவைகள் அந்தக் கேள்விகளுக்கு மிகவும் பொருத்தமானவை என்று அகமகிழ்ந்து, சேக்கிழாருக்குப் பல சன்மானங்கள் அளித்துப் பதிலைச் சோழ மன்னன் ஆள் வசமே கொடுத்தனுப்பினான்.

தொண்டை நாட்டிலிருந்து வந்த விடைகளைக் குலோத்துங்க மன்னன் பார்த்தான்; அளவில்லாத

ஆனந்தம் கொண்டான். அவற்றைத் தன் சபையை அலங்கரிக்கும் புலவர்களுக்கும் படித்துக் காண்பித்தான். அங்குள்ள அறிஞர் யாவரும், "அவ்விடை மிகவும் பொருத்தமானதே. தொண்டைநாடு சான்றோருடைத்து என்பதில் சிறிதும் சந்தேகமில்லை" என்று கூறி மகிழ்ந்தனர். அரசன், "இந்த நுண்ணறிவு உடையவரைத் தன்னுடைய அரசாட்சியில் மந்திரியாக அமர்த்தினுல் நாடு நலம்பெறும். 'அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்' என்று முன்னோர்கள் மொழிந்துள்ளனர்" என்று எண்ணி இவ்விடைகளை எழுதி அனுப்பிய அறிஞரை அங்கு அனுப்புமாறு மறுபடியும் ஒரு திருமுகம் தொண்டை நாட்டிற்கு அனுப்பினுன். அதுகண்ட தொண்டை நாட்டரசன் சேக்கிழாரைச் சோழ மண்டலத்திற்கு அனுப்பி வைத்தான்.

சோழ மன்னன் அருண்மொழித் தேவரை அதிக அன்புடனும் நன்மதிப்புடனும் வரவேற்றுபசரித்துத் தனது அரசியலில் முதல் மந்திரிப் பதவியை அவருக்களித்து, **உத்தம சோழப் பல்லவர்** என்ற பட்டமும் அளித்துப் பெருமை பெற்றுன். சேக்கிழாரும் தமக்கரசனுல் அளிக்கப்பட்ட மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் அரசை நடத்திவரலாயினுர். அமைச்சர் இயல்பெனத் திருவள்ளுவர் வகுத்துக் கூறிய சொல் வன்மை, வினைத் தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, தூது, மன்னனைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை முதலிய பண்பாடுகளை அனுசரித்துத் தம் கடமைகளை ஆற்றி வரலானுர்.

## சேக்கிழாரைப் புராணம் பாட வேண்டல்

குலோத்துங்க மன்னன் அறிவு ஆராய்ச்சியில் அதிக ஆவலுள்ளவன் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. ஆகவே, தன் சபையில் நல்ல அறிஞரைக் கொண்டு நற்கவிகள் பலவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுமாறு கேட்டுவந்தான். சபையறிஞர் விளக்கம் கூறுவதைச் சேக்கிழாரும் கேட்டுவந்தார். இப்படிக் கேட்டு வருகையில் உத்தம சோழப் பல்லவருக்குத் தாமும் சிலவற்றிற்குப் பொருள் கூறவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. இதனை அரசனிடம் தெரிவித்தார். அரசனும் அவர் விருப்பத்திற்கு உடன்பட்டு அவ்வாறே கூறுமாறு வேண்டினான்.

அருண்மொழித்தேவர் அரிய செயல்களைச் செய்து பெரியார்கள் எனப் பேர் பெற்ற சிவனடியார்கள் வரலாறுகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

அனபாயன் அன்புடன் அடியார்களின் வரலாறுகளைத் தினந்தினமும் கேட்டு அவ்வரலாற்றில் மனத்தைப் பறிகொடுத்தான். "எப்பொழுது பொழுது விடியும்? இன்று யாருடைய வரலாறு கூறப்போகிறாரோ?" என்று தாகமெடுத்துத் தவித்தவன் தண்ணீரைக் காண எப்படி ஆவலோடு இருப்பானோ, அது போலச் சிவனடியார் கதைகளை அதி ஆர்வமோடு செவி கொடுத்துக் கேட்க ஆவலோடு இருந்தனன். சேக்கிழாரும் தொடர்ந்து தனியடியார்களான சிவனடியார்கள் அறுபத்து மூவர் வரலாறுகளையும், தொகை அடியார்களான ஒன்பது தொகையடியார்களின் வரலாறுகளையும் சொல்லி முடித்தார். சோழன் புலவர் பெருமானை நோக்கி, "ஐயா, நீங்கள் சொன்னவைகள் இம்மைக்கும் மறுமைக்கும் பலன் அளிப்பவைகளாக உள்ளன.

இந்த வரலாறுகளுக்குள்ள உண்மைகளைத் தாங்கள் எப்படி அறிந்தீர்கள்? அதையும் அன்புடன் அறிவிக்க வேண்டும்'' என்று அரசன் வேண்ட, அருண்மொழித் தேவர், ''அரசே, சைவ சமய ஆசிரியர் நால்வருள் ஒருவரான தம்பிரான் தோழராம் **ஆளுடைய நம்பிகள்** தமது தேவாரமாகிய திருப்பாடலில் ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்ற ஆரம்பத்தினையுடைய பதினொரு பாட்டுக்கள் அடங்கிய பதிகம் ஒன்றை அருளிச்செய்தார். அதுதான் **திருத் தொண்டத் தொகை** என்று கூறப்படுவது. இந்தப் பதிகத்தைச் சிறிது வகைப்படுத்தித் திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் திருவருள் பெற்ற **நம்பியாண் டார் நம்பி** என்ற பெரியார் **திருத்தொண்டர் திரு வந்தாதி** என்ற பெயரோடு ஒரு நூலைப் பாடி உள்ளார். இவையே அன்றி இவர்கள் வரலாற்றைத் தெரி வதற்குச் சைவத்திருமுறைகளும் துணைசெய்கின்றன'' என்று அன்பும் அறிவும் துலங்க அறிவித்தார். அருண் மொழியார் கூறியதைக் கேட்ட அரசன் அன்பு மேலிடப்பட்டு, ''அமைச்சரே, இந்த வரலாறுகளை நீங்கள் கூற, இங்குள்ள அனைவரும் கேட்டு இன்புற் றோம். இத்துடன் இவை மறைந்து போகக்கூடாது. ஆதலால், இந்த வரலாறுகளை நவரசங்களும் ஒன்று திரண்ட காவியமாகப் பாடி அருளவேண்டுகிறேன்'' என்று கேட்டுக்கொள்ளச் சேக்கிழாரும் அதற்கு இணங்கினர்.

## சேக்கிழார் தில்லையை அடைந்து புராணத்தைப் பாடுதல்

உத்தமச் சோழப் பல்லவர் அனபாயனிடம் விடை பெற்றுச் சிதம்பரத்தை அடைந்தனர். அரசர்

பெருமான் புலவர் பெருமானுக்கு எவ்விதத்திலும் குறை ஏற்படாதிருக்க வேண்டிய பொருள்களை அளித்தான்.

சேக்கிழார் சிதம்பரத்தை அடைந்து திருக்குளத்தில் மூழ்கி மன்றுள் ஆடியின் சன்னிதி நாடி முன் நின்று தேவாரத்திருமுறையைப் பாடி வணங்கி, "அம்பலவாணா, அடியேன் அடியார் வரலாறுகளைப் பாடும் பாக்கியம் பெற்றேன். அதை நன்கு முடிக்க நீர்தாம் அடியெடுத்து அருளவேண்டும். 'காண்பாரார் கண்ணுதலாய் நீ காட்டாக்காலே' என்பது அப்பர் பெருமானின் அருள்வாக்கல்லவா?" என்று பணிந்து நின்றார். வேண்டுவோர் வேண்டுவதைக் கொடுக்க வல்ல கடவுளாம் நடராசப் பெருமான் அசரீரியாக எல்லோர் காதுகளிலும் இனிது கேட்கும்படியாக **'உலகெலாம்'** என்ற தொடர்மொழியைக் கூறி அருளினார். இந்த அற்புதத்தைக் கண்ட அங்குள்ளவர்கள் அனைவரும் ஆனந்தப் பரவசமாயினார். உத்தமச் சோழப் பல்லவர் சிவனை வணங்கித் திருநீறு பெற்று ஆயிரங்கால் மண்டபத்தை அடைந்தபோது, தில்லை வாழ் அந்தணர்களும் மற்றுமங்குக் கூடியிருந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்து வந்தனர். சேக்கிழார் ஆண்டவன் தமக்கு அருள் செய்த "உலகெலாம்" என்னும் மங்கல மொழியை முன்புவைத்து,

"உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

எனப் பாடத் தொடங்கினார். 'உலகெலாம்' என்னும் நன்மொழியே தம் நூலுக்குச் சீவன் ஆனதால், அதை

முதல் இடை கடை என்ற மூன்று இடங்களிலும் வைத்துப் போற்ற வேண்டும் என்பதற்காக இறைவனால் அளிக்கப்பட்ட பல்லக்கில் திருஞானசம்பந்தர் ஏறும் பொழுது இடையில் இந்தத் தொடரை வைத்தே பாட்டமைத்தார். புராணத்தைப்பாடி முடிக்கையிலும் முடிவில் இந்தத் தொடரையே அமைத்துப் பாடி முடித்தார்.


## நூல் அரங்கேற்றமும் ஊர்வலமும்

ஒரு வருடத்தில் புராணம் முடிந்தது. அனபாயன் அதைக் கேள்விப்பட்டதும் தனது பரிவாரங்களோடு சிதம்பரத்தை அடைந்து சேக்கிழாரைக் கண்டான். சேக்கிழாரின் திவ்வியமங்கள சிவ வேடத் தோற்றத்தைக் கண்ட அரசன், தான் மன்னன் என்பதையும் புலவர் தனது மந்திரி என்பதையும் அறவே மறந்து சிரமேல் இரு கரங்களையும் கூப்பி வணங்கினான். மேலும், அந்த நூலுக்குச் சேக்கிழாராலேயே பொருள் கூறப்பட வேண்டுமென அரசன் புலவரைப் பொருள் விரித்துக் கூறுமாறு வேண்டினான். அருண்மொழியாரும் அதற்குடன்பட்டு அந்தப் பாடல்களுக்கு இலக்கிய இலக்கண உதாரணங்களை மேற்கோள்காட்டி விரிவாகப் பொருள் கூறி வந்தார். புராணப் பிரசங்கம் ஒரு வருடத்தில் முடிவுபெற்றது. இந்த ஓர் ஆண்டும் சிதம்பரத்திற்கு எத்திசையில் இருந்தும் அன்பர்களும் பொதுமக்களும் வந்து கூடினார்கள். புராணச் சொற்பொழிவாகிய புனித உரை ஒவ்வொருவர் இதயத்திலும் இடம்பெற்றது. வெளியூர்களில் இருந்து வரும் அன்பர்களுக்கு வேண்டிய வசதியும் உதவியும் அனபாய மன்னன் ஏற்பாடு செய்திருந்தான்.

புராணத்தைக் கேட்டவர்கள், புலவர் பெருமான் சேக்கிழாரைப் பெரிதும் பாராட்டிப் பேசிப் புகழ்ந்தனர்.

"நீலக்கடலையும் நீந்திக் கரை சேரலாம். வானத்து விண் மீன்களை வரிசையாய் எண்ணிவிடலாம். கடற்கரை மணலைக் கணக்கிட்டுக் கூறலாம். ஆழியின் மீன்களை அளவெடுத்துரைக்கலாம். ஆனால், சிவனடியார்களின் வரலாற்றைச் செப்புதல் அரிதினும் அரிது. அதைச் சொல்ல வல்லவர் சேக்கிழார் அன்றி மற்றெவராலும் முடியாது" என்று புகழ்ந்து கூறினர். சிலர் "மதுர கவிகளில் ராமாயணத்தை எழுதிய வான்மீக முனிவரும் இவருக்கு ஈடு ஆவரோ? என்றனர். மற்றும் சிலர், "ஐந்தாம் வேதம் என்று அவனியில் கூறப்படும் மகா பாரதத்தைப் பாடிய வேத வியாச முனிவரும் இவருக் கொப்பாவரோ?" என்று கூறினர் "வடமொழி இலக் கணமாகிய வியாகர்ணத்தை எழுதிய பதஞ்சலி முனி வரும் நிகராவரோ?" என்றனர். சிலர் "முத்தமிழ் மொழிந்த உத்தம முனிவராம் அகத்திய முனிவரும் உவமை கூறுதற்கு உரியவர் ஆக மாட்டார்" என்று மொழிந்தனர். சிலர் "வெண்டாமரையில் விளங்கும் கலை மகளும் தன் உறைவிடமாகிய தாமரையை மறந்து சங்கப் புலவர் நாவிலிருந்து நீங்கித் தன் நாதனும் நான் முகன் நாவைவிட்டு விலகிச் சேக்கிழார் நாவினில் சேர்ந்து விட்டனள். அதனால்தான் இவர் இவ்வாறு இனிமையாகப் பாடினார்" என்று கூறிக் குதூகலம் கொண்டனர். இங்ஙனம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவித மாகப் புலவர் திலகரைப் புகழ்ந்து போற்றினார்கள்.

இத்தகைய சிறப்பிற்குக் காரணரான சேக்கிழார் பெருமானையும் அவர் அருளிச் செய்த திருத்தொண் டர் புராணத்தையும் ஆனையின் மீது அமர்த்தி ஊர் வலம் நடத்த உள்ளங் கொண்டான் அரசன். அரசன் எண்ணப்படியே புலவரையும் அவர் இயற்றிய புரா ணத்தையும் சைவத் திருமுறைகள் பதினொன்றையும்



சேக்கிழார் ஊர்வலமாக வருதல்

கரியின் மீது களிப்போடு இருத்தித் தான் பின்னால் அமர்ந்து வெண் கவரி வீசி, வீதி வழியே மாபெரும் உலாவினை நடத்தி வைத்தான். திரு உலாவும் இனிது நடந்தது. அது முடிந்ததும் அனைவரும் ஆண்டவன் ஆலயத்தில் சென்று வணங்கினர். அரசனும் அகங்களித்து முன்பு புலவருக்கு முதல் மந்திரிப் பதவி அளித்த போது தன்னால் உத்தமச் சோழப் பல்லவர் என்று பட்டம் அளித்தது போல, இப்பொழுதும் திருத்தொண்டர் சிறப்பினைச் செப்பிய காரணத்தால் **தொண்டர் சீர் பரவுவார்** என்னும் திருப்பெயரையும் சூட்டிச் சிந்தை களித்தான்.

கண்டிருந்தவர் அனைவரும் கரகோஷம் செய்யச் சேக்கிழார் பெருமானுக்குப் பல சிறப்புக்கள் செய்யப் பட்டன. பின்பு திருத் தொண்டர் புராணமாம் **பெரிய புராணம்** இறைவன் அடி எடுத்து ஆரம்பித்துக் கொடுக்கப்பட்ட நூல் ஆனதனால் அதனையும் சைவத் திருமுறை பதினொன்றுடன் சேர்த்துச் சைவத் திருமுறை பன்னிரண்டு என முறைப்படுத்தினர்.

## சைவத் திருமுறைகளும் சிறப்பியல்புகளும்

ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்காகிய திருக்கடைக் காப்பு முதல் மூன்று திருமுறைகளாகவும், ஆளுடை அரசுகள் பாடிய தேவாரம் நான்கு முதல் ஆறு திருமுறைகளாகவும், ஆளுடைய நம்பிகள் பாடிய தேவாரமாகிய திருப்பாடல் ஏழாவது திருமுறையாகவும், ஆளுடைய அடிகளார் பாடிய திருவாசகம் திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டுகள் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரம், பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாய் திருமுகப் பாசுரம் முத

லாக நம்பியாண்டார்பிரபந்தங்கள் ஈறாக உள்ள பாடல்கள் பதினோராம் திருமுறையாகவும், பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் சைவத் திருமுறைகள் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

முறை என்பது ஒழுங்கு. இலக்கண இலக்கிய ஒழுங்குகள் அமைந்த நூல்களை முறை என்று நமது முன்னோர்கள் மொழிந்து வந்தனர். இங்குக் கூறப்பட்டுள்ள நூல்களாகிய முறைகள் இறைவனின் புகழ்களையும் அடியார்களின் அன்பையும் ஒழுங்காகச் சொல்லியிருக்கின்றமையால் இவற்றிற்கு முன் **திரு** என்னும் அடை கொடுக்கப்பட்டுத் திருமுறைகள் என்று சொல்லப்படுகின்றது. திரு என்னும் சொல் சிறப்பு, அழகு, கண்டோர் விரும்பும் தன்மை எனப் பல பொருள்களைக் கொண்டிருப்பதனால் திருமுறைகள் பன்னிரண்டும் அழகுடையனவாயும் சிறப்புடையனவாயும் 'அனைவரும்' விரும்பும் நிகரிலாதனவாயும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் திருமுறைகள் பன்னிரண்டும் **ஓம்** என்னும் ஓர் எழுத்து ஒரு மந்திரமாகிய பிரணவ மந்திரமாகத் திகழ வல்லன. இந்த உண்மையினை இந்தத் திருமுறைகள் அமைந்திருக்கும் ஒழுங்கு முறையிலிருந்தே நன்குதெரிந்து கொள்ளலாம்.

முதல் முறையின் முதல் பாட்டானது தோடுடைய செவியன், என்று தொடங்கப் பட்டுப் பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றுப் பாடல் 'உலகெலாம்' என்று முடிதலின், தோ, என்னும் எழுத்தில் உள்ள ஓ என்னும் எழுத்தும் உலகெலாம் என்னும் சீரின் ஈற்றிலுள்ள ம் என்னும் எழுத்தும் சேர்ந்தபோது ஓம் என்று ஆவதை அறிந்து இந்த உண்மையை உணர்க. ஆகவே, இத்திருமுறைகள் பிரணவம்தான் என்பதற்குச் சந்

தேகமே யில்லை யல்லவா? இந்தச் சிறந்த பொருள் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்ட பின்புதான் வெளிப்படலாயிற்று. அவ் விளக்கம் கேட்ட அனபாயன் தான் செய்த அரிய செய் கைக்கு மனம் மிக மகிழ்ந்தான்.

தொண்டர் சீர் பரவுவார்க்கு மேலும் பல பரிசு கள் கொடுத்துப் பரவசமடைந்தான். சேக்கிழார் பெரு மானும் சிதம்பரத்தில் வாழ்ந்து அம்பலத்தாடுவார் அடி வணங்கி வாழ்ந்து வரலாயினர்.

## சேக்கிழார் பெருமையும் நூலின் சிறப்பும்

சேக்கிழார் பெருமான் புலவர் வரிசையில் வைத்துப் போற்றக்கூடிய பெருமை வாய்ந்தவர். எப்படித் திரு வள்ளுவர் தெய்வப் புலவர் என்று எவராலும் கூறும் பேறு பெற்றனரோ, அப்படியே இவரும் "தெய்வப் புலவர் சேக்கிழார்" என்ற சிறப்பு நாமம் பெற்றவர்.

சேக்கிழார் நூல் ஆசிரியர் மட்டுமல்லர். அவர் ஒரு சிறந்த போதகாசிரியராகவும் ஞானசிரியராகவும் உரையாசிரியராகவும் திகழ்ந்தார். அடியார்களின் வரலாறுகளை விரிவாகப் பாடியிருப்பதனால் நூல் ஆசிரியராகின்றார். பரசமயப் படுகுழியில் படாத படி பல பக்திப் பாடல்களைப் பாடிப் போதித் திருப்பதனால் போதகாசிரியராய்ப் புகழ்பெற்றார். ஆண்டவனை அடையும் அரிய மார்க்கத்தைப் பல செய்யுட்களில் செப்பியிருப்பதால் ஞானஆசிரியர் என்று நாட்டில் நவிலப் பெறுகின்றார். பதிகங் கள் பலவற்றிற்குப் பொருள் விளக்கம் செய்திருப்ப தால் உரையாசிரியர் என்று உலகில் உரைக்கப்படுகின் றார். இவரை வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர், "எங்கள் பாக்கியப்

பயனுய்ப் பதி குன்றை வாழ் சேக்கிழானடி சென்னி யிருத்துவாம்'' என்றும், "குன்றைநகர்க் குலக் கவியே வல்லான் அல்லால் கருத் தொண்டர் எம்போல் வார் எவ்வாறு தெரிந்துரைப்பர்?'' எனத் தம் வாயார மனமாரப் புகழ்கின்றார் மகா வித்துவான் திரிசிபுரம் மீனுட்சி சுந்திரம் பிள்ளையவர்கள். "கல்லும் கரையக் கவிபாடும் கனிவாய்'' என்றும் "முதிரும் அருட்கவி பாடிய புலவன்'' என்றும் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டக் கவிபாடிய வலவ'' என்றும் பாடிப் பரவசமுற்றார். தமிழில் தலை சிறந்து விளங்கிய நூல்கள் இன்னவை என்று எடுத்துக் கூற வந்த கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியார், சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணத்தையும் சேர்த்து உரைத்ததனல் இந்த நூலாசிரியரின் புகழும் நூல் பெருமையும் நன்கு விளங்குகின்றன அல்லவா? அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமை தமிழ் நாடெங்கும் பிரகாசிக்கின்றது.

"வள்ளுவர் செய்குறளும் வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்
**தொண்டர் புராணம்** தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்''

என்பர் கொற்றவங் குடியார் சேக்கிழார் பெருமானின் பொருள் மிகுந்த பாடல்களைப் படித்துப் இன்புறுவது அனைவரின் கடமையாகும்.

இவரது காலம் இரண்டாம் குலோத்துங்கனும் அனபாயன் காலமாகிய கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதி எனக் கொள்க. இதன் விரிவை மேலும் காண விரும்புவோர், கோவை. சுப்பிரமணிய முதலியார் எழுதிய **சேக்கிழார்** என்னும் நூலில் கண்டு அறிவாராக.

# 4. கச்சியப்பர்

## காஞ்சியின் சிறப்பு

"முத்திதரும்நகரேழுள்முக்கியமாம் காஞ்சி" என்று சிறப்பிக்கப்பட்ட பெருமையுடையது காஞ்சிபுரம். இது பல்லவர்கட்குத் தலைநகராக விளங்கியது. இப்பதி சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய சமயங்கள் வளர்தற்கு நிலைக்களனாக இருந்தது. ஆனால், இப்பொழுது, சைவமும் வைணவமும் தழைத்து ஓங்கும் தலைசிறந்த பதியாகத் திகழ்கிறது. அந்நகரில் சைவ ஆலயங்களும் வைணவ ஆலயங்களும் மிகுதியாக உண்டு. முக்கியமாகச் சைவக் கோவில்களாகக் குறிப்பிடத்தக்கவை ஸ்ரீ ஏகாம்பர நாதர் கோவில், ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில், குமரகோட்டம், கைலாச நாதர் கோவில், கச்சபேஸ்வரர் ஆலயம், ஓணகாந்தன்தளி முதலியன. வைணவ ஆலயங்களாகச் சொல்லக்கூடியவை ஸ்ரீ வரதர் கோவில், உலகளந்தப் பெருமாள் கோவில், பாண்டவர் பெருமாள் கோவில், சொன்னவண்ணம்செய்தபெருமாள் கோவில் முதலியன. இங்குக் குறிப்பிடப்பட்ட சைவ வைணவ ஆலயங்களுள் பல, சைவ நாயன்மார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும் பாடப்பட்ட பெருமை நிறைந்தவை. மேலே குறிப்பிடப்பட்ட ஆலயங்கள்தாம் காஞ்சிபுரத்தில் உள்ளன என்று கருதவேண்டா. எண்ண முடியாத ஆலயங்கள் அங்கு உண்டு. இதனால்தான் 'அடிக்கொரு கோவில், அடிக்கொரு குளங்கள் காஞ்சிபுரத்தில் உண்டு' என்ற மொழியும் வழங்கப்பட்டு வருகிறது. வயல்களிலும், வரப்புக்களிலும் சிவலிங்

கங்கள் இருப்பதைக் காணலாம். வீடு கட்ட கடைக்கால் தோண்டினாலும் பூமியில் புதையுண்டு கிடந்த சிலைகளையும் சிவலிங்கங்களையும் எடுக்கலாம். இத்தகைய பெருமை நிறைந்த நகரை நம் வாழ்நாளில் ஒரு முறையாயினும் பார்த்து விடுதல் சிறப்புடையதாகும். இவ்விடத்தில் பல சிற்ப ஓவியங்களின் பெருமையைக் கண்டு களிக்கலாம். அசோகர் காலத்தில் நடப்பட்ட கல் தம்பங்களையும் காணலாம். அவற்றில் எழுதப்பட்ட பௌத்த மதக் கொள்கைகளின் உண்மைகளையும் உணரலாம். வீதிகள் யாவும் பரந்து காணப்படும். இன்றும் ஜன நெருக்கம் மிகுதியும் உடையதாய் வாணிபத் துறையில் சிறப்புடையதாய் விளங்குகிறது. புடவைகட்குப் பேர்போன இடங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. நெசவுத் தொழிலுக்கும் இது நல்ல பெயர் வாங்கிய இடமாக இருந்ததனால் "காஞ்சிபுரத்திற்குச் சென்றால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்" என்னும் பழமொழியும் எழலாயிற்று. இன்னோரன்ன சிறப்புடைய பதி இக்கச்சியம் பதியாதலின், "காஞ்சிக்குப் போகாதவர் கழுதை பிறப்பாகப்பிறப்பர்" என்னும் பழமொழியையும்கூடக் கூறத் தொடங்கினர்.

## பிறப்பும் கல்வியும்

இத்தகைய சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்ற காஞ்சிபுரத்தில் **காளத்தியப்பர்** என்னும் பெயரிய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மறந்தும் புறந்தொழாச் சைவ சமயத்தவர்; காலை, பகல், மாலை ஆகிய முப்போதும் இறைவனைத் தீண்டிப் பூசை முதலியன சிறப்புக்களைச் செய்யும் சிவாலய குருக்கள் மரபினைச் சார்ந்தவராய்த் திகழ்ந்தவர். இங்ஙனம் சைவ ஆகம விதிப்படி சிவபெருமானை முப்போதும்

தீண்டிவழிபடும் மரபினர் சிவாசாரிய மரபினர் என்று கூறப்படுவது பண்டைய மரபாகும். ஆகவே, காளத்தியப்பர் தம் மரபுப் பெயரால் காளத்தியப்ப சிவாசாரியர் என்று அழைக்கப்பட்டார். அவர் தம் குலத் தொழில் படி காஞ்சிபுரத்தில் சிறந்து விளங்கும் முருகப் பெருமான் ஆலயமாகிய குமர கோட்டத்தில் சைவ குருக்களாகிய அர்ச்சகர் பணியை மேற்கொண்டிருந்தார்.

காளத்தியப்ப சிவாசாரியார் முருகப் பெருமானை எப்போதும் தீண்டி வணங்கி வந்த காரணத்தால் நல்லதொரு நாளில் தமக்கு ஓர் ஆண்மகவு பிறக்கும் பேற்றைப் பெற்றார். ஆண்மகன் பிறந்தான் என்றால் ஆர்தான் அகமகிழாதவர்? காளத்தியப்ப சிவாசாரியாரும் அன்னாருடைய இல்லக்கிழத்தியாரும் மன ப கக் களித்தனர். இது காஞ்சிபுர ஏகாம்பர நாதருடைய திருவருளினால் கிடைத்த பெரும்பேறு என்று எண்ணினார்கள். ஆகவே, தமக்குப் பெறுதற்கரிய பேறாகக் கிடைத்த திருமகனாருக்கு ஏகாம்பரநாதர் பெயராகிய **கச்சியப்பர்** என்னும் திருப்பெயரையே சூட்டித் தம் கண்ணினைக் காக்கின்ற இமையில் காத்து வந்தனர். குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அகத்தழகு முகத்தில் தெரியும் என்பதற்கேற்ப இளம் பாலகன் முகத்தில் கல்வி ஒளியும், கடவுள் அன்பு ஒளியும் ஒருங்கே விளங்கலாயின. இவற்றைக் கண்ட பெற்றோர் உள்ளம் களித்து, இவன் பிற்காலத்தில் கற்றோரும் மற்றோரும் பாராட்டும் முறையில் சிறந்து விளங்குவான் என்பதை அறிந்து இன்புற்றனர்.

காளத்தியப்ப சிவாசாரியார் சிறந்த கல்விமான் ஆதலின், தம் திருமகனார்க்குச் சொத்தினைத் தேடி

வைக்காமல், "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி, அவை யத்து முந்தி இருப்பச் செயல்" என்னும் வள்ளுவனார் வாக்கினை உட்கொண்டு, தம் திருக்குமாரனார்க்குக் கல்வியினைப் பயிற்றுவித்து வந்தார். கச்சியப்பரும் காலத்தை வீண்போக்காமல் கல்வியில் கருத்தூன்றி வடமொழி வியாகரண வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலியவற்றையும், தண்டமிழ் மொழியில் அகத்தியம் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், சைவத் திருமுறைகள் முதலானவற்றையும் சந்தேக விபரீதம் யாதும் நேராவண்ணம் கற்றுத் தேர்ந்தார். கல்வி வளர்ந்தது போல வயது வளர்ந்து வந்தது. கச்சியப்பர் சகலாகம பண்டிதராய்த் தமிழ்க் கடலாய் விளங்கி, **கச்சியப்ப சிவாசாரியார்** என்று யாவரும் அழைக்கத் தக்க ஆண்டினையும் நிரம்பப் பெற்றார்.

## கந்த புராணம் பாடி முடித்தல்

கச்சியப்ப சிவாசாரியார் தம் தந்தையார் வயது முதிர்ந்து மூப்புற்றமையால் அன்னார் செய்து வந்த அரும்பணியாகிய குமரனை முப்போதும் தீண்டிப் பூசனைபுரியும் தொழிலில் தாமும் ஈடுபட்டார். அதாவது குமர கோட்டத்துக்கு அர்ச்சகரானார். குமரனை வழிபட, வழிபட அவனிடத்தில் அன்பும் மிகுவதாயிற்று. அல்லும் பகலும் அறுமுகனார் உருவமே இவருடைய உள்ளத்தில் குடி கொண்டது.

காஞ்சிபுரவாசிகள் கச்சியப்ப சிவாசாரியருடைய கல்வியின் ஆழத்தை உணர்ந்து, வடமொழியில் உள்ள மகா ஸ்காந்தத்தைத் தமிழ் மொழியில் பாடித் தரும்படி இவரை வேண்டினர். இவரும் இப்பணியினை மனம்

உவந்து செய்ய ஒப்புக் கொண்டனர். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்" என்பது நம் தமிழ் மறையின் கட்டளை அல்லவா? ஆதலின், வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லவரான இவரே அப்பெரும் பணி செய்ய வல்லவர் என்பதை அறிந்தே காஞ்சிபுரவாசிகள் இவரை வேண்டினர். காஞ்சிபுரவாசிகளும் நல்ல கல்வியறிவுடையவர்கள். அதனால்தான் அப்பர் பெருமானும் "கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்" என்று உளமாரப் பாடிப் புகழ்ந்துள்ளார்.


நல்லறிஞர்கள் தாம் ஒரு பெரிய நூலை எழுத விரும்பினால், அதற்கு இறைவன் துணையினை நாடுவது ஒரு மரபாகும். சேக்கிழாரும் அடியார் பெருமைகளை எழுதத் தொடங்கும் முன் நடராசப் பெருமானை வேண்டி, அப்பெருமான் '**உலகெலாம்**' என்ற அடியினை அசரீரியாகக் கூற அதனையே முதலாகக் கொண்டு புராணத்தைப் பாடி முடித்தார் என்பதை முன்பு படித்துள்ளோம் அல்லவா? கச்சியப்ப சிவாசாரியரும் தாம் பாடப் போகும் கந்த புராணத்திற்கு அக்கந்த புராணத்திற்கு உரியவனான கந்தனது அருளை நாடினார். அப்போது, அவருக்குத் **திகட சக்கரம்** என்னும் தொடர் அசரீரியாக எழவே, அதனையே முதலாகக் கொண்டு நூலைப் பாடத் தொடங்கினார். தினமும் சில பாடல்களைப் பாடுவார். அப்பாடல்கள் அடங்கிய ஏடுகளை முருகப் பெருமான் திருவடிகளில் வைத்துக் கோயிலைப் பூட்டிக் கொண்டு வந்து விடுவார். அடுத்த நாள் காலையில் ஆலயத்தைத் திறந்து தாம் எழுதி வைத்த ஏடுகளைப் பிரித்துப் பார்ப்பார். அப்படிப் பார்க்கும் போது, அவ்வேடுகளில் சில திருத்தங்

கள் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு முருகப் பெருமான் தம் மாட்டு வைத்த அன்பின் பெருக்கை எண்ணி எண்ணி உள்ளம் களிப்பார். இப்படியே நூல் முழுமையும் இவரால் பாடப்பட்டு முருகப் பெருமானால் திருத்தப்பட்டது.

## நூல் அரங்கேற்றம்

கந்தபுராணம் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் என்னும் ஆறு காண்டங்களையுடையதாய், பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு விருத்தப் பாக்களைக் கொண்டதாய் இனிதில் பாடப்பட்டு முடிந்தது. இந்த நூலை நல்லதொரு நாளில் ஆசிரியரைக் கொண்டே அரங்கேற்றம் செய்விக்க வேண்டுமெனக் கச்சிப்பதியினர் வேண்டிக்கொண்டனர். குமரகோட்டத்தில் முருகப்பெருமான் திரு முன்பே இது அரங்கேற்றப் படவேண்டுமென்று தீர்மானித்து அதற்கெனத் தனித்தொரு மண்டபம் அமைக்க ஏற்பாடு செய்தனர். அரங்கேற்ற நாளில் ஊர்ப்பொதுமக்களும், வடமொழி தென்மொழிகளில் பாண்டித்தியம் வாய்ந்த புலவர் சிகாமணிகளும் மற்றுமுள்ள ஆண்களும் பெண்களும் திரண்டு கூடினர்.

கச்சியப்ப சிவாசாரியர் தாம்பாடிய நூலைவாசித்துப் பொருள்கூறத் தொடங்கினார். அப்படித் தொடங்கும் போது, கந்த புராணத்தின் தொடக்கச் செய்யுளாகிய, "**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**" என்னும் பாடலுக்குப் பொருள் கூறத்தொடங்கி, முருகப் பெருமானால் எடுத்துக் கொடுக்கப்பட்ட திகட சக்கரம் என்னும் தொடரைத் திகழ் + தசம் + கரம் என்று



கந்தபுராண அரங்கேற்றம்

பிரித்து, 'விளங்குகின்ற பத்துத் திருக்கரங்களையுடைய' என்று பொருள் விரிக்கத் தொடங்கும் போது, சபையில் இருந்த ஒரு பெரும் புலவர்-இலக்கண இலக்கியங்களை ஐயம் திரிபற ஓதி உணர்ந்தவர்—எழுந்து "சிவாசாரிய சுவாமிகளே, சொற்களுக்குரிய பொருள் அழகாக அமையுமாறு கூறத் தொடங்கினீர். ஆனால், யான் அறிந்த இலக்கணங்களில், **திகழ்+தசம்** என்னும் தொடர், **திகடசம்** என்று புணரும் புணர்ச்சியிலக்கணத் தினைக் கண்டதில்லை. ஆகவே, முதற் செய்யுளே இலக்கண மரபுக்கு ஏற்றதாக இல்லை. இதற்குச் சமாதானம் கூறாமல் மேலே நூலுக்குப் பொருள் விளக்க நாங்கள் சம்மதியோம்" என்று கூறினார். சபையில் இருந்த மற்றவர்களும் இதனை ஆமோதித்தனர்.

## தடையும் விடையும்

கச்சியப்பர் அப்போது ஒன்றும் அதற்கு விடை கூறாமல், "அன்பர்களே! நீங்கள் எழுப்பிய இவ்வினாவிற்கு விடை நாளை கூறுகின்றேன். இன்று இந்த அளவில் இதனை நிறுத்திவைப்போம். நாளை இந்த நேரத்தில் கூடுவோம்" என்று மட்டும் கூறி முடித்துக் கொண்டார். யாவரும் தம் தம் இல்லம் புகுந்தனர். அன்று இரவு முருகப்பெருமான் முன் நின்று, "ஆண்டவனே, என்னை இந்த அவமானத்திற்கு ஆளாக்கலாமோ? நீர் எடுத்துக் கொடுத்த தொடருக்கும் சிற்றறிவுடையார்கள் குற்றம் கற்பித்து விட்டனரே! நாளை நான் அவர்கட்குப் புரியும்படியாகக் கூறிவிட்டேன். நீர்தாம் எனக்குத் துணையாக வேண்டும்" என்று தம் குறைகளைக் கூறி மிகவும் மனமுருகித் துதித்தபின் தம் வீடு புகுந்து உறங்கலாயினார். அன்பர் படும் அல்லலைக் கண்டு

ஆற்றுதவராகிய ஆறுமுகப் பெருமான், கச்சியப்பர் கனவில் தோன்றி, "அன்பனே, நீ வருந்தாதே. நாளைக் கும் கூட்டத்தில் இந்த முதற் செய்யுளைக் கூறிப் பதச் சேதம் செய்து பொருள் விரிக்கத் தொடங்குக. அப் போதும், சபையில் உள்ளவர் ஆட்சேபனை கூறத் தொடங்கினுல், அந்த வேளையில், அச்சபையினிடையே ஒரு புலவன் எழுந்து, அதற்கு விடை கூறுவன். அஞ்ச வேண்டா" என்று கூறி மறையக் கச்சியப்பர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே எழுந்துகொண் டார். முருகப்பெருமானை வாயாரத் துதித்துப் போற் றினார். பொழுது எப்போது விடியும் விடியும்? என்று காத்துக் கொண்டிருந்தார். பொழுதும் விடிந்தது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டார். குமரப் பெருமான் ஆலயத்திற்குச் சென்றார். கோவில் வேலை களையும் செய்து முடித்துப் பின் நூலும் கையுமாகக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

கூட்டம் முன்னினும் அதிகமாகக் கூடியிருந்தது. "புலவர் நேற்றுக் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகின்றாரோ? அதைக் கேட்போம்" என்ற ஆவலுடன் யாவரும் அமர்ந்திருந்தனர். ஒரு சிலர், "நேற்றுக் கேட்ட கேள்வி, ஒரு சிக்கலான கேள்விதான். கேள்வியைக் கேட்டவரும் சாதாரணமானவர் அல்லர். அவரும் வடமொழி, தென்மொழி இலக்கணங்களை அறிந்தவர்தாம். ஆதலால், ஒரு வேளை கச்சியப்பர் பதில் கூற முடியாமல் இருக்கவும் நேரிடும்" என்று பேசிக் கொண்டனர். ஒரு சிலர், "அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது. கச்சியப்பர் முருகப்பெருமானுடைய திருவருள் முற்றிலும் பெற்றவர். ஆதலின், அவர்க்கு யாதொரு தீங்கோ அவமானமோ வந்திடாது" என்றும்

கூறிக் கொண்டனர். இப்படிப் பலரும் பலவாறு எண்ணிக் கொண்டும், பேசிக்கொண்டும் இருக்கையில் கச்சியப்ப சிவாசாரியார் தாம் முதல் நாள் கூறத் தொடங்கியது போலவே முதற் செய்யுளின் முதல் இரண்டு சீர்களுக்கும் பொருள் கூறத் தொடங்கித் திகழ் + தசம் + கரம் என்று பதப் பிரிவு செய்து உரை கூற ஆரம்பிக்கையில், நேற்றுத் தடையை எழுப்பிய அப்புலவரே, "ஐயா, இவ்வாறு பிரித்துப் பொருள் கூறுதற்கு இலக்கண விதி இல்லை என்று நேற்றே தடை செய்ய, அதற்கு இன்று சமாதானம் கூறுவதாகக் கூறி ஒன்றும் இலக்கண விதி காட்டாமல் முன்போலவே கூறத் தொடங்குகிறீரே" என்று சரமாரியாகப் பேசிக் கொண்டு போகையில் திடுமென ஒரு புலவர் சபை நடுவே இருந்து எழுந்து, "சபையோர்களே, 'நாம் கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு' என்று கலை மகளே கருதுகின்றாள். இதனை நாம் முதலில் உணர வேண்டும். இங்குக் கூறப்பட்ட திகழ் + தசம் + கரம் என்னும் தொடர் திகடசக்கரம் என்று புணர்தற்குரிய விதியினைப் புத்தமித்திரரால் எழுதப்பட்ட **வீர சோழியம்** என்னும் இலக்கண நூலில் சந்திப் படலத்தில் பதினெட்டாம் செய்யுளில் கண்டு தெளிக" என்று கூறித் தம் கையில் இருந்த இலக்கண நூலாகிய வீர சோழியத்தில் அவ்விதியடங்கிய இடத்தினையும் வாசித்துக் காட்டி அமர்ந்தார். எல்லோரும் அவ்விதி அத்தொடரின் புணர்ச்சிக்குப் பொருத்தமாக இருத்தலை அறிந்து, கச்சியப்பரைக் கொண்டாடத் தொடங்கினர். இங்ஙனம் இடையில் இலக்கணம் காட்டியவர் திடுமென அங்கிருந்து மறைந்ததை அறிந்து, புலவராக வந்தவர் முருகப் பெருமானே என்று உணர்ந்து, கச்சியப்பரை

மேலும் கொண்டாடத் தொடங்கினர். கச்சியப்பருக்கும் கந்தப்பெருமானுக்கும் இருக்கின்ற அன்பின் பிணிப்பை நன்கு அறிந்து கொண்டனர். கச்சியப்பர் ஒரு தெய்வப் புலவர் என்று சிறப்பித்துப் பேசினர். நூலுக்குத் தடை கூறிய புலவர் சபையில் எழுந்து நின்று கச்சியப்பரை வணங்கி, "ஐயா, உம் பெருமையை உணராமல் என் சிறுமையால் இவ்வாறு இச்சபையில் உம்மைக் கேள்வி கேட்டேன். என்னை மன்னிப்பீராக" என்று கேட்டுக் கொண்டார். கச்சியப்பர் அவரை அமரச் செய்து "அன்பரே, நீர் செய்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்! நீர் இந்தத் தடையினை எழுப்பவில்லையாயின், முருகப் பெருமான் நேரே வந்து விடைகூறும் பாக்கியத்தைப் பெற்றிருப்பேனு? இந்நூல் அம் முருகப்பெருமானுல் திருத்தப்பட்டது என்ற உண்மையும் இதனுல் நன்கு விளங்குகின்ற தன்றே? நீர் செய்த தடை என்னையும் பெருமை படுத்தியதல்லவா ? ஆகவே, இதற்கு யான் மன்னிக்கவும் வேண்டுமோ? இதற்கு என் உளமார்ந்த நன்றி யறிதலான வணக்கத்தினைச் செலுத்துகின்றேன்" என்று கூறி மேலே புராணத்தைப் படித்துப் பொருள் கூறிவந்தார். புராணமும் ஓர் ஆண்டுவரை பொருள் விரிக்கப்பட்டு வந்தது. நூலின் அரங்கேற்றமும் இனிதின் முடிந்தது. எல்லோரும் நூலையும் நூல் ஆசிரியரையும் போற்றினர்.

## நூலாசிரியரைப் பெருமைப் படுத்தல்

இந் நூல் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் நயம் பல தோன்றக் கூடியது என்றும், படிக்கப் படிக்கப் பொதுவாகத் தெய்வ பக்தியும், தமிழ்மொழியினிடத்து ஆர்வமும், சிறப்பாக முருகப் பெருமானிடத்தில் பேர்

அன்பும் ஊட்ட வல்லது என்றும், இதனிடத்து அமைந்த செய்யுட்கள் முப்பழத்தின் சுவை போல் இனிக்க வல்லவை என்றும் சிறப்பித்துப் பேசினர். உண்மையில் இந்நூலை ஓதுபவர் இந்திரராகித் தேவ லோக இன்பத்தைப் பெறுவர். மண்ணுலகில் மனத்தில் எண்ணியவற்றை எண்ணியபடி பெறுவர் என்பன உண்மை என்றும் கூறினர்.

கந்த புராணம் ஒரு தலை சிறந்த புராணம் என்பது முற்றிலும் உண்மை. இது "புராண நன்னயகம்" என்றும் "அமலன் மாக்கதை" என்றும் நூலாசிரியராலே கூறப்பட்ட பெருமை நிறைந்தது. இத்தகைய பெருமை நிறைந்த நூலையும் ஆசிரியரையும் யார்தாம் போற்றாமல் இருப்பர்? இவரையும் இவர் செய்த நூலையும் தங்கப் பல்லக்கில் வைத்து வீதி உலா செய்தனர்.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளைப் பெரும் புலவர்கள் பெரிதும் புகழ்ந்து பாடியும் உள்ளனர். உபதேச காண்டம் பாடிய **ஞானவரோதயர்** என்னும் **கோனேரியப்ப நாவலர்** கச்சியப்பரைக் "காஞ்சி வளர் கச்சியப்ப கற்பகத்தருவை இறைஞ்சிக் கருத்துள் வைப்பாம்" என்றும், கந்த புராணச் சுருக்கம் பாடிய **சம்பந்த சரணலயர்** "அமுதினை நிகர் செந்தமிழ்தான காதல் மழை பொழிந்த அருட் கொண்டலான கச்சியப்பன் இரு பாதம் உச்சிவைப்பாம்" என்றும் புகழ்ந்து பேசியுள்ளனர்.

## ஆசிரியர் காலம்

கந்தபுராண ஆசிரியர் காலத்தையும் சமயத்தையும் கூறி இவரது வரலாற்றை இனிதில் முடிப்போமாக. கந்த புராண ஆசிரியராம் கச்சியப்பர் சைவசமயத்

தவர் என்பதை விளக்கமாகக் கூறவேண்டியதில்லை. சிவாசாரியர் என்னும் சமயப் பெயரால் இவர் குறிப்பிடப்படுவதாலும், காஞ்சி குமர கோட்ட முருகப் பெருமானை முப்போதும் தீண்டி வழிபட்டு வந்ததாலும், கந்த புராணத்தில் தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் சிவ பெருமான் பெருமையினையும் முருகப் பெருமான் மாண்பினையும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியிருப்பதாலும் நன்கு அறியலாம். இனி நாம் உணரவேண்டுவது புலவர் பெருந்தகையாரின் காலமேயாகும்.

கச்சியப்ப சிவாசாரியார் வீரசோழிய நூலாசிரியர் காலத்துக்குப் பின்னும் கம்பருக்கு முன்னும் இருந்தவராக இருக்க வேண்டும் என்பது வரலாற்று அறிஞர்களின் துணிபாகும். வீர சோழியத்தின் காலம் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு. கம்பரின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றுண்டு. கம்பர் கந்த புராணம் பாட இருந்ததாகவும், ஆனால், அது அவருக்கு முன்பே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் பாடப்பட்டுவிட்டமையால் அம்முயற்சியைக் கைவிட்டதாகவும், ஒரு கர்ணபரம்பரைச் செய்தியுண்டு. கம்பரே, "கச்சியப்பர் என்னும் சுருவா கந்த புராணம் என்னும் பெருங்கடலைக் கலக்கிற்று!" எனக்கூறி ராமாயணத்தைத் தொடங்கியதாகவும் சிலர் கூறி வருகின்றனர். ஆகவே, கச்சியப்பர் நிலவிய காலம் கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இருத்தல்வேண்டும். இதன் விரிவை இன்னமும் பரக்கக் காண விரும்புவோர், திரு. க. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் எழுதியுள்ள தமிழ் இலக்கிய வரலாற்றில் கண்டு தெளிவாராக.

# 5. கம்பர்

## பிறப்பும் வளர்ப்பும்

கம்பர் தமிழ் நாட்டுத் தனிப்பெரும் பெருமை சான்ற புலவர் வரிசையில் முன்னணியில் நிற்கவல்லவர் ஆவர். அவரைப்பற்றியும் அவர் இயற்றிய நூலாகிய தமிழ் ராமாயணம் பற்றியும் பல சிறப்பு மொழிகள் நாட்டில் உலவி வருகின்றன. "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்றும், "கல்வியில் பெரியவன் கம்பன்" என்றும், "கவிச்சக்கரவர்த்தி கம்பன்" என்றும், "கம்பநாடன் கவிதை போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்றும், "கம்ப நாட்டான் கவி, தராதலத்தில் உள்ள தமிழ்க் குற்றமெல்லாம் அராவும் அரம்" என்றும் வழங்கும் அருந்தமிழ்த் தொடர்களால் கம்பர் பெருமையை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். வரகவி சுப்பிரமணிய பாரதியார் தாம் அறிந்த புலவர்களில் வள்ளுவரைப் போல், இளங்கோவைப் போல் கம்பரைப் போல் எங்கும் கண்டதில்லை என்று கூறிக் களிப்புறுகின்றார். கம்பர் விருத்தப்பா பாடுவதில் மிக வல்லவர் என்றும் அவரைப் போன்ற ஒரு புலவர் "விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்று உரைத்து உள்ளம் உவக்கின்றார். இத்தகைய மாண்பு வாய்ந்த பெரும் புலவர் வரலாற்றை இங்குச் சிறிது காண்போமாக. இவரது பிறப்பைப்பற்றிப் பலவாறான கதைகள் நம் நாட்டில் இருந்து வருகின்றன.

"சோழ வளநாடு சோறுடைத்து" என்னும் சிறப்புப்பெற்ற சோழ நாட்டில் ஒரு சிறு பகுதி **கம்பநாடு** என்னும் பெயருடைய நாடாகும். அதனை ஒரு சிற்

றரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் படைபலம் மிகுதியாகப் பெற்றில்லாமையால் அவன் பகைவரால் தோற்கடிக்கப்பட்டான். அப்போது அவனுடைய மனையாள் கருவுற்றிருந்தாள். அவள் தன் கணவன் நாட்டையிழந்து தானும் இறந்தமையால் தனக்கு வேறு கதியின்றி, வெளிக் கிளம்பினாள். தான் பூரண கர்ப்பமாய் இருந்ததால் ஒரு காளி கோயில் பூசாரியாகிய **ஆதித்தன்** என்பான் இல்லம் அடைந்து அங்கு ஓர் ஆண் குழந்தையைப் பெற்று இறந்தாள். அக்குழந்தையே **கம்பர்** என்று ஒரு சிலர் கூறுகின்றனர். இவ்வரலாற்றையே ஆதாரமாகக் கொண்டு கம்பர் உவச்சனாகிய ஆதித்தனால் வளர்க்கப்படவில்லை. அன்னானுக்கே பிள்ளையாகப் பிறந்தவர் கம்பர் என்றும் கூறுவர். மற்றும் சிலர், கம்பர் சிறந்த வேளாளர் குடியினர். அதனால் தான் ராமன் முடிசூட்டிக் கொண்டபோது வேளாளர் குடியினைச் சார்ந்த ஒரு பெரியார் முடியினை எடுத்து வசிட்டர் கையில் கொடுக்க, அவர் அதை இராமனுக்குச் சூட்டினர் என்றும், தாம் பாடிய சடகோபர் அந்தாதி என்னும் நூலில் சடகோபராகிய நம்மாழ்வாரைக் "குருகூர் எம் குலக்கொழுந்தே" என்று குறிப்பிட்டார் என்றும் கம்பர் வேளாள மரபினர் என்பதை வலியுறுத்துவர்.

கம்பருடைய பிறப்பைப்பற்றி எப்படிப் பலவிதமான கதைகள் எழுந்தனவோ அப்படியே அவருடைய பெயரைப் பற்றியும் பல கதைகள் தோன்றலாயின. கம்பர் வேளாளர். ஆதலின், அவரது பெற்றோர் அவருக்குக் காஞ்சிமா நகரத்துக் கடவுளாகிய ஏகம்பர் பெயரைச் சூட்டக் கருதிச் சுருக்கமாகக் கம்பர் என்று சூட்டி அழைக்கலாயினர் என்பர். மற்றும்

சிலர் " இவர் கம்பன் கொல்லையைக் காத்து வந்ததால் கம்பர் என்று அழைக்கப்பட்டார் " என்றும் கூறுவர்

இவ்வாறு இவர் பெயரும் பல காரணங்கட்கு உரிய பெயராய் அமைந்தது. இனி இவருக்குக் கல்வி யறிவு வந்த விதத்தினைப் பார்ப்போம்.

## கம்பரும் சடையப்ப வள்ளலும்

கம்பர் வாழ்ந்த காலத்தில், சோழ நாட்டில் திரு வெண்ணெய் நல்லூரில் வேளாளப் பிரபு ஒருவர் இருந் தார். அவர் செல்வத்தில் சிறந்து விளங்கினார். செல் வத்தின் பயன் தாமே அனுபவித்தல் என்பது இன்றி, ஏழை எளியவர்கட்கும் கொடுத்துச் செல்வத்துப் பயனைப் பெற்றுவந்தார். சேர சோழ பாண்டியர் களாகிய மூவேந்தர்கட்கும் விருந்து செய்ய வல்ல அத் துணை அரச செல்வமும், பெருமையும் பெற்றவராய்த் திகழ்ந்தார். இவர் தாம் யாரோ என்னில், சடையப்ப வள்ளல் என்னும் பெயரினர் ஆவர். அன்னாரிடம் கம்பர் சென்றார். வள்ளல் அனாதைகளை ஆதரிக்கும் பண்பு வாய்ந்தவர். ஆதலின், கம்பர் தம் பெற் றோரை இழந்து தம்மை யாரும் ஆதரிப்பார் இன்றி வாடி இவளை அடையச் சடையப்ப வள்ளல் இவரை ஏற்றுக் கொண்டார். வள்ளல் கம்பரைத் தம் மக்க ளுள் ஒருவராகக் கருதித் தம் மக்களுக்குக் கல்வி போதித்து வந்தாற்போல இவருக்கும் கற்பித்து வந் தார். கம்பர் வெகு விரைவில் கல்வியில் சிறந்து விளங் கினார். தாமாகக் கவிபாடும் நிலையை அடைந்தார். இச்செய்தி சடையப்ப வள்ளலுக்குத் தெரியவரவே, அவர் அன்று முதல் கம்பரை முன்னிலும் அருமை யாக ஆதரித்து வந்தார். கம்பர் தாமே அருங் கவி

பாடும் ஆற்றல் உடையவர் என்பதைக் கேள்விப்பட்டதைத் தாம் நேரே பார்க்க வேண்டும் என்பதற்காக ஒரு பாடலைப் பாடச் சொன்னார். உடனே கம்பர் தட்டுத் தடங்கல் இன்றி, தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலின் நாட்டுச் சிறப்பும், அன்னார் கொடைச் சிறப்பும் ஒருங்கே தோன்ற, "சூல் கொண்ட எருமை குளத்தில் இறங்கியதும், வரால் மீன்கள் எருமையின் மடியை முட்ட, அவ்வெருமை தன் கன்றுதான் முட்டுகின்றது போலும் என்று கருதிப் பாலை வீட்டளவும் சொரியும் திருவெண்ணெய் நல்லூர் யாருடையது எனில், அடைக்காத கதவும், யார்வரினும் அஞ்சாதீர் என்னும் சொல்லும் உடைய சடையப்பன் ஊராகும்" என்னும் பொருளையமைத்து,

மோட்டெருமை வாவிபுக மூட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான சடையப்பன் ஊர்.

என்று பாடிக் காட்டினார். சடையப்ப வள்ளலுக்குச் சொல்ல முடியாத ஆனந்தம் பொங்கி எழ, அவரை அப்படியே கட்டித் தழுவி இன்புற்றார்.

சடையப்ப வள்ளல் வேளாள மரபினர் அல்லவா? அவர் தம் குலப் பெருமையை விளக்கி ஒரு நூலைக் கம்பரைக் கொண்டு பாடுவித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார். அவ்வெண்ணத்தைக் கம்பருக்கும் கூறலானார். கம்பர் யாதொரு மறுமொழியும் கூறாது, எழுபது பாடல்களில் **ஏர் எழுபது** என்னும் பெயரால் ஒரு நூலைப் பாடி முடித்தார். அந்த நூலில் வேளாளர் குடிச் சிறப்பை மிக உயர்த்திப் பாடினார். அந்தணர்

அரசர் வணிகர் முதலான குடிகளில் பிறந்து யாது பயன்? உலகு உய்யப் பிறக்க வேண்டுமானல் வேளாளர் குடியில்தான் பிறக்க வேண்டும். அக்குடியினரால் தான் வேதங்கள் விளக்கமுறும்; யாகாதி காரியங்கள் செம்மையுற நடந்தேறும்; பல கலைகள் வளர்ந்துவரும்; பாவாணர் பாக்கள் சிறப்புறும்; செல்வம் ஓங்கும்; நீதி தழைக்கும். என்றெல்லாம் சிறப்பித்துப் பாடினுர். வள்ளல் கம்பருக்கு மேலும் பல சீரும் சிறப்பும் செய்து அன்புடன் ஆதரித்து வந்தார்.

கம்பர் மணப் பருவம் உற்ருர். நல்ல நாளில் திருமணமும் புரிந்து கொண்டார். இல்லறத்தை இனிது நடத்திஞர். ஆண் மகவையும் ஈன்றெடுத்தார். அம் மகனே **அம்பிகாபதி** என்பவன்.

## இராமாயணம் பாடுதல்

கம்பருடைய புகழ் எங்கும் பரவியது. அவர் காலத்தில் மூன்ரும் குலோத்துங்கன் அரசு செய்து வந்தான். அவனும் கம்பர் புகழைக் கேள்வியுற்று அவரை வரவழைத்துத் தம் அவைக்களப் புலவர்களுள் ஒருவராக அமர்த்திக் கொண்டான். அதே சபையில் ஒட்டக் கூத்தரும் அவைக்களப் புலவராக இருந்து வந்தனர். சோழன், வடமொழியில் உள்ள ராமாயணத்தைப் பாடுவித்துக் கொள்ள வேண்டுமென்ற பேரவாக்கொண்டிருந்தான். அவ்வெண்ணத்தைத் தம் [illegible] கவிகளாகிய ஒட்டக் கூத்தரையும், கம்பரையும் பாடுமாறு வேண்டிக்கொண்டான். இருவரும் அவ்வாறே பாடுவதாக ஒப்புக்கொண்டனர்.

ஒட்டக் கூத்தர் அரசன் கட்டளையை ஏற்றதும் [illegible] பாடத் தொடங்கினர். கம்பரோ தாம் ஒரு

செய்யுளையும் பாட ஆரம்பித்திலர். சில நாட்களுக்குப் பிறகு குலோத்துங்க மன்னன், இரு பெரும் புலவர் களும் ஒருங்கே இருந்த சமயம் பார்த்து, "இராமாயண நூல் எந்த அளவில் முடிந்திருக்கிறது ?" என்றபோது, ஒட்டக்கூத்தர், 'யான் பாடி முடித்துவிட்டேன்' என்று கூறினார். கம்பரும் தாம் ஒரு செய்யுளையும் பாடத் தொடங்காத நிலையிலும், "பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனில்," அதாவது, பொய்யும் குற்றமற்ற நன்மை தருவதான சந்தர்ப்பத்தில் உண்மையின் கூறுபாட்டையுடைய தாம் என்னும் வள்ளுவர் வாய்மொழியை ஆதாரமாகக் கொண்டு, "நானும் ராமாயணத்தைப் பாடி, இராமன் குரங்குப் படைகளுடன் இலங்கையைக் கடத்தற்குச் சேது அமைக்கின்ற கட்டத்திற்கு வந்துள்ளேன்" என்று கூறி உடனே அக் கட்டத்திற்கு உகந்த பாடலையும் பாடிக் காட்டினர். அதனைக் கேட்ட சோழன் 'நூலை விரைவில் முடித்துவிடுமாறு கேட்டுக் கொண்டான். ஒட்டக்கூத்தர் கம்பர் பாடலைக் கேட்டு அது மிகவும் நயமுடையதாதலை உணர்ந்து, தம் கவிகள் கம்பர் கவிகட்கு மூன் சிறவா என்று தீர் மானித்து அடுத்த நாள் ஒட்டக்கூத்தர், தாம் பாடிய ராமாயண ஏடுகளைக் காவிரியாற்றில் கிழித்து எறிந்து கொண்டிருந்தார். அப்போது கம்பர் அங்குத் தெய்வச் செயலாக வர நேர்ந்தது. ஒட்டக்கூத்தரை அணுகி, அவர் செய்கையை உணர்ந்து, "நீர் இப்படிச் செய்யலாமோ?" என்று கூறி, இறுதியாக ஆற்றில் எறி படாமல் இருந்த உத்தர காண்டத்தை எடுத்துக் கொண்டு ஏனைய பால காண்டம், அயோத்தியா காண் டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர

காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களை மட்டும் பாடி விடுவதாகத் தீர்மானித்து, ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தைத் தாம் பாடாமல், ஒட்டக் கூத்தர் பாடிய உத்தர காண்டத்தைத் தம் நூலோடு இணைத்துக் கொள்ள எண்ணங் கொண்டார்.

கம்பர் நூலை வெகு விரைவில் பாடி முடித்தனர். அவர் இரவில் பாடல்களைச் சொல்லிக்கொண்டு வருவார். அவருடைய மாணவர்கள் எழுதிக்கொண்டு வருவார்கள். அம்மாணவர்கள் எழுதும்போது, விளக்கொளியின் பொருட்டுக் காளிகா தேவியைப் பந்தம் பிடிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவளும் அங்ஙனமே பந்தம் பிடித்தனள். கம்பர் தம் நூலை எழுதுவதற்கு இரும்பு எழுத்தாணிகளைச் செய்து தந்தவன் **மாவண்டூர்ச் சிங்கன்** என்பவன். அவன் செய்த உதவிக்காக அவனைப் புகழ்ந்தும் பாடினர்.

## இராமாயண அரங்கேற்றம்

கம்பர் இராமாயணத்தைப் பாடி முடித்தார். அவ் [illegible]ராமாயணத்தில் தம்மை ஆதரித்தசடையப்ப வள்ளல் [illegible] அமைத்து அவர் அருங்குணங்களை [illegible]த்தில் புகழ்ந்து பாடினார். கம்பர் பாடிய ஏறக் [illegible] பத்தாயிரச் செய்யுட்களில் நூற்றுக்கு ஒரு [illegible] பாடி இன்புற்றார். பின்பு தம் நூலைக் [illegible] அரங்கேற்றத் திருவரங்கம் சென் [illegible] வைணவர்கள், "சடகோபரைத் துதித் [illegible] நூலுக்குச் சாற்றுக்கவி கூறினால் [illegible] ஏற்றுக்கொள்வோம்" என்று [illegible] சென்றனர். [illegible] கருத் [illegible]. [illegible] "நாங்கள் மூவாயிரவர்கள். [illegible] கூடும் சமயம் பார்த்து வந்தால்

உம் நூலுக்குச் சாற்றுக்கவி கொடுக்க இயலும்" என்றனர். அவர்கள் எப்போது ஒன்று கூடுவது? நாம் எப்போது சாற்றுக்கவிகளைப் பெறுவது? என்று வருத்தத்துடன் இரவு படுத்துறங்கும்போது, அரங்கநாதர் கனவில் தோன்றி, "அன்பனே, நீ வருந்தாதே. நாளை ஒரு தீட்சதன் மகன் பாம்பு கடித்து இறப்பான், அப்போது எல்லோரும் அங்கு வந்து சேர்வர். அந்தச் சமயம் நீயும் அங்குச் செல். சென்று நாகபாசப் படலத்தில் உள்ள சில பாடல்களைப் பாடி மகனை எழுப்பிக்கொடு. அதைக் கண்டு அவர்கள் சாற்றுக்கவிகள் தருவர். பெற்றுக்கொள்" என்று கூற அவ்வாறே மறு நாள் கம்பர் பாம்பு கடித்து இறந்த தீட்சதர் மகன் வீட்டிற்குச் சென்று பாடலைப்பாடி மகனை எழுப்பினர். அவர்களும் மகிழ்ந்து சாற்றுக்கவிகள் ஈந்தனர். அவற்றைப் பெற்று அரங்கம் வந்து தம் நூலை அரங்கேற்றத் தொடங்கினர். கம்பர் தம் நூலை அரங்கேற்றும் போது அரங்கன் அசரீரியாக "நந்தம் சடகோபனைப் பாடினையோ?" என்று கேட்க, உடனே **சடகோபர் அந்தாதி** என்னும் நூலைப் பாடினர். பின்பு நூலை அரங்கேற்றிக் கொண்டு வருகையில், இரண்ய படலத்தில், இரண்யன் அறைந்த தூணிலிருந்து நரசிம்மப் பெருமாள் வெளிப்பட்ட இடத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்தியபோது, திருவரங்க மண்டபத்தின் தூண்களில் ஒன்றில் அமைக்கப்பட்ட நரசிம்ம உருவம் உயிர் பெற்றுச் சிரித்தது. இதனைக் கண்டு யாவரும் கம்பரை வியந்தனர்.

ஒரு சிலர் "இந்த ராம கதையில் இடையிடையே நராதுதியாகச் சடையப்ப வள்ளல் புகழ் நூற்றுக்கு ஒரு கவி வீதம் வருவது குறித்து யாங்கள் தடை கூறுவோம்" என்று சொல்லக் கம்பர், தமக்குச் சடையப்பர்



கம்ப ராமாயண அரங்கேற்றம்

செய்த உதவி காரணமாக நன்றிமறவாத் தன்மையினுல் இவ்வாறு பாடினேன், என்று பணிவுடன் பதில் கூற, "அப்படியாயின் ஆயிரத்திற்கு ஒன்ருக வேண்டுமானுல், பாடி அமைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறக் கம்பரும், "ஆம் வள்ளல் நூற்றில் ஒருவர் அல்லர். ஆயிரத்தில் ஒருவர்" என்று சிலேடைப் பொருளில் கூறி அங்ஙனமே ஆயிரம் ஆயிரம் பாடல்கட்கு அப்பால், ஒவ்வொரு பாடலாகப் பத்து இடங்களில் சடையப்பரைப் புகழ்ந்து தம் நன்றியினை அறிவித்துக் கொண்டனர். அப்பத்து இடங்களில் ஒன்றே,

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைபிடிக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெய்மன்
[சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே
[புனைந்தான் மவுலி

என்னும் பாடல்.

இங்ஙனம் இராமாயணம் பாடி அரங்கேற்றிய போதுதான், இவரது கல்வியின் ஆழத்தைக் கண்ட ஸ்ரீநாத முனிகள் கம்பருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்று பட்டம் அளித்து மகிழ்ந்தார். கம்பர் மீண்டும் தம் [illegible]ச் சோழன் அவைக்களத்தில் பல புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்து சோழ மன்னனுல் சன்மானங்கள் பல பெற்றுர்.

## ஏற்றப் பாட்டு

இம்முறையில் கம்பர் சோழனை மகிழ்வித்து அவ[illegible] அவையினை அலங்கரித்து வந்தார். கம்பர் ஒரு நாள் [illegible] வயல் வழியே சென்றுகொண்டிருந்தார். அப்போது ஒருவர் ஏற்றம் இறைத்து வயல்களுக்கு நீர்

பாய்ச்சிக் கொண்டிருந்தனர். எப்போதும் பாரம் வலிப்பவர்களும் ஏற்றம் இறைப்பவர்களும் உடல் வருத்தம் தோன்றாதிருக்க ஏதேனும் பாட்டுப் பாடிக் கொண்டே தம் பணியைச் செய்வர். அந்தமுறையில் ஏற்றம் இறைப்பவர்கள் பாடிக்கொண்டே வந்து "மூங்கில் இலை மேலே" என்று பாடி ஏற்றம் இறைப்பதை நிறுத்திவிட்டனர். காரணம் வெயில் அதிகரித்து விட்டதனால் அதற்குமேல் அவர்களால் வெயிலில் வேலை செய்ய இயலவில்லை. கம்பருக்கு அவ்வடியின் பொருள் விளங்கவில்லை. "மூங்கில் இலை மேலே என்ன இருக்கும்? அப்படி ஏதேனும் இருப்பதற்குரிய வசதி அந்த நுண்ணிய மெல்லிய இலையில் ஒன்றும் இல்லையே! இத்தகைய இலைகளில் பறவைகளோ, வண்டுகளோ தங்கவோ, மொய்க்கவோ மாட்டாவே!" என்று சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தனர். அவருக்குப் பொருள் புலப்படவில்லை. அதன் பொருளை அறிவதற்கு அடுத்த நாள் விடியற்காலையில் ஏற்றம் இறைப்பவர் வந்து ஏற்றம் இறைப்பதற்கு முன் அங்கு வந்து காத்துக் கொண்டிருந்தார். ஏற்றக்காரர்களும் அங்கு வந்தனர். நேற்று விட்டுச் சென்ற அடியினைத் தொடர்ந்து பாடி ஏற்றம் இறைக்கத் தொடங்கினர். அதாவது "மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே" என்று தொடர்ந்து பாடினர். அப்போதுதான் கம்பருக்கு அவ்வடியின் பொருள் புலனாயிற்று. மூங்கில் இலைமேல் பனி நீர் தங்குவதை நாம் இன்றும் கண்கூடாகப் பார்க்கலாம். அப்பனி நீர் அவ்விலையின் முனையில் தொங்கிக் கொண்டிருக்கும். இதனை அறிந்தபோதுதான் கம்பர் ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டு இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

## குடியானவன் கவி

ஒரு குடியானவன் வறுமை காரணத்தால் தானும் தன் குடும்பமும் வாடவதங்கி வந்தான். அவன் மனைவி தன் கணவனை நோக்கி, "நம் நாட்டு மன்னனிடம் சென்று பொருள் பெற்று வரக்கூடாதா ?" என்று கூறினாள். அப்போது அவ்வேழைக் குடியானவன் "மன்னன் புலவர்கட்குப் பரிசில் தருவானே அன்றி, என் போன்றவர்கட்கு எல்லாம் பரிசு கொடுப்பானோ?" என்று பதில் அளித்தான். மனைவி உடனே, "அதற்கென்ன ! கன்னு பின்னு தென்னு மன்னு என்று பாடினால் போச்சு" என்று கூறக் குடியானவன் புலவர் போலத் தன்னை அலங்காரம் செய்துகொண்டு சோழ மன்னன் சபையை நோக்கிப் புறப்பட்டான். போகும் வழியில் இளம் பெண்கள் மரப்பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டு, அந்தப் பொம்மைகளை "மண்ணுண்ணி மாப்பிள்ளையே" என்று கூறிக்கொண்டிருந்தனர். இதனையும் மனனம் செய்துகொண்டான் குடியானவன் சிறிது தூரம் சென்றபின் காக்கையும், குயிலும் 'கா கா' என்றும் 'கூகூ' என்றும் இரைவதைக் கேட்டுக் "காவிறையே கூவிறையே" என்று இவ்விரு தொடர்களையும் சேர்த்துக் கொண்டான். மேலும் சென்றபோது, ஒரு பெருச்சாளி கோவிலில் ஓடுவதைப் பார்த்து, "உங்கள் அப்பன் கோவில் பெருச்சாளி" என்று கூறி அதனையும் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து,

மண்ணுண்ணி மாப்பிள்ளையே
காவிறையே, கூவிறையே,
உங்கள் அப்பன் கோயில் பெருச்சாளி
கன்னு பின்னு தென்னு மன்னு.

என்று மனப் பாடம் செய்துகொண்டு புறப்பட்டு

போனான். இடைவழியில் தன் நண்பனைக் கண்டு தான் போகும் காரணத்தைக் கூறிப் பாட்டையும் பாடிக் காட்டினான். அவன் இவனைப் பார்த்துப் "பாட்டுச் சரி தான். இதில் அரசன் பெயர் இல்லையே. அரசன் பெயரையும் சேர்த்துவிட்டால், மன்னன் உன் பாட்டைக் கேட்டு உனக்குப் பரிசு கொடுப்பான்" என்றதும், மன்னன் பெயராகிய "சோழங்கப் பெருமானே" என்று ஈற்றில் சேர்த்துக்கொண்டு அரசவையில் வெகு தைரியத்துடன் புகுந்தான். அப்போது புலவர்கள் பலர்சூழ மன்னன் கம்பீரமாக வீற்றிருந்தான். அந்தச் சமயத்தில் இவன் இப்பாட்டைப் பாடிக் காட்டினான். புலவர்கள் கொல்லெனச் சிரித்தனர். கம்பர் மட்டும் தலையசைத்துப் பாட்டின் நயத்தைச் சுவைப்பவர்போல் பாவனை செய்தனர். மன்னனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. "என்ன ! புலவர்கள் யாவரும் இதுவும் ஒரு பாட்டோ என்று எள்ளி நகையாடினர்! கம்பர் மட்டும் இப்பாட்டில் ஈடுபட்டுப் பாராட்டுகின்றாரே. இப்பாட்டில் ஏதோ பொருள் சிறப்பு இருக்கவேண்டும்" என்று கம்பரை நோக்கி "ஐய புலவரே, இது ஒரு பாட்டா ? இது எந்த யாப்பில் அடங்கும் ? இதற்குப் பொருளும் உண்டோ?" என்று கேட்க, உடனே கம்பர், "மன்னா ! வந்தவர் சாதாரணப் புலவர் அல்லர். கல்வி கேள்விகளில் வல்லவர். இல்லையானால் இப்படிப்பட்ட அருமையான கருத்துக்கள் நிறைந்த கவியைப் பாடி இருக்க முடியாது. இப்பாடல் இணைக்குறள் ஆசிரியப்பா என்னும் பகுப்பைச் சார்ந்தது. இப்பாட்டின் பொருளை நான் அறிந்த வரை கூறுகின்றேன் கேட்பாயாக. இப்பாட்டின் திரண்ட பொருள், "சோழ நாட்டின் தலைவ ! உலகை உண்ட திருமாலின் சிறந்த மகனை மன்மதனுக்கு ஒப்

பானவனே, கற்பகவிருட்சம் உள்ள இந்திரலோகத் தலைவனான இந்திரன் போன்றவனே, இந்த மண்ணுலகிற்குத் தலைவனே, உம்முடைய தந்தையானவன் வில் வித்தையில் பெரிய சிங்கம் போன்றவன்; நீ கொடையில் கன்னனுக்கு ஒப்பாவாய்; பொறுமையில் கன்னன் தம்பியான தருமனுக்கு நிகராவாய்; தமிழை வளர்ப்பதில் தமிழ் நாட்டுப் பாண்டியன் போன்றவன்; என்றும் நிலைபெற்ற மன்ன, என்பதல்லவா" என்று கூற யாவரும் அப்பாட்டையும், அப்பாட்டைப் பாடிவந்த புலவனையும் இகழ்ந்தமைக்கு வருந்தினர். பின்பு மன்னன் குடியானவனுக்கு வேண்டிய பரிசில் அளித்து அனுப்பினான். புலவன் தப்பியது தம்பிரான் புண்ணியமாயிற்று. அன்று அவன் நரி முகத்தில் விழித்தான் போலும்! போலிப் புலவன் மகிழ்வுடன் வீடு திரும்பினான். அவன் மனைவியும் தான் கூறிய சூழ்ச்சி பலித்தது என்று எண்ணிக் களித்தாள். கம்பர் அவனைத் தனியே பார்த்து "பைத்தியக்காரா, இனி இப்படிச் செய்யாதே. அன்று நான் இல்லை என்றால் உனக்குத் தண்டனை கிடைத்திருக்கும். இனியாகிலும் நன்கு படித்து உண்மைப் புலவனாக மாறுக" என்று அறிவுறுத்திச் சென்றார்.

## கம்பர் வெளியேறுதல்

ஒரு முறை கம்பரும் சோழ மன்னனும் மலைவளம் காணச் சென்றனர். குலோத்துங்கன் மலைமீது இருந்து கீழே தன் நகர் அழகைக் கண்டு, "புலவர் சிங்கமே, இந்த நாடும், நாட்டு மக்களும் எனக்கு உரிமையுடையதும், அடிமையுடையரும் அன்றோ?" என்று கூறிக் களித்தான். கம்பர் உடனே "அரசே ஆம். உண்மை. ஆனால், நீர் எனக்கு அடக்கம்" என்று கூறிவிட்டனர். வந்தது கோபம் மன்னனுக்கு. "என் ஆதரவில் இருக்கும்

ஒரு சாதாரணப் புலவருக்கு நானே அடிமையும் அடக்க மும் ஆவேன்! இப்புலவருடைய செருக்கை அடக்க வழி காண்பேன்'' என்று கூறித் தன் அரண்மனை புகுந் தான். மந்திரியினிடத்தில் இதைக் கூறினான். உடனே அமைச்சன், ''நான் இதற்கு வழி காண்கின்றேன்'' என்று அறிவித்து, **பொன்னி** என்னும் பெயருடைய தாசியை அழைத்து எப்படியும் கம்பர் அவளுக்கு அடிமை என்று எழுதிக் கொடுக்கும்படி செய்து, அவ்வடிமைச் சீட்டைத் தனக்கு அனுப்பிவைக்குமாறு கட்டளையிட் டான். அவளும் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டாள்.

பொன்னி தான் வாழ்ந்து வந்த தெருவில் கம்பர் வருவதைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். கம்பர் வரு வதைக் கண்டு, ''ஐய புலவர் ஏறே, இன்று எம்மில்லத் தில் வந்து தங்கி உணவுண்டு செல்லவேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனள். புலவரும் அதற்கு இணங்கினர். பொன்னி கம்பர் மனம் மகிழும் வண்ணம் உபசாரம் செய்தாள். கம்பர் உவந்து, ''பொன்னி, நான் உனக்குச் செய்யவேண்டியது ஏதேனும் இருந்தால் கூறுக'' என்று கேட்க, அவள் ''எனக்கு ஒன்றும் பாடல் வேண்டா. நீர் உம் கைப்படத் ''தாசிப் பொன் னிக்குக் கம்பன் அடிமை'' என்று எழுதித் தந்தால் போதுமானது'' என்று கேட்டுக்கொண்டனள். அவரும் அவ்வாறே எழுதிக் கொடுத்து விட்டு வெளியே போய்விட்டனர்.

அடிமை ஓலை அரசன் கைக்கு வந்து சேர்ந்தது. குலோத்துங்கன் கையில் ஓலையை வைத்துக்கொண்டு, சிரித்துச் சிரித்து மகிழ்ந்தான். அடுத்த நாள் சபை

கூடியிருந்தபோது, மன்னன் அவ்வோலையைச் சபையோர்முன் வாசித்து, "சபையோர்களே, இப்படியும் கம்பர் இருக்கலாமா? கேவலம், ஒரு தாசிக்குத் தாம் அடிமை என்று எழுதியுள்ளாரே!" என்று இழித்துப் பேச, யாவரும் கொல்லென்று சிரித்தனர். கம்பர் உடனே எழுந்து "மன்ன, இதில் என்ன இழுக்கு இருக்கிறது? நான் மட்டும் தானா அடிமை. இங்குள்ளவர் யாவரும் அடிமைகளே. தாயாகிய ஸ்ரீ தேவியான இலக்குமிக்குக் கம்பனாகிய யான் அடிமை என்பது அல்லவா இதன் பொருள்?" என்று பொருள் விரிக்க யாவரும் கேட்டு வெட்கித் தலை குனிந்தனர்.

குலோத்துங்கன் உடனே, "புலவர்கள் இயமனை [illegible]க் கொடியவர்கள். அவர்கள் போற்றினாலும் போற்றுவர்; தூற்றினாலும் தூற்றுவர். தாம் சொன்ன சொற்களுக்குப் பொருளைச் சமயத்திற்கு ஏற்றவாறு மாற்றினாலும் மாற்றுவர்" என்று கூறி "இனிக் கம்பர் தன் நாட்டில் இருத்தல் கூடாது" என்றும் கூறிவிட்டான். கம்பருக்கும் கோபம் பொங்கியது. "மன்ன, உன் நாடு இருபத்து நான்கு காதம் பரப்புடையது. மற்றைய [illegible] அழியவில்லை; இருக்கின்றது. ஆகவே, நீ [illegible] இங்கு இருத்தல் கூடாது என்றால், எம் [illegible] புலவர்கட்கு வேறு போக்கில்லை என்று நினை[illegible] அரசன் உன்னையன்றி வேறு இல்லையோ? [illegible] உனக்கு மட்டும் உண்டோ? உன்னை அறிந்து [illegible] பயப்படக் கற்றேனோ? என்னை ஏற்றுக்கொள் [illegible] களும் இல்லாமற் போகவில்லை. குரங்கு ஏற் [illegible] கிளைகளும் உண்டா? இல்லையல்லவா? [illegible] போன்ற மன்னனை எனக்கு அடிமை [illegible] பார்" என்று கூறி வெளியேறினார்

## வழிநடை நிகழ்ச்சிகள்

வரும் வழியில் **வேலி** என்பவள் தன் வீட்டிற்குச் சுவர் எழுப்ப, எழுப்ப அது விழுந்துகொண்டிருந்தது. அந்தச் சமயம் கம்பர் அங்குச் சென்று, அவள் பரிதாபமான நிலைமையுணர்ந்து, "நான் சுவரை எழுப்பி விழாது செய்தால், நீ என்ன தருவாய்?" என்று கேட்க, அவள் குறுணி நெல் தருவதாகக் கூறினாள். உடனே கம்பர் சுவரை எழுப்பி, 'சுவரே நான் சோழ மன்னனுடன் சினந்து புறப்பட்டேன். என் தமிழ்ச்சுவைப் பாடல்களை யறிபவர் எவரும் இலர். ஆகவே, நான் நெல்லைப் பெற்றுப் போகும் அளவும், நீ விழாது இருப்பாயாக" என்று கூறிச் சுவரை நிற்கச் செய்து நெல்லைப்பெற்றுச்சென்றார்.

இடைவழியில் பிராமணர் வணிகர், வாணியர் வாழ் இடங்களில் எல்லாங் கடந்து சென்றார். எவரும் இவரை ஏற்று உபசரித்திலர். வேளாளர்கள் மட்டும் இவரை நன் முறையில் ஏற்று உபசரித்தனர். அப்போது மனம் உவந்து, "எந்நாளும் காப்பர் வேளாளர்" என்று பாடிப் போற்றினர். சீராமன் என்னும் வண்ணான் இவருக்கு ஆடை வெளுத்துத் தந்தான். அதனைச் சிறப்பித்து, அவனையும் புகழ்ந்து பாடினார். பின்பு, நாவிதன் ஒருவன் இவருக்கு க்ஷவரம் செய்தான். அவன் வேலைப்பாட்டை மெச்சி, இரு பொருள்படும்படி,

"ஆரார் தலைவணங்கார்? ஆரார்தாம் கையெடார்?
ஆரார்தாம் சத்திரத்தில் ஆறாதார்—சீராரும்
தென்புலியூர் மேவும் சிவன்அருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்"

எனப் பாடிப் பாராட்டினார்.

## அடைப்பைக்காரனுதல்

கம்பர் இப்படிப் பல இடங்களில் தங்கிச் சென்று இறுதியில் ஓரங்கல் நாட்டை அடைந்து அங்கு அரசு புரிந்த மன்னனாகிய **பிரதாபருத்திரன்** சபையை அடைந்தார். அவனுக்குத் தம்மைக் கம்பர் என்பதை அறிவித்துக் கொள்ளாமல் அவனுக்குத் தாம் அடைப்பைக்காரத் தொழில் செய்துவந்தார். அதாவது அரசன் சுவைத்து மெல்லுதற்குரிய வெற்றிலை, பாக்கு, சுண்ணம் முதலியவற்றைத் தாங்கி அவன் வேண்டியபோது மடித்துக் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டார்.

பிரதாபருத்திரன் தன் சபையில் கம்பர் பாடிய இராமாயணத்தைப் பிரசங்கம் புரியுமாறு செய்து அதனைக் கேட்டுவந்தான். கம்பரும் தாம் பாடிய பாடல்கட்குப் புராணிகர் நயமான பொருள் கூறும்போது, மகிழ்வும், தாம் கருதிய கருத்துக்கு மாருகக் கூறியபோது முகச் சுளிப்பும் காட்டிச் சுவைத்து வருவதை அறிந்த மன்னன், "உனக்கும் கவிச்சுவையறியும் ஆற்றல் உண்டோ?" என்றனன். "யான் கம்பருக்கு அடைப்பைக்காரனுக இருந்தபோது, அவர் பொருள் கூறுவதைக் கேட்டு ஆனந்த முற்றவன். ஆதலின், இப்போதும் சுவைத்து இன்புறுகின்றேன்" என்று பதில் அளித்தார். என்றாலும், அரசனுக்குத் தன் அடைப்பைக்காரன் ஒரு புலவனுகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கம்பரை உண்மை கூறுமாறு பணிக்கக் கம்பர் நடந்தவாற்றை ஆதியோடு அந்தமாகக் கூறினுர்.

பிரதாபருத்திரன் உண்மையைக் கேட்டு வருந்தி, ஒரு பெரிய புலவரைத் தனக்கு அடைப்பைக்காரனுக அமர்த்திக் கொண்டமையைக் குறித்துத் துக்கப்பட்

டான். அதற்கு ஈடாகத் தான் ஏதேனும் செய்யவேண்டும் என்று கம்பரையே, "தான் செய்ய வேண்டுவது ஏதேனும் இருந்தால் கூறுங்கள்" என்று கேட்கக் கம்பர், 'நீர் சில மணி நேரம் சோழன்முன் எனக்கு அடிமை போல் நடித்து அடைப்பைக்காரனாக இருக்கவேண்டும்'' என்று கூற அவ்வாறே செய்வதாக மன்னன் ஒப்புக்கொண்டான்.

## கம்பர் மீட்சி

குலோத்துங்கன் கம்பர் தம் சபையில் இல்லாதிருப்பது குறித்து வருத்தப்பட்டான். பின்பு, அவர் ஓரங்கல் நாட்டு மன்னனிடம் இருப்பதாக அறிந்து, ஆட்களை யனுப்பி அழைத்து வருமாறு பணித்தான். கம்பரும் பிரதாபருத்திரனைத் தமக்கு அடைப்பைக்காரனாக அமர்த்திக்கொண்டு, சோழ மன்னனை வந்து கண்டார். சோழன் கம்பரை நோக்கி, தான் புண்படச் செய்தமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்பு அடைப்பைக்காரனாக இருப்பவன் யாவன் என்று சோழன் கேட்கக் கம்பர், "அரசே, இவன் உம்போன்ற மன்னன் பிரதாபருத்திரன் நான் கூறிய சபதம் நிறைவேற்ற இம்மன்னனை என் அடைப்பைக்காரனாக அமர்த்திக் கொண்டேன்" என்று பதில் அளித்தனர். மன்னன் தன் தவறுகளை மன்னிக்குமாறு வேண்டினான். பின்பு சோழனும் கம்பரும் மனங்கலந்த அன்புடையராயினர். பிரதாபருத்திரனும் கம்பரிடமும் சோழ மன்னனிடமும் விடைபெற்றுப் போயினான். கம்பரும் சோழன் சபையில் விண்மணி போல விளங்கிக் கொண்டிருந்தார்.

இவையே கம்பரைப்பற்றிய கதைகள் என்று முடிவுகட்டவேண்டா. இன்னமும் பல உள. அவற்றை

யும் கூறப்புகின் இது நீளும் என்று இத்துடன் நிறுத்தப்பட்டது. வேண்டுவார் விநோத ரச மஞ்சரி, தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடல் திரட்டு முதலான நூல்களில் படித்து இன்புறலாம்.

## கம்பர் சமயமும் காலமும்

கம்பர் சமயம் வைணவமே. கம்பர் தம் ராமாயணத்தில் பல்வேறு இடங்களில் திருமாலின் சிறப்பை மிகைபடப் பேசியுள்ளார். வாலி தன் மார்பில் துளைத்த பாணத்தில் எழுதப்பட்ட இராமன் என்னும் பெயரைக் கண்ட கட்டத்தைக் கம்பர் கூறும்போது, "மும்மைசால் உலகுக்கெல்லாம், மூல மந்திரம் ராம மந்திரம்" என்று புகழ்ந்து பேசியுள்ளார். ஆகவே, கம்பர் வைணவரே. அவரது காலம் கி. பி. 12- ஆம் நூற்றாண்டின் இறுதியாகும். இவர் காலத்தில் மூன்றாம் குலோத்துங்க மன்னன் அரசுபுரிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# 6. புகழேந்திப் புலவர்

## பிறப்பகமும் பெயர்க் காரணமும்

தமிழ்ப் புலவர்கள் யாப்பு இலக்கணம் கற்று எல்லா வகைப் பாடல்களையும் பாடும் திறமை பெற்றவர்களாய் இருந்தாலும், அவர்களுள் சிலர் குறிப்பிட்ட பாடலைப் பாடுவதில் தலை சிறந்தவர்களாய் இருந்தனர். அப்படிப்பட்ட புலவர்களில் புகழேந்திப் புலவரும் ஒருவர் ஆவார். அவர் வெண்பா என்னும் பாட்டைப் பாடிப் பிறரை இன்புறச் செய்த காரணத்தால் அவரை 'வெண்பாவில் புகழேந்தி' என்று சிறப்பிக்கத் தொடங்கினர். அவரது வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து கொள்வோமாக.

தொண்டை நாடு சான்றோரை மிகுதியாகப் பெற்றது என்பது உங்களுக்கு நன்கு தெரியும் அத்தகைய பெருமை மிகுந்த நாட்டைச் சார்ந்த கோட்டங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று **களத்தூர்க் கோட்டம்** என்பது. அக் களத்தூர் ஒரு காலத்தில் பொன் விளையும் ஊராக இருந்தது. அக்காரணம்பற்றி அவ்வூர் **பொன் விளைந்த களத்தூர்** என்ற" பெயராலும் குறிப்பிடப் பட்டது. பொன்விளைந்த களத்தூர் **பொற்களந்தை** என்றும் மருவலாயிற்று. இத்தகைய பெருமை நிறைந்த ஊரில் நம் புலவர் பெருமான் பிறந்தருளினார். இவருக்கு இவரது பெற்றோர்கள் இட்ட பெயர் இன்னது என்பது நாம் அறிந்து கொள்ள இயலவில்லை. இவரது பெற்றோரே யார் என்று அறிய முடியாத நிலையில், இவரது இயற்பெயர் எப்படி நமக்குத் தெரியவரும்? ஆயினும், இப்புலவர் சிகாமணியார் இளமை முதற் கொண்டே தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்

தேர்ச்சி பெற்று விளங்கினர். அதனால் இவரது புகழ் பல இடங்களிலும் பரவலாயிற்று. அப்புகழ் பரவிய காரணத்தால் இவரைப் புகழேந்தியார் என்றும், புலமை மிகுந்திருந்த காரணத்தால் புகழேந்திப் புலவர் என்றும் கூறத் தொடங்கினர்.

## பாண்டியன் அவைக்களப் புலவராதல்

அறிஞர்களாய் இருப்பவரை அரசர்கள் அழைத்துத் தம் அவையை அலங்கரித்துக் கொள்வதுண்டு. அப்படி அழைத்துப் பெருமை பெற்றவன் சோழர் குலத்துத் தோன்றலாகிய இரண்டாம் குலோத்துங்க மன்னன் என்பவன். அவன் சேக்கிழார் பெருமானைப் பெற்றுச் சிறப்படைந்தான். அவனைப் போலவே பாண்டிய நாட்டு மன்னனாக இருந்த வரகுண பாண்டியன், புகழேந்தியாருடைய கல்விப் புலமையையும், அறிவுத் திறனையும், புகழின் மேம்பாட்டையும் அறிந்து புகழேந்தியாரை அழைத்துத் தன் அவையில் புலவர் திலகராக இருக்க அமைத்துக் கொண்டனன். புகழேந்திப் புலவரும், அரசன் மகிழும் வண்ணம் கவி பல புனைந்தும் அரிய சொற்பொழிவுகளைச் செய்தும் வரலானார். இதனால் மன்னவன் வரகுண பாண்டியனுக்குப் புலவரிடத்தில் பெரு மதிப்பு உண்டாயது. ஆகவே, பாண்டிய மன்னன் புலவரைத் தன் கண்போல் கருதிப் போற்றி வந்தான்.

வரகுண பாண்டியனுக்கு ஒரு மகள் உண்டு. அவள் அழகில் இரதியையும் வென்றவள். அவ் [illegible] கல்வி அறிவும் அமையப்பெறின், பாவில் [illegible] கலந்தாற்போல் இனிமையாக இருக்கும் என்று [illegible] அம்மகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கு ஏற்பாடு

செய்யலானன். அதன் பொருட்டு ஆசிரியர்களை வெளியில் எங்கும் தேடாமல், தன் அருகே அவைக் களப் புலவராக இருக்கும் புகழேந்தியாரையே, தன் மகளுக்குக் கல்வி புகட்ட ஏற்பாடு செய்யலானன். புகழேந்தியாரும் அரசனது மகளுக்குக் கல்வியைக் கற்பித்து வரலானர். இலக்கண இலக்கியங்களையும் போதித்து வந்தார். அம்மாதராளும் ஆசிரியர்க்குக் கீழ்ப்படிந்து, ஆசிரியர் கற்பித்துக் கொடுத்துவந்ததை மறவாமல் கற்றுப் புலமையில் சிறந்தவளாய் விளங்கினள். இதைக் கண்டு அரசமகளின் பெற்றோரும், மற்ரோரும் களிப்புற்றுப் புகழேந்தியாரின் போதிக்கும் வன்மையினைப் புகழ்ந்து பேசலாயினர். இப்படிப் புலவர் புகழேந்தியார் மதுரை மன்னனும், மற்றும் உள்ளாரும் போற்றவும் பாராட்டவும் மன்னன் சபையில் மாண்புடன் காலத்தைக் கழித்து வரலாயினர்.

## புலவர் சோழ நாடு புக நேர்ந்தமை

இப்படி இருக்கையில் சோழநாட்டில் குமாரகுலோத்துங்க சோழன் அவைக்களத்தை அலங்கரித்து வந்த புலவர் ஒட்டக் கூத்தர் ஆவர். அவர் குலோத்துங்க மன்னது ஆசிரியர். அம்மன்னனுக்கு மணம் முடித்து வைக்கும் பொறுப்பில் ஒட்டக் கூத்தர் ஈடுபட்டார். அதன் பொருட்டு மதுரைக்கு வந்தார். வரகுண பாண்டியன் மகளைச் சோழகுலத் திலகனை குமார குலோத்துங்க சோழனுக்கு மணம் செய்து கொடுக்குமாறு கேட்க, மதுரைவந்து சேர்ந்தார். பாண்டியமன்னன் "சோழர்கள் பாண்டியன் மகளை மணக்கத் அவ்வளவு தகுதியுடைய வர்களோ?" என்று கேட்க ஒட்டக் கூத்தர் சோழர்கள் தகுதியுடையவர்கள் என்று கூறியதோடு நில்லாமல்,

சோழர்கள் பல காரணங்களால், பாண்டியர்களைவிடச் சிறந்தவர்கள் என்று கூறினர். புகழேந்தியார், ஒட்டக் கூத்தர் கூறிய கருத்தைக்கொண்டே பாண்டியர்களே சோழர்களைவிடத் தலைசிறந்தவர்கள் என்பதைக் காரணத்தோடு கூறிப் பாண்டியர் பெருமைகளை எடுத்துக் காட்டினார். இப்படி இருவரும் வாய்ப்போர் செய்வதைக் கண்ட வரகுண பாண்டியன் இருவரையும் கையமர்த்திச் சமாதானம் செய்து தன் மகளைச் சோழனுக்கு மணம் செய்து கொடுப்பதாக ஒட்டக் கூத்தரிடம் கூற, அவரும் திரும்பிச் சென்று தன் மாணவ மன்னனிடம் பாண்டியன் தன் திருமகளை மணம் செய்து கொடுக்க இசைந்ததை அறிவித்தனர். குலோத்துங்கன் மனம் மகிழ்ந்து, பின் நல்லதொரு நாளில் மதுரை நோக்கிப் புறப்பட்டுத் திருமணத்தினை இனிதில் முடித்துக் கொண்டனன். பின்பு சோழ மன்னன் தன் மனையாளாகிய பாண்டியன் மகளை அழைத்துக்கொண்டு தன் நாடு செல்லப் புறப்படுகையில், பாண்டிய மன்னன், தன் மகளுக்குத் துணையாக இருக்கவேண்டிப் புகழேந்தியாரை அவளுடன் அனுப்பி வைத்தனன்.

## புலவர் சிறைப்படல்

குலோத்துங்க சோழ மகாராசன் திருமகளை மணந்து செல்லும் திருமால் போலப் பல வகை ஸ்ரீதனப் பொருள்களையும் பெற்றுத் தன்னூடு புகுந்தான். ஒட்டக் கூத்தருக்குப் புகழேந்தியாரும் சோழநாடு வந்தது பற்றி உள்ளுக்குள் மகிழ்ச்சியாகும். அம்மகிழ்ச்சிக்குக் காரணம் அப்புலவரை எப்படியேனும் அரசனுடைய உத்தரவு பெற்றுத் துன்புறும்படி செய்யலாம் என்பதற்கென்க. எனவே, ஒட்டக்கூத்தர் தம் மாணவ மன்னனிடம் "அரச, இப்போது இங்கு வந்துள்ள புக

ழேந்தியாரைச் சாதாரணர் என்று எண்ணிவிடாதே. உன் பலத்தையும் உன் நாட்டையும் உன்னையும் குறித்து யான் சிறப்பித்துப் பாண்டியனிடம் கூறும் போது, அத்துணைக்கும் இழிவு கற்பித்துப் பாண்டியனையும் பாண்டிய நாட்டையும், பாண்டியர் குடியையும் சிறப்பித்துக் கூறி என்னை அந்தச் சமயம் அவமானப்படுத்தினர்'' என்று கூறிக் குலோத்துங்கனுக்குக் கோபம் வருமாறு செய்தார். மன்னன் தன் ஆசிரியர் பெருந்தகையார்க்கு வந்த அவமானத்தைக் கேட்டு மனம் நொந்து "பெரியீர், இப்போது புகழேந்தியாரை என்ன செய்யக் கூறுகிறீர்?'' என்று கேட்க, ஒட்டக்கூத்தர் "அவரைச் சிறையில் அடைத்து விடுவது தக்கது" என்று சொல்ல, அரசனும் புலவரைச் சிறையில் அடைத்தான்.

## சிறையில் செய்த சீரிய செயல்கள்

புகழேந்தியார் சிறைப்பட்ட இடத்திற்கு அருகே நன்னீர் குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தில் நீர் கொண்டு செல்ல மாதர்கள் செல்வர். அவர்கள் போவதையும் வருவதையும் புலவர் சிறைக் கோட்டத்தின் சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருப்பர். புகழேந்தியார்க்குக் காவலர்கள் சிறிது உணவே கொடுத்து வந்தனர். அவ்வுணவு புலவர்க்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, போதுமான உணவு பெறுதற்கு ஒரு யோசனை செய்தார். நீர் எடுக்கச் செல்லும் பெண்கள் ஓய்ந்த நேரங்களில் படித்து இன்புறத் தக்க பாரதக் கதைகளை எளிய பாடல் மூலம் பாடி அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் உதவியைப் பெறத் தீர்மானித்தார். அவ்வாறே **பவளக்கொடி மாலை, அல்லியரசாணி மாலை, ஏணி ஏற்றம், புலந்தரன் களவு**



புகழேந்தியார் மாதர்களிடமிருந்து உதவி பெறுதல்

முதலான நங்கைப் பாடல்களைப்பாடி அந் நங்கையர் களுக்குக் கொடுத்து வந்தனர். அவற்றைப் பெற்ற பெண்டிர் மனம் மகிழ்ந்து புலவர்க்கு வேண்டிய உணவு, பட்சணம், பழம் முதலியவற்றைக் கொடுத்து வந்தனர். அவற்றை உண்டு புகழேந்தியார் இன்புற்று வந்தார். கற்றவர் எங்கு இருந்தால் என்ன? அவர்கட்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்புத்தானே. ஆகவே, புகழேந்தியார் சிறையில் இருந்தாலும் சிறப்பாகவே இருந்தனர். புகழேந்தியார் உண்டு மிகுந்ததைக் காவலாளர்கள் உண்டு மகிழ்ந்து வந்ததனால் மாதர்கள் புலவருக்குக் கொடுக்கும் உணவைத் தடை செய்திலர். அரசனுக்கும் இந்தச் செய்தியினை அறிவித்திலர்.

ஒரு நாள் குலோத்துங்க மன்னனும், ஒட்டக் கூத்தரும் புகழேந்தியார் இருந்த சிறைக் கோட்டத்தின் அருகே சென்றபோது புகழேந்தியார் சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தார்.

மன்னன் தன்னுடன் இருந்த புலவரைப் பார்த்து "உள்ளே இருக்கும் அவரும் ஒரு சிறந்த புலவர் அல்லவா?" என்று வினவினன். ஒட்டக் கூத்தர் உடனே, அப்புலவரைவிடத் தாமே மேம்பட்டவர் என்பதை விளக்க "மன்னா, புலிக்கு முன் மான் நிற்குமோ? நெருப்புக்கு முன் வற்றிய காடு இருக்கவல்லதோ? சுறாமீனுக்கு முன் மீன் நிற்க வல்லதோ? சூரியன் முன் பனி நிற்குமோ?" என்னும் கருத்தில் பாடலைப் பாடினர். இதைக் கேட்ட புகழேந்தியார் சும்மா இராமல், "மன்னா, இப்பாடலை ஒட்டிப்பாடவோ? அன்றி வெட்டிப் பாடவோ?" என்று கேட்க, சோழ மன்னன் ஒட்டக் கூத்தருக்கு இழிவு வராதிருக்க வேண்டும் என்பதற்காகவும், அவர் தம் ஆசிரியர் ஆதலின் தன்

அன்பினைக் காட்டுவதற்காகவும் "புலவரே, ஓட்டியே பாடுக" என்றனன். புகழேந்தியார், ஓட்டக் கூத்தர் பாடலையே கொண்டு, "நானே புலி, சுறு, சூரியன் முதலியவற்றிற்கு ஒப்பானவன். ஓட்டக் கூத்தரோ மான், வற்றிய காடு, மீன், பனி ஆகிய இவற்றிற்குச் சமமானவர்" என்று கூறினர். இப்படி விடை கொடுப்பார் என்று ஓட்டக் கூத்தரும் மன்னனும் எதிர்பார்க்க வில்லை. ஓட்டக் கூத்தருக்கு மேலும் புகழேந்தியார் மீது கோபமும் பொறாமையும் மிகுந்தன. இதனால் புக ழேந்தியார் சிறைவாசமும் நீடித்தது.

## கூத்தர் செருக்கு அடக்கப்படுதல்

அரைகுறையாகப் படித்த புலவர்கள் அரசர் களின் அவைக்களம் புகுந்து பாடல்களைப் பாடிப் பரிசு பெற்றுப் போவது அந்த நாள் வழக்கம். அவ் வழக்கப்படி ஓட்டக் கூத்தர் காலத்தில் சில புலவர்கள் குலோத்துங்கனைப் பாடிப் பரிசு பெற வருவர். அவர் களை ஓட்டக் கூத்தர் சில கேள்விகளைக் கேட்பார். அக் கேள்விகளுக்குத் தகுந்த விடைகளை அவர்கள் கூறு ராயின் அவர்களைச் சிறைப்படுத்தி நவராத்திரியின் போது சிறைப்பட்டவர்களைக் காளி கோவில் முன் நிறுத்தி, இருவர் இருவராக அவர்களின் மயிர் முடி களைப் பிணைத்துத் தலைகளை இறங்க வைத்து வெட்டுவது வழக்கம். இங்ஙனம் அறிவால் குறையுடைய புலவர் களை முன் காலத்தில் தண்டித்த அரசர்களும் புலவர் களும் இருந்திருக்கின்றனர். அதிவீரராம பாண்டியர் கல்வி குறைந்தவர்களைத் தலையில் குட்டி அடக்கி வந்தனர் என்றும், தம்மோடு வாதில் தோற்றவர்களின் காதுகளை வில்லிபுத்தூர் ஆழ்வார் அறுத்து வந்தனர் என்றும், ஓட்டக் கூத்தர் குறையுடைய புலவர்களின்

தலைகளை இறங்கப் போட்டு வெட்டி வந்தனர் என்றும் ஒரு பாடலே நமக்கு அறிவிக்கின்றது. அப்படிப் பட்ட பெரும் புலவர்கள் பிற்பட்ட காலங்களில் இல்லாமை யால்தான், எல்லோரும் கவிகளாகப் புலவர்களாக வெளிவரத் தொடங்கினர் என்றும் அப்பாடலே குறிப்பிடுகிறது. அப்பாடலே,

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை.
குறும்பியள வாய்க்காதைக் குடைந்து தோண்டி,
எட்டினபட் டறுப்பதற்கோ வில்லி யில்லை.
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு,
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை.
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு.
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே.

என்பது.

இப் பாடலில் குறிப்பிட்டபடி ஒட்டக் கூத்தர் புலவர்களை அவமானப்படுத்தி வந்தார். அப்படி அவமானப்பட்ட சிற்றறிவுடைய புலவர்கள் சிலர் புகழேந்தியார் அடைபட்டுக் கிடந்த சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர். புகழேந்தியார் தம் பொழுதை வீணாக் காமல் அவர்கட்குத் தமிழ் அறிவைப் புகட்டி வந்தார். தமிழில் உள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் இலக்கியங்களையும் கற்பித்துக்கொடுத்தார். அவர்களும் ஊக்கமாகக் கற்றுத் தேர்ந்து புலமை மிகுந்தவர்களாய் விளங்கினர். தாமாகவே கவிபாடும் வல்லமையும், சமயத்திற் கேற்ற வாறு கற்பனையுடன் பாடும் தன்மையும் பெற்றனர். அப்படிப் புலமை பெற்றவர்கள் குயவர் குலத்தவரும்,

நாவித மரபினரும், இரும்புக்கொல்லர் இனத்தவரும், தச்சர் மரபினரும், ஆடைவெளுக்கும் வண்ணார் குலத்தவரும் வேளாளர் வமிசத்தினரும் ஆவர்.

நவராத்திரி பண்டிகையும் வந்துற்றது. அரசனும் அமைச்சரும், சேனைத்தலைவரும், மற்றுமுள்ள சிப்பந்திகளும் தேவி சிறப்புற வீற்றிருந்த திருவிழா மண்டபத்தில் வந்து அமர்ந்திருந்தனர். கூத்தரும் குதூகலத்துடன் அங்கு வந்து சேர்ந்தார். அவருக்கென அமைக்கப்பட்ட ஆதனத்தில் வந்து அமர்ந்தார். உடனே ஏவலாளர்களை அனுப்பிப் புகழேந்தியாரைத் தவிர்த்து மற்றைய சிற்றறிவுடைய புலவர்களை அழைத்து வருமாறு கட்டளையிட்டனர். அவர்களும் சென்று சிறையில் அடைபட்டுக்கிடந்த குலாலன், நாவிதன், கொல்லன், தச்சன், வண்ணான், வேளாளன் ஆகிய அறுவர்களையும் அழைத்து வந்தனர். இவ்வறுவரும் கல்வியில் தலைசிறந்து விளங்கியதால், சிறிதும் அச்சம் கொள்ளாதவராயப் பெருமித நடையுடன் விழா மண்டபத்தைக் குறுகினார்கள்.

ஒட்டக் கூத்தர் தம்முன் நிறுத்தப்பட்டவர்கள் நிரம்பிய புலமை பெற்றவர்கள் என்பதைச் சிறிதும் அறியார். அவர்களை முன்பு அறிந்த குறையறிவுடைய புலவர்களென்றே நினைத்து விட்டனர். ஆகவே, குயவனாகிய புலவனைப் பார்த்து, முன்னேவந்து நிற்குமாறு ஏவினார். அவனும் ஒட்டக் கூத்தருக்கு வணக்கம் செலுத்தாமல் செருக்குடன் நின்றனன். இதைக் கண்ட கூத்தர்,

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந் ததிர்த்தவன் ஆரடா?"

என்று அதட்டிக் கேட்டனர். இதில் கூத்தர் தம்மை

யானையாக உருவகப்படுத்திக் குறிப்பிட்டதால் அதற்கு ஏற்ப விடை தரவேண்டும் என்று எண்ணிய குயவன், தான் குயவன் என்ற பொருளும், யானையை அடக்கும் அங்குசம் போன்றவன் என்னும் பொருளும் தோன்ற,

"கூனை யும்குட மும்குண்டு சட்டியும்
பானை யும்செய்யும் **அங்குசப் பயல்யான்**"

என்று பதில் அளித்தான். கூத்தர் கிடுகிடுத்துப் போனார்; வெட்கமும் கொண்டார். என்றாலும், அவற்றை வெளிக்காட்டாமல், மேலும் தம் பெருமிதம் தோன்ற, அடுத்து நின்ற அம்பட்டனைப் பார்த்தார். அவனுடைய கண்களில் ஒன்று ஊனமுடையதாய் இருந்தது. அத னால் அவனைப் பார்த்து, அவன் ஏதோ தன்னைப் பார்த்து நடுங்குவதாகக் கூத்தரே எண்ணிக் கொண்டு, "கண் பொட்டையானவனே, கொக்கு, இராஜாளிப் பறவை யைக் கண்டு நடுங்குவது போல நடுங்கி நிற்கின்றாயே! "நீ யார் கூறு?" என்று கேட்டனர். அவனும் சிறிதும் இந்த மிரட்டல் மொழிக்கு அஞ்சாதவனாய்,

"கண்பொட்டை யாயினும் அம்பட்டன் நான்
கவிவாணர் முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே"

என்று எதிர்மொழி கூறினான்.

இவ்வாறு இரண்டு முறை, இரண்டு விடைகளும கம்பீரமாக வருதலைக் கண்ட கூத்தர் இனி, "இவர்களைச் செய்யுள் வடிவில் வினவல் ஆகாது. உரை நடையாகவே கேள்விகளைக் கேட்டல் வேண்டும்" என்று எண்ணி, மூன்றாவதாகக் கொல்லனை அழைத்து, "நீ யாவன்?" என்று கேட்டனர். ஆனால், அவனும் தன் ஆற்றல் இவ் வளவு என்பதை அறிவிக்க, கூத்தர் உரை நடையில்

கேட்டலும், தான் செய்யுள் வடிவிலேயே கீழ்வரும் பொருளில் "யான் மரபில் கொல்லன்; என் கவியை எவரேனும் குறை கூறுவராயின் அவர்கள் பல்லைப் பிடுங்கிடுவேன். பகைவர் முன், இரவும் பகலும், கவியாகிய இரும்பாணியைக்கொண்டு அடிப்பேன்" என்று பதில் அளித்தனன். இந்தப் பதிலையும் கேட்ட ஒட்டக் கூத்தர் பின் தச்சனைக் கூப்பிட்டு, அவனையும் விசாரித்தார். அவனும் பாடலிலேயே, கீழ்க்கண்ட பொருளில் "ஐயா, யான் என்னை எதிர்த்தவர் வாயைக் கிழித்துக் கவியாகிய ஆப்பைக் கடாவுவன்" என்று கூறினன். அதன் பின் புலவர் வண்ணானைக் கூப்பிட்டு "நீ யாவன்?" என்று வினவ, அவன் "கூத்தரே, யான் உம் போன்ற புலவர்களின் நூலில் காணப்படும் குற்றங்களாகிய அழுக்கைப் போக்கித் தூய்மை யாக்கும் வண்ணாரக் குலத்தவன்" என்று விடை இறுத்தான். "சரி; இறுதியாக வுள்ளவன் என்ன பதில் கூறுகின்றான்? பார்ப்போம்" என்று வேளாள மரபினனைப் பார்த்து, "நீயும் புலவன் தானோ? ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் சிறந்து விளங்கும் என் முன் நீயும் புலவன் என்று கூற உள்ளம் துணியுமா?" என்று தம்மை அவயத்தார் முன் சிறப்பித்துப் பேசி வேளாளனை வினவினர். இப்படிப் பேசினால் வேளாளன் பயந்து தனக்கு முன் பதில்களைக் கூறியவர்களைப் போலத் துட்டத் தனமாக விடைகளைக் கூறாமல், தனக்கு அடங்கி ஒடுங்கிப் பதில் அளிப்பான் என்ற எண்ணத்தோடு இவ்வாறு வினவினர். ஒட்டக் கூத்தர் எண்ணியது போலவே வேளாளன் அடக்க ஒடுக்கமாகவே விடை அளித்தனன். ஆனால், அவன் விடையில் உள்ளூரச் சிறந்த பொருள் நிரம்பியிருந்தது; ஒட்டக் கூத்தர் கல்விச் செருக்கை

அடக்கக்கூடியதாகவும் இருந்தது. அதாவது, "கவிச் சக்ரவர்த்தி என்னும் பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தரே, கேளும்: பேர் அரசர்களைக் கண்டு சிற்றரசர்கள் நாட்டில் வாழாமல் கடலில் சென்று ஒளிந்து கொண்டனர்? தாமரைமலர் தன் பக்கலில் மலர்வதனால், நாம் மலர்தல் கூடாது என்று கொட்டி மலர் மலராமல் இருந்ததோ? ஆதலின், உன் கவியைக் கண்டு எம் போன்ற கவிகள் ஒளிந்து வாழ்வரோ? ஒருக்காலும் வாழார்" என்ற பொருளில் பாவடிவில் விடை கூறினான். கூத்தர் ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த வருடம் அவரது விரதமாகிய காளிமுன் கல்வியறிவற்ற புலவர்களை வெட்டும் செயலை நிகழ்த்த முடியவில்லை. தம் செருக்கு அடக்கப்பட்டதை அறிந்து, அப்புலவர்கட்குத் தகுந்த சன்மானங்களைக் கொடுத்து அனுப்பினார். அது முதல் இத்தகைய செயலை நிறுத்திவிட்டார். இவ்வளவுக்கும் காரணம் அந்தப் புகழேந்தியார்தாம் என்று அறிந்து, அவர் மீது தணியாக் கோபம் கொண்டு அவரைச் சிறை நீக்கத்திற்கான வழிகளைக் காணாது இருந்தார்.

## புலவர் சிறை நீக்கம்

புகழேந்தியார் சிறைப்பட்டிருந்த செய்தி பாண்டியன் மகளான குலோத்துங்கன் மனைவியாருக்குத் தெரியாது. ஆனால், "பல நாள் திருடு ஒரு நாளைக்கு வெளியாகும்" என்பது ஒரு பழமொழியல்லவா? அரசமாதேவிக்கு எப்படியோ தம் அருமை ஆசிரியராகிய புலவர் பெருந்தகையார் சிறைப்பட்ட செய்தி தெரிய வந்தது. அது குறித்துத் தேவியார் மிகவும் வருந்தினார். "தம்முடன் வந்ததால் அல்லவோ இந்தத் துன்பம் அனுபவிக்கக் கவிஞர் பெருமானுக்கு நேர்ந்தது?" என்று எண்ணித் துன்புற்றாள். இனியும் நாம் சும்மா

இருப்பது அடாது என்று தீர்மானித்தவளாய், "தன் கணவன் அந்தப்புறத்தில் தன் அறைக்கு வரும்போது, அவரை உள்ளே வர ஒட்டாமல் செய்து, பின்பு நிகழ்வனவற்றைக் காண்போம்" என்று திடம் செய்து கொண்டு தன் அறையின் கதவை நன்கு தாளிட்டுக் கொண்டே உள்ளே இருந்தாள்.

குமார குலோத்துங்கன் தன் அலுவல்களை முடித்துக்கொண்டு மனையாளோடு இன்னுரைகள் பல பேசி இன்புறலாம் என்ற கருத்துடன் வந்தனன். வந்தபோது, தன் மனையாள் அறைக் கதவு என்றும் இல்லாமல் அன்று தாளிடப்பட்டிருந்ததைக் கண்டு, தட்டித் தட்டிக் கூப்பிட்டுப் பார்த்தான். தேவி சிறிதும் மனம் இரங்காமல்-கதவைத் திறக்காமல் உள்ளேயே இருந்தனள். அந்தச் சமயம் அரசியின் தோழி, மன்னனை வணங்கி, "மன்னர் பெருமானே, இன்று தேவி ஏதோ மன வேதனையோடு அறையில் தாளிட்டுப் படுத்துக்கொண்டிருக்கிறாள். யார் வரினும் தன்னை எழுப்ப வேண்டாவென்று எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கின்றாள். இதுவே நாங்கள் அறிந்த செய்தி" என்றனள்.

அக்காலத்தில் அரசனுக்கும் அவன் தேவிக்கும் ஏதேனும் சிறு சச்சரவு ஏற்பட்டால், அதைப் புலவர்கள் இடைநின்று சமாதானம் செய்துவைப்பது மரபு. அதன்படி தனக்கும் தன் தேவிக்கும் ஏற்பட்ட ஊடலைத் தீர்த்து வைக்கக் குமாரகுலோத்துங்கன் ஒட்டக்கூத்தர் உதவியை நாடினான். தானும் புலவருமாகத் தன் தேவியின் அறையின் கதவருகே வந்து நின்றனன். அப்போது ஒட்டக்கூத்தர், "இலக்குமி போன்ற பேரழகுவாய்ந்த மாதரசி, நான் உன்னைக் கதவு திறவாய் என்று கேட்கவும் வேண்டுமோ? சூரியன் வருகை கண்

டால் தாமரை தானே மலர்ந்து வரவேற்பது போன்று, சூரியகுலதிலகனாகிய குலோத்துங்கன் நின் அறையின் முன் வந்து நின்றால், உன் கரமாகிய தாமரை தானே திறக்கும் அல்லவோ ?" என்னும் கருத்தமைத்துப் பாட்டுப் பாடினார். இது ஒட்டக் கூத்தரது பாடல் என்று அறிந்துகொண்ட தேவி "ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று கூறிக் கதவை இரட்டைத்தாழ் இட்டு நன்கு அழுத்தி அடைத்து விட்டனள்.

குலோத்துங்கனுக்கு அப்போதுதான் தன்தேவிக்கு ஒட்டக் கூத்தர்மீது வெறுப்பு உண்டு போலும் என்பதை உணர்ந்தான்; இவ்வெறுப்புக்குக் காரணம் தன்னுடன் வந்த புலவர் திலகரை இவர் சொல் கேட்டுச் சிறைப்படுத்தியதனால் போலும் என்பதையும் யூகித்து அறிந்துகொண்டனன். உடனே ஏவலாளர்களை அனுப்பிப் புகழேந்தியாரைச் சிறை நீக்கம் செய்து அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தான். அவ்வாறே சிறை நீக்கப்பட்டுப் புகழேந்தியாரும் வந்து சேர்ந்தார். அரசன் புலவர் திலகரைக்கண்டு வணங்கி, "ஐய ! புலவர் ஏறே, உம் பெருமையறியாது யான் இதுவரை உம்மைச் சிறையில் வைத்ததும் பெருங் குற்றமே. இதுபற்றி என் குற்றத்தைப் பொறுத்து என்னையும் மன்னிக்க வேண்டும்" என்று வணங்கிக் கேட்டுக்கொண்டனன். புகழேந்தியார் தம்மைப் பேர் அரசன் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றான் என்பதற்குத் தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ளாமல் "மன்ன, நான் சிறைப்படவேண்டும் என்று எனக்குப் பழைய வினை இருக்குமானால், அதனின்று தப்பமுடியுமா ? இது பற்றி யானோ, அன்றி நீயோ, வருந்துவதில் பயன் யாது?"

என்று கூறினர். குமார குலோத்துங்கன் புகழேந்தியாரிடம் தன்மனைவிக்குத் தன்பால் ஏற்பட்டுள்ள பிணக்கத்தைப்பற்றிக் கூறி அவ்வூடலைத் தணிக்குமாறு அவரை வேண்டினன். புலவர் அவன் விருப்பத்தை நிறைவேற்றிவைக்க, தேவி இருந்த அறைக்கு அருகு சென்று தாளிடப்பட்ட கதவின்முன் நின்று, "அன்னம் போன்ற அழகும் குணமும் உடைய அம்மையே, உன் கணவன் வந்து வாயிற்கடை நின்றுள்ளான். உனக்கு எவ்வளவு கோபம் இருப்பினும், அதனைத் தணித்துப் பொறுப்பாயாக. பொறுப்பது உன் குலத்தின் இயல் பல்லவோ? பிழைகளைப் பொறுப்பது மாதர்கள் கடமையும் அல்லவோ?" என்னும் கருத்தமைத்துப் பாடலைப் பாட, உடனே தேவி கதவைத் திறந்தாள். மன்னனும் மகிழ்ந்தான். புகழேந்தியார் சோழன் அவைக்களப் புலவருள் ஒருவராய்த் திகழ்ந்தார். இருந்தாலும் தமக்குச் சோழ நாட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஆகவே, சோழ மன்னனிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினர்.

## நளவெண்பா பாடப்படுதல்

புகழேந்தியார் **சந்திரன் சுவர்க்கி** என்னும் வள்ளலைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தார். அவன் மள்ளுவ நாட்டை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன். அந்நாட்டின் தலைநகரம் முரணை என்பது. அங்குச் செல்வது எனத் தீர்மானித்தார். அவ்வறே சந்திரன் சுவர்க்கியைப் புகழேந்தியார் அடைய, அவன் புலவர் பெருமானுக்கு நல்வரவு கூறித் தன் அவையில் சமத்தானக் கவியாக அவரை அமர்த்திக் கொண்டான். சந்திரன் சுவர்க்கி புகழேந்தியாரைப் பற்றி நன்கு கேட்டு அறிந்திருந்தான். அத்தகையவர் தன்னை நாடிவந்தது 'கும்பிடப் போன

தெய்வம் குறுக்கே வந்ததுபோல' அவனுக்கு இருந்தது. புகழேந்தியார் மள்ளுவ நாட்டில் மகிழ்வோடு வாழ்ந்து வரலானார்.

சந்திரன் சுவர்க்கி புகழேந்திப் புலவரைக் கொண்டு ஒரு சிறந்த நூல் பாடச்செய்யவேண்டுமென்று எண்ணினான். காற்றுள்ளபோதே அன்றோ தூற்றிக் கொள்ள வேண்டும்? ஆகவே, மெல்லத் தன் கருத்தைப் புகழேந்தியாருக்கு மள்ளுவ நாட்டு மன்னன் அறிவிக்க, புலவரும் அதற்கு உடன்பட்டு, பாரதத்திலுள்ள நளனது கதையினை வெண்பாவாகப் பாடி முடித்தனர்.

நளவெண்பா சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கும் காண்டம், என்னும் மூன்று பிரிவுகளைப் பெற்று நானூற்றுச் சில்லறை வெண்பாக்களுடன் விளங்கியது.

செய்யுட்கள் யாவுமே சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிக் கேட்போர் வியக்கும் வண்ணம் அமைந்திருந்தன. அந்நூல் ஒன்பான் சுவையும் ஒருங்கே அமையப் பெற்று இருந்தது. அதனைத் தன் அவைக்களத்தில் அரங்கேற்றுமாறு செய்து தான் கேட்டு இன்புற்றதோடு நில்லாமல், மற்றும் உள்ளாரையும் இன்புறச் செய்தான், சந்திரன் சுவர்க்கி. புகழேந்தியார் தம்மை ஆதரித்து உண்டியும் உறையுளும், உடையும் தந்து நளவெண்பா என்னும் நூலையும் பாடுமாறு செய்த சந்திரன் சுவர்க்கியின் பெயரும் தம் நூலில் அமையத் தக்க இடங்களில் அவனது கொடைக் குணத்தை நன்கு புலப்படுத்தினார். நளனுக்குச் சனி தொடர்ந்ததைக் கூறும்போது, மள்ளுவ நாட்டுக் கோமானுடைய சந்திரன் சுவர்க்கியை நாடாதவர்கட்கு வறுமைப் பிணி வந்து அணுகுமோ அது போல் நளனைச்

சனி வந்து அணுகியது என்று கூறுவாராயின், இதை விட வேறு எந்த முறையில் சந்திரன் சுவர்க்கியின் கொடைக் குணத்தைச் சிறப்பித்துக் கூற முடியும்? அப்படியே, கலி நளனைவிட்டு நீங்கியதைக் குறிப்பிட வந்த புகழேந்தியார், சந்திரன் சுவர்க்கியைக் கொண்டாடும்பாவலன், பசி நீங்கியது போலச் சனி நீங்கினான் என்றும் குறிப்பிட்டார். இதுவன்றோ புலவர்கள்பால் இருந்த செய்ந்நன்றி மறவாத பண்புக்கு எடுத்துக் காட்டு! சந்திரன் சுவர்க்கியும், தன் வேண்டுகோளுக்கு இணங்கிப் புலவர் நூலைப் பாடினமைக்காகப் பரிசில் பல தந்து பாராட்டிப் பெருமைப்படுத்தினான். புகழேந்தியார் சிறப்புடன் அவனிடமே அமர்ந்திருந்தார்.

## சோழன் முன் நளவெண்பா அரங்கேற்றம்

குமார குலோதுங்கன் காதிற்கும் புகழேந்திப் புலவர் நளவெண்பா பாடி அரங்கேற்றிய செய்தி எட்டியது. அவரைத் தன் அவைக்கு வரவழைத்து அந்நூலை அங்கும் அரங்கேற்றம் செய்விக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தான். ஆட்களை விடுத்துப் புலவரை அழைத்து வருமாறு ஏவினான். ஏவலாளர்களும் மன்னுவ நாடு சென்று மன்னன் கட்டளையைக் கூறப் புலவர் சந்திரன் சுவர்க்கியிடம் விடைபெற்றுச் சோழன் அவைக்களம் புகுந்தார். குலோத்துங்கன் புலவரை நல்வரவு கூறி வரவேற்று, "அன்புமிக்க அருந்தமிழ்ப் புலவரே, நீர் அருளிச் செய்த நளவெண்பாவை எம் அவையில் பிரசங்கம் செய்து பொருள் விரிக்க வேண்டும்" என்று வேண்டினான். புகழேந்தியாரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

நல்லதொரு நாளில் அரசனும் அமைச்சரும், சேனைத்தலைவரும், ஊர்ப் பொதுமக்களும், ஒட்டக்கூத்

தரும் மண்டபத்தில் கூடினர். புகழேந்தியார், தாம் பாடிய நூலைப் படித்துப் பொருள் விரித்துக் கூறிக் கொண்டு வந்தனர். நூலின் பொருட் செறிவைக் கேட்டு வந்த அவையத்தார் அதனை நன்கு பாராட்டிப் பேசினர். ஆனால், ஒட்டக் கூத்தர் மட்டும் இடை இடையே சில தடைகளை எழுப்பி வந்தனர். அவற்றிற் கெல்லாம் புகழேந்தியார் தகுந்த சமாதானம் சொல்லி நூலை அரசரும், மற்றும் உள்ளவரும் களிக்கும் வண்ணம் அரங்கேற்றி முடித்தனர். சபை கலைந்தது. எல்லோரும் தம் தம் இல்லம் புகுந்தனர். ஒட்டக் கூத்தரும் தம் வீடு நோக்கிப் புறப்படலானார்.

புகழேந்திப் புலவர் ஒட்டக் கூத்தர் எப்போது தம்மை வெறுப்பது குறித்துத் தாமும் அவர்மீது வெறுப்புக் கொண்டார். அரங்கேற்றம் நடந்தபோது இடையிடையே சில கேள்விகளைக் கேட்டது தமக்குப் பிடிக்கவில்லை. அதனால், அவரைக் கொன்றுவிடுவது என்று முடிவு கட்டிக்கொண்டு, ஒரு பெரிய கல்லை மறைத்து எடுத்துக் கொண்டு ஒட்டக் கூத்தர் இல்லம் புகுந்து மறைந்து நின்று, ஒட்டக் கூத்தர் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். ஒட்டக் கூத்தர் மிகுந்த களைப்புடன் இல்லம் புகுந்தார். அவர் தம் மனைவியார் அவரது களைப்பு நீங்க, 'பாலை கொண்டு வந்து தரட்டுமா?" என்று வேண்டினர். அப்போது ஒட்டக் கூத்தர் "புகழேந்தியார் செய்த நளவெண்பாவில் உள்ள பாடல்களின் சாற்றைப் பிழிந்து எனக்குக் கொடுப்பினும் வேண்டா" என்று கூறினார். அந்த வார்த்தைகளைக் கேட்ட புகழேந்தியார், மறைவிடத்தில் இருந்து வெளிப்பட்டு, "அன்பரே, என்மீது உள்ளூர நீர் இவ்வளவு பற்றுக் கொண்டுள்ளீர் என்பதை உண

ராமல், உம்மை வீணே கொன்றுவிட எண்ணிக் கல்லும் கையுமாக வந்தேனே! என்னைப்போன்ற அவசரக்காரன் எவனேனும் இருப்பானோ? என்னை மன்னியும்" என்று கூறி, ஒட்டக் கூத்தரைத் தழுவினார். ஒட்டக் கூத்தரும் "புகழேந்தியாரே, யான் உம்மைப் பல தொந்தரவுகளுக்கு ஆளாக்கிவிட்டேன். அவற்றை நீரும் பொருட்படுத்தலாகாது" என்று வேண்ட இருவரும் அன்று முதல் அன்பு கலந்த நண்பராய் விளங்கினர். இவர்களின் நட்புரிமையைக் கண்ட குலோத்துங்கனும், அவன் தேவியும் உள்ளம் பூரித்தனர். புகழேந்தியார் சில காலம் சோழ நாட்டில் இருந்துவிட்டுப் பின் பாண்டிய நாடு புகுந்து அங்குச் சில நாள் இருந்து பின் தம் பிறப்பகமாகிய பொற்களந்தையை அடைந்து இன்புற்று வாழ்ந்து வரலானார்.

## புலவர் காலமும் சமயமும்

புகழேந்தியார் சமயம் வைணவம். அவர் நளனுக்குக் கலி தொடர்ந்தது என்று கூறவந்த இடத்தில், நாராயணன் திரு நாமத்தைச் சொல்லாதவரைத் துன்பம் வந்து அடைவது போல நளனைச் சனியாகிய துன்பம் வந்து தொடர்ந்தது என்றும், அவ்வாறே நளனைப் பிடித்த கலி நீங்கியதைக் குறிப்பிடும்போது, உலகளந்த பெருமாள் திருவடியை அடைந்தவர் அருவினை நீங்குவது போலக் கலியும் நளனைவிட்டு நீங்கியது என்றும் கூறுவதால் புகழேந்தியாருடைய சமயம் வைணவம் என்பது நன்கு புலனாகிறது.

இவருடைய காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டாகும். இவரும் ஒட்டக் கூத்தரது காலத்து இருந்தவராக நாம் இப்போது படித்தோம் அல்லவா?

# வினாக்கள்

பின்வரும் வினாக்களுக்கு இரண்டிரண்டு பக்கங்களில் விடை எழுதுக:

## 1. ஔவையார்

1. ஔவையார் தாம் நீலச்சிற்றாடை பெற்ற போது, அதனை எங்ஙனம் சிறப்பித்துப் பாராட்டினார்?

2. ஔவையாரால் நன்மை அடைந்த மாதர்கள் யாவர்? அவர்கள் எப்படி நன்மை அடைந்தனர்?

3. இடைப்பையன் ஔவையார் மூலமாக எவ்வெவ்வுண்மைகளை வெளிப்படுத்தினான்?

## 2. ஒட்டக் கூத்தர்

1. ஒட்டக் கூத்தர் ஆண்டு பல பெற்று வாழ்ந்தவர் என்பது எவ்வெக்காரணங்களால் புலனாகிறது?

2 ஒட்டக் கூத்தர்க்குரிய பெயர்கள் எவை? அப்பெயர்களை அவர் பெற்றமைக்குரிய காரணங்கள் யாவை?

3. "ஈட்டி எழுபது" எப்போது, ஏன் பாடப்பட்டது?

## 3. சேக்கிழார்

1. சேக்கிழார் எங்ஙனம் சோழன் அவைக்கள அமைச்சரானார்?

2. பெரிய புராணம் எப்போது ஏன் பாடப்பட்டது?

3. அனபாய சோழன் சேக்கிழாரை எவ்வெவ்வாறு சிறப்பித்தனன்?

## 4. கச்சியப்பர்

1. கந்தபுராணம் எம்முறையில் பாடப்பட்டு வெளிவந்தது?

2. கந்தபுராண அரங்கேற்றம் நடந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி யாது?

3. கச்சியப்பர் பெருமை எப்போது வெளிப்பட்டது?

## 5. கம்பர்

1. கம்பர் தம் ராமாயணத்தை எப்படி அரங்கேற்றம் செய்ய முடிந்தது?

2. கம்பர் ஏன் பிரதாபருத்திரனைத் தமக்கு அடைப்பைக்காரனாக இருக்கக் கேட்டுக்கொண்டனர்?

3 கம்பர் சமயத்திற் கேற்பப் பொருள் விளக்க வல்லவர் என்பது எப்படித் தெரிகிறது?

## 6. புகழேந்தியார்

1. புகழேந்தியார் ஏன் சிறைப்பட்டார்?

2. புகழேந்தியார் எங்ஙனம் சிறையினின்று நீங்கினார்?

3. புகழேந்தியாரும் ஒட்டக்கூத்தரும் எதன்பின் மனம் ஒத்த நண்பராயினர்?

# கட்டுரைகள்

கீழ்வரும் தலைப்புக்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் கட்டுரை வரைக

1. ஒளவையாரின் புலமை.
2. ஒளவையார் ஒருவர் அல்லர் பலர்.
3. கூத்தரும் குமார குலோத்துங்கனும்.
4. கூத்தர் பேரும் பெரும்.
5. தொண்டை நாடு சான்றோர் உடைத்து.
6. திருமுறைகளும் சிறப்பியல்புகளும்.
7. காஞ்சியின் சிறப்பும் கச்சியப்பர் பிறப்பும்.
8. கச்சியப்பரும் அவர் வாழ்ந்த காலமும்.
9. கம்பரும் சடையரும்.
10. கம்பரும் ராமாயணமும்.
11. புகழேந்தியார் சிறைவாசம்.
12. புகழேந்தியாரும் நன்றி மறவாமையும்.